இருபதாம் நூற்றாண்டில் ஈழத்துச் சித்த மருத்துவம்

612
சிவச
SL/PR

சித்த மருத்துவ கலாநிதி
சே. சிவசண்முகராஜா M.D.(S)

இருபதாம் நூற்றாண்டில் ஈழத்துச்
சித்த மருத்துவம்

சித்த மருத்துவ கலாநிதி

சே. சிவசண்முகராஜா M.D.(S.)

சித்த மருத்துவ வளர்ச்சிக் கழகம்

கந்தரோடை சுன்னாகம்,

இலங்கை.

2000

பதிப்புத் தரவுகள்

நூற்பெயர்: இருபதாம் நூற்றாண்டில் ஈழத்துச் சித்தமருத்துவம்

நூலாசிரியர்: Dr. சே. சிவசண்முகராஜா M. D. (S)

வெளியீடு: சித்தமருத்துவ வளர்ச்சிக் கழகம்
கந்தரோடை, சுன்னாகம்

அச்சிடுவோர்: பாரதி பதிப்பகம்
430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

பதிப்புரிமை: நூலாசிரியருக்கு

முதற்பதிப்பு: டிசம்பர் 2000

விலை: ரூபா: **120-00**

BIBLIOGRAPHICAL DATA

Tittle of the book:	Irupathaam Nootraandil Elzaththu Siddha Maruththuvam
Author:	Dr. S. Sivashanmugarajah M. D. (S) Kantharodai, Chunnakam.
Publisher:	Siddha Medical Development Society (S. M. D. S.) Kantharodai, Chunnakam.
Printers:	Bharathi Pathippakam 430, K. K. S. Road, Jaffna.
Copy right:	Author
Edition:	First, December, 2000

சமர்ப்பணம்

சென்ற நூற்றாண்டில் ஈழத்துச் சித்த மருத்துவ வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய சித்த மருத்துவர்கள், சித்த மருத்துவ அபிமானிகள் அனைவருக்கும் இந் நூல் சமர்ப்பணம்.

என்னுரை

1997 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 15 ஆம் திகதி இரவு! கொழும்பு சென்றுவிட்டு, திருகோணமலையிலிருந்து கப்பல்மூலம் காங்கேசன்துறை நோக்கி வந்து கொண்டிருந்தோம். அக்கப்பலில் பாரதி பதிப்பக உரிமையாளர் திரு. இ. செங்காரபிள்ளை (சங்கர்) அவர்களும் பிரயாணஞ்செய்து கொண்டிருந்தார். அச்சமயம் அவரது அச்சகத்தில் எனது சுதேச மருத்துவ மூலிகைக் கையகராதி என்னும் நூல் அச்சாகிக் கொண்டிருந்தது. அதுபற்றி உரையாடத்தொடங்கிய நாம் நோய் தீர்ப்பதில் சித்த மருத்துவத்தின் சாதக பாதகமான அம்சங்கள் பற்றி விவாதிக்கத் தொடங்கினோம். மாற்றமுடியாது என்று கூறப்பட்ட நோய்களையெல்லாம் மாற்றி நோயாளிகளை வாழவைத்த வைத்தியர்கள் காலத்துக்குக் காலம் எமது பிரதேசத்தில் வாழ்ந்து வந்தது பற்றிக் கலந்துரையாடினோம். ஆனால், அப்படிப்பட்ட சித்தமருத்துவர்களைத் தற்போது காண்பதே அரிதாகிவிட்டது. இந்நிலைக்குக் காரணம் என்ன? இந்த நூற்றாண்டில் சித்த மருத்துவம் குறிப்பிடத்தக்களவில் வளர்ச்சியடைந்துள்ளதா? அதன் வருங்காலம் பிரகாசமாக இருக்குமா? என்பன போன்ற கேள்விகள் எம்மத்தியில் எழுந்தன.

அச்சந்தர்ப்பத்தில்தான் திரு. சங்கர் அவர்கள் ''இருபதாம் நூற்றாண்டில் இலங்கையில் சித்தமருத்துவம் பற்றி விரிவாக நீங்கள் எழுதினால் என்ன?'' என்று கேட்டு எனது ஆவலைத் தூண்டிவிட்டார். அதன் விளைவாக நான் எடுத்துக் கொண்ட முயற்சியின் விளைவே இந்நூலாகும்.

இந்நூலுக்குத் தேவையான தகவல்களை நான் திரட்டிக் கொண்டிருந்த வேளையில் எனது பட்டமேற்படிப்பிற்காக இந்தியா செல்ல நேரிட்டது. கஷ்டப்பட்டுத் தொடங்கிய பணியை அரைகுறையாக விடக்கூடாது எனக்கருதி நான் சேகரித்த குறிப்புகளையும் கையுடன் எடுத்துச் சென்றேன்.

இந்தியாவில் நான் சந்தித்த ஒவ்வொரு சித்த மருத்துவரும் இலங்கையில் சித்தமருத்துவம் எத்தகைய நிலையிலுள்ளது என்று அறிவதில் அதிக ஆர்வம் காட்டினர். 1997 மார்கழிமாதம் 20, 21 ஆம் திகதிகளில் கேரளாவின் தலைநகர் திருவனந்த புரத்தில் நடைபெற்ற தேசிய சித்தமருத்துவ மாநாட்டில் கலந்து கொண்டு ஈழத்துச் சித்தமருத்துவம் பற்றிப் பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அங்கு வருகை தந்திருந்த சித்தமருத்துவர் பலரும் நான் எடுத்துக் கூறிய விடயங்களை மிகுந்த ஆவலுடன் செவிமடுத்துப் பாராட்டினர். அப்போதுதான் நான் தொடங்கியபணி, சேகரித்த குறிப்புகள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பது புரிந்தது.

ஒரு நூற்றாண்டுக்குரிய சித்தமருத்துவ வளர்ச்சி பற்றி இச்சிறுநூலில் முழுமையாகக் கூறிவிடமுடியாதுதான். எனினும் முக்கியமான விடயங்களை இயன்றவரை எடுத்துக்கூற முயற்சி எடுத்துள்ளேன். அத்துடன் ஈழத்துச் சித்த மருத்துவ வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள தேக்கநிலைகளை நீக்குவதற்குரிய வழிமுறைகளையும் உரிய இடங்களில் எடுத்துக் கூறியுள்ளேன்.

ஈழத்துச் சித்தமருத்துவம் பற்றி சரிவர பதிவு செய்யப்படாத ஒரு நிலையே பெரிதும் காணப்படுகிறது. அதனை இந்நூல் ஓரளவிற்காவது பூர்த்தி செய்யும் என நம்புகிறேன். இன்றைய காலகட்டத்தில் வரலாற்றுண்மைகளை ஆவணப்படுத்த வேண்டிய ஒரு கட்டாயமும் எமக்குண்டு.

இந்நூலாக்கத்திற்கு தேவையான தகவல்கள், குறிப்புகள், ஆலோசனைகள் தந்துதவிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். முக்கியமாக முன்னாள் சித்த மருத்துவத் துறைத்தலைவரும், வடகிழக்கு மாகாணசபை ஆயுர்வேதப் பணிப்பாளராகக் கடமையாற்றியவருமான பேராசிரியர் சித்தமருத்துவ கலாநிதி சு. பவானி அவர்கள் நான் அத்துறையில் மாணவனாக இருந்த காலந்தொட்டே அது சம்பந்தமான பல தகவல்களைக் கூறியுள்ளார். இலங்கா சித்த ஆயுர்வேதக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சித்த வைத்திய கலாநிதி A. V. இராஜரத்தினம் அவர்கள் நான் இந்தியாவிலிருந்து கடித மூலம் கேட்டுக் கொண்டதற்கிணங்க அக்கல்லூரியின் வரலாறு, பரமேஸ்வராக் கல்லூரியில் சிறிது காலம் இயங்கிய சுதேச வைத்தியக் கல்லூரியின் வரலாறு, சித்த வைத்தியச் சங்கங்கள் போன்ற பல விடயங்களை கடிதமூலம் எழுதி அனுப்பி உதவினார் அவர்களுக்கு நூலாசிரியரின் நன்றிகள் என்றும் உரியது.

மேலும் இந்நூலுக்கு ஆசிச்செய்தி வழங்கிய எனது மதிப்புக்குரிய பேராசிரியர் D. J. சௌந்தரராஜன் M. D. (S) அவர்கட்கும்.

இந்நூல் வெளிவரக் காரணகர்த்தாவாக விளங்கிய பாரதி பதிப்பக உரிமையாளர் திரு. இ. சங்கர் அவர்கட்கும், எனது சகோதரன் யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. சே. சிவசுப்பிரமணிய சர்மா அவர்கட்கும், அச்சுப் பிரதிகளைச் சரிபார்த்துதவிய சித்த மருத்துவ கலாநிதி திருமதி பிரேமா சிவசண்முகராஜா, செல்வி சி. சுகன்ஜா ஆகியோருக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

எனது ஏனைய நூல்களை வாங்கிப் பயனடைந்தது போன்று இந்நூலையும் வாங்கிப் பயன்பெறுமாறு சித்தமருத்துவர்கள், சித்தமருத்துவமாணவர்கள், தமிழன்பர்கள் ஆகியோரை வாழ்த்தி இறைவனை வணங்கி விடைபெறுகிறேன்.

நன்றி

கந்தரோடை,
சுன்னாகம்.

பேராசிரியர் டாக்டர். D. J. சௌந்தரராஜன் எம். டி. (சி)

அவர்களின்

ஆசிச் செய்தி

இலங்கைக்கும் எனக்கும் நெருங்கிய தொடர்புண்டு. எனது தந்தையார் காலஞ்சென்ற T. P. ஜேசுதாஸன் அவர்கள் இலங்கை வானொலியில் புல்லாங்குழல், வயலின் வித்துவானாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். அங்கு ''வேய்ங்குழல் வேந்தன்'', ''வேணுகான வாருதி'' என்னும் பட்டங்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டவர். எனது தந்தையார் மூலம் இலங்கை பற்றிப் பல தகவல்களை அறியும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அதில் சித்த வைத்தியமும் அடங்கும்.

இலங்கையில் அறிவும், அனுபவமும் மிக்க சித்த வைத்தியர்கள் வாழ்ந்து வந்துள்ளார்கள்; வாழ்ந்து வருகிறார்கள். தமிழ்நாட்டைப் போலவே அங்கும் சித்தமருத்துவ பாரம்பரியம் உள்ளது. குறிப்பாக கன்யாகுமரி மாவட்டத்தில் உள்ள சித்தமருத்துவ முறைகளுக்கும் யாழ்ப்பாணச் சித்த மருத்துவ முறைகளுக்கும் இடையில் பல ஒற்றுமைகள் உள்ளன. பரராசசேகரம், செகராசசேகரம் போன்ற அருமையான சித்தவைத்திய நூல்கள் யாழ்ப்பாணத்தில் தோற்றம் பெற்றுள்ளன. ஆயினும், இலங்கைச் சித்தமருத்துவம் சம்பந்தமான தகவல்களை வெளிநாடுகளில் உள்ளவர்கள் அறிந்து கொள்வதற்கு ஏற்ற நூல்கள் இலங்கையில் அதிகம் வெளிவரவில்லை என்றே எண்ணுகின்றேன். அக்குறைபாட்டை 'இருபதாம் நூற்றாண்டில் ஈழத்துச் சித்த மருத்துவம்' என்ற இந்த நூல் நீக்கும் என்று நம்புகிறேன்.

ஆட்கொல்லி நோயான எயிட்ஸ் வியாதிக்குக்கூட சித்த மருந்துகளால் தீர்வு காணமுடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் மதுமேகம் (நீரிழிவு), குருதி அழல் நோய் (அதி இரத்த அழுத்தம்) மக்கட்பேறின்மை, புற்றுநோய், க்ஷய ரோகம், வாத வியாதிகள் போன்ற பல வியாதிகளுக்கும் சித்த மருத்துவத்தில் நிலையான பரிகாரங்கள் உண்டு. அவற்றையெல்லாம் மீண்டும் ஆய்வு செய்து பயன்படுத்த வேண்டியது சித்தமருத்துவர்களினது கடமை ஆகும். இது போன்ற நூல்கள் அதற்குரிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

இருபதாம் நூற்றாண்டில் ஈழத்துச் சித்தமருத்துவம் என்ற இந்நூல் கடந்த ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக இலங்கையில் சித்த மருத்துவ வளர்ச்சி பற்றி எடுத்துக் கூறியுள்ளதுடன் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் பற்றியும் எடுத்துக் கூறியுள்ளது. எனது மாணவன் டாக்டர். சிவசண்முகராஜாவின் இந்த முயற்சிக்கு எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இத்துறையில் மேலும் பல நூல்களை வெளியிட வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

பேராசிரியர் டாக்டர். D. J. சௌந்தரராஜன்,
துறைத்தலைவர்,
பட்டமேற்படிப்புத்துறை.
குழந்தைகள் நலப்பிரிவு,
அரசினர் சித்தவைத்தியக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

பொருளடக்கம்

		பக்கம்
1.	அறிமுகம்	1—5
2.	ஈழத்துச் சிறப்புச் சித்த மருத்துவத்துறைகள்	6—17
3.	சித்த மருத்துவக்கல்வி	18—34
4.	சித்த போதனா வைத்தியசாலை	35—48
5.	அரசாங்க சித்தமருத்துவ சிகிச்சை நிலையங்கள்	49—54
6.	ஈழத்துச் சித்தமருத்துவ நூல்கள்	55—67
7.	சித்த வைத்தியர்கள்	68—75
8.	சித்த மருத்துவ வளர்ச்சிக்குத் தேவையான காரணிகள்	76—87
9.	சித்தமருத்துவமும் ஆங்கில மருத்துவரும்	88—91
10.	நிர்வாகக் கட்டமைப்பு	92—94
11.	முடிவுரை	95—96
12.	உசாத்துணை நூற்பட்டியல்	97—100

அட்டைப்படம்

இலங்கையில் அபூர்வ மூலிகைகள் பல காணைப்படுவதற்கு அனுமன் இலங்கைக்கு சஞ்சீவி பர்வதத்தை எடுத்து வந்தபோது அதிலிருந்து விழுந்த பல பகுதிகளே காரணம் என்று கூறப்படுகிறது. சஞ்சீவி மலையை ஆஞ்சநேயர் எடுத்துவரும் காட்சியையே ஓவியர் பொ. ஞானதேசிகன் அவர்கள் அழகாகச் சித்தரித்துள்ளார்.

1. அறிமுகம்

இலங்கையின் சுதேச மருந்துவ முறைகளில் சித்த மருத்துவமும் ஒன்றாகும். 1961 ஆம் ஆண்டு Act. No: 31, பிரிவு 89- இன்படி சித்த, ஆயுர்வேத, யுனானி மருத்துவமுறைகள் யாவும் ஆயுர் வேதம் என்பதனுள் அடக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஆயுர்வேத வைத்தியமானது சிங்கள மக்களாலும், சித்த மருத்துவமானது தமிழ் மக்களாலும், யுனானி மருத்துவமானது முஸ்லிம் மக்களா லும் பின்பற்றப்பட்டு வருகின்றன.

சித்த மருத்துவ வரலாற்றைப் பற்றிக் கூறுபவர்கள் அது முழு முதற் கடவுளாம் சிவபெருமான் உமையம்மையாருக்குக் கூறிய தாகவும், உமையிடமிருந்து அதைக் கேட்ட முருகப்பெருமான் அகத்தியர், திருமூலர் முதலான சித்தர்களுக்கு உபதேசித்ததாகவும், இச்சித்தர்களே பூமியில் சித்தமருத்துவத்தைப் பரப்பியதாகவும் கூறுவர். நந்திதேவரிடமிருந்து அகத்தியர், திருமூலர் முதலானோர் சித்த மருத்துவத்தை அறித்ததாகக் கூறுவாருமுளர். எனவேதான் சித்த மருத்துவத்தை சிவசம்பிரதாயமுடையது என்றுங் கூறுவர். ''தென்னாடுடைய சிவனே போற்றி'' என்று சிவனைப் போற்றி வழிபடும் மரபும் உள்ளது. இங்கு தென்னாடு என்பது பாரதத்தின் தென்பகுதிகளான தமிழ்நாடு, கேரளம் (மலைநாடு-சேரநாடு) முதலியவற்றை மட்டும் கருதுவதாக அமையாது அவற்றிற்கும் தெற்கே யுள்ள இலங்கையையும் சுட்டி நிற்கிறது. எவ்வாறெனில் குமரிக் கண்டம் என்று அழைக்கப்பட்ட நிலப்பரப்பில் மிகவும் தென்பகுதியில் தற்போது எஞ்சியுள்ள நிலப்பகுதி இலங்கைத் தீவாகும் என்பது வரலாற்று நூலாசிரியர்களின் துணிபாகும். இவ்விலங்கைத் தீவு புராண வரலாற்றுச் சிறப்புகளைக் கொண்டு விளங்குகின்றது. சிவபக்தனான இராவணனால் ஆளப்பட்டது. அதனால் வீணாகானபுரம் என்ற பெயரும் இலங்கைக்கு உள்ளது. இலங்கைத் தீவை இராவணன் ஆட்சி செய்தான் என்பதற்குப் பல ஆதாரங்கள் உள. அவற்றை லேடி இராமநாதன் ஆங்கிலத்தில் எழுதிய இராமாயணம் என்னும் நூலின் முன்னுரையில் சேர். பொன்னம்பலம் இராம நாதன் அவர்கள் ஆதாரபூர்வமாக வரைபடங்களுடன் எடுத்துக்

காட்டியுள்ளார். இராவணன் காலத்திற்கு முன்பிருந்தே இலங்கையில் சிவவழிபாடு சிறப்புற்றுப் பரவியிருந்தது என்று கருத இடமுண்டு. ஈழத்தின் புராதன சிவாலயங்களில் ஒன்றான திருக்கோணேசுவரம் அதற்குச் சான்று பகர்வதாக உள்ளது. இத்தலத்தில் இராவணனும், அவன் தாயாரும் வழிபட்டமைக்கான பல சான்றுகள் உள. இராவணனின் சிவபக்தியை மெச்சி திருஞானசம்பந்தர் தமது பதிகங்கள் யாவற்றிலும் எட்டாவது பாடலில் பாராட்டிப் பாடியிருக்கின்றார். இராவணன் சிவபக்தனாக மட்டுமன்றி சிறந்த வைத்தியனாகவும் விளங்கியிருக்கிறான். துரதிர்ஷ்டவசமாக இராவணனால் செய்யப்பட்ட வைத்திய நூல்கள் எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை. ஆனால், இராவணன் பெயரில் வழங்கும் சில வைத்திய நூல்கள் சிங்கள மொழியில் வழக்கிலுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே இலங்கையுட்பட பாரதத்தின் தென்னாடுகளில் சிவவழிபாடு எவ்வளவு ஆதியானதோ அதுபோல சிவசம்பிரதாயமுடைய மருத்துவமும் புராதன காலந்தொட்டே வழக்கிலிருந்து வந்துள்ளது. இவ்வைத்திய முறையானது சித்தருள் சித்தனான சிவபெருமானால் வழங்கப் பெற்று சித்தர்களால் பின்பற்றப்பட்டு வந்தமையால் சித்த மருத்துவம் என்றும் தமிழில் உள்ளமையாலும், தமிழ்க்கடவுளாம் முருகப் பெருமானால் சித்தர்களுக்கு உபதேசிக்கப் பெற்றமையாலும் தமிழ்மருத்துவம் என்றும் பெயர் பெற்றது எனலாம்.

எனவே, ஆதிகாலத்தில் சித்த மருத்துவமானது இலங்கை முழுவதும் பரவியிருந்திருக்க வேண்டும். பிற்காலத்தில் சேர, சோழ, பாண்டிய பல்லவர்களின் மேலாதிக்கம், நட்புறவு என்பன இலங்கையில் ஏற்பட்டிருந்த காலங்களில் இவ்வைத்திய முறை புத்துயிர் பெற்று வளர்ச்சியடைந்திருக்கக் கூடும். பொலநறுவையில் அமைந்துள்ள பொற்கல் விகாரையில் (Potgql Vehera) உள்ள சிலைகளில் ஒன்று சித்த மருத்துவத்தின் தந்தை என்று கருதப்படும் அகத்திய முனிவருடையது என்ற கருத்து இதனை வலுப்படுத்துவதாக அமைகிறது. பதினைந்தாம் நூற்றாண்டளவில் சிங்களத்தில் ஆக்கப்பட்ட வைத்திய சிந்தாமணி பைசாஜ்ஜ சங்கிரகம் (Vaidya Cintamani Bhaisadya Sanqrabava) என்னும் நூல் வைத்திய சிந்தாமணி என்னும் தமிழ் மருத்துவ நூலைத் தழுவி எழுதப்பட்ட ஒன்றாகும் என்ற கருத்தும் ஈண்டு நோக்கற்குரியது. இவை சிங்களவர் மத்தியில் சித்த மருத்துவத்துக்கிருந்த செல்வாக்கை நன்கு எடுத்துக்காட்டும். சித்தமருத்துவம் கூறும் தவநாத சித்தர்களில் ஒருவரான கோரக்கர் திருகோணமலையில் சித்தியடைந்தார் என்பதும் கவனத்திற் கொள்ளத்தக்கது. அது மட்டுமன்றி பதினெண் சித்தர்களில் புலாத்தியர் சட்டநாதர் ஆகிய இருவரும் சிங்கள நாட்டைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகிறது. சிங்களம் என்பது இலங்கையைக் குறிப்பதாகும் எனவே இத்தமிழ்ச்

சித்தர்கள் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு சென்று சித்தமருத்துவ வளர்ச்சியில் தம்மை ஈடுபடுத்தியிருக்க வேண்டும்.

மேலும், யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த பரராசசேகர மன்னனின் சகோதரனான பரநிருபசிங்கன் என்பவர் சிறந்த மருத்துவராகத் திகழ்ந்ததுடன் கண்டியரசனின் மனைவிக்கு சிங்கள வைத்தியர்களால் குணப்படுத்த முடியாதிருந்த வயிற்றுவலியைக் குணப்படுத்தினார் என்ற செய்தியும் குறிப்பிடத்தக்கது. இது யாழ்ப்பாண அரசபரம்பரையினருக்குச் சித்த மருத்துவத்தில் இருந்த ஈடுபாட்டைக் காட்டுவதுடன் சித்த மருத்துவம் சிங்கள மக்களுக்கும், அரச குடும்பத்துக்கும் பயன்பட்டிருப்பதற்கும் சான்று பகர்வதாகவும் உள்ளது. தற்போது கூட சிங்கள பாரம்பரிய மருத்துவர்களிடம் தமிழ் ஏட்டுச்சுவடிகள் பல இருப்பதாகக் கூறப்படுவதும் கவனத்திற் கொள்ளத்தக்கது.

எனினும் பிற்காலத்தில் தமிழ் மருத்துவமானது இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளிலேயே பெருமளவில் கையாளப்பட்டு வந்துள்ளது. ''இலங்கையில் சித்தமருத்துவத்தின் தாயகமாக யாழ்ப்பாணம் விளங்குகிறது'' என்று கலைப்புலவர் நவரத்தினம் அவர்களும், ''சித்தமருத்துவமானது அதன் தூய்மையுடனும், தனித்துவத்துடனும் யாழ்ப்பாணத்தில் இன்றுவரை கையாளப்பட்டு வருகிறது'' என்று பேராசிரியர் உரகொட அவர்களும் எடுத்துக் கூறியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் சித்தமருத்துவமானது உன்னத நிலையில் வளர்ச்சி கண்டிருந்தது. அதனாற்றான் சோழ இளவரசியான மாருதப்புரவீகவல்லி தனக்கு முகவிகாரத்தை ஏற்படுத்திய (குதிரைமுகம்) ஒருவித புற்று நோயைக் குணமாக்குவதற்குத் தமிழ்நாட்டுவைத்தியர்களால் கைவிடப்பெற்ற நிலையில் யாழ்ப்பாண வைத்தியர்களின் உதவியை நாடி இலங்கையின் வடபகுதிக்கு வந்தனள். ஆங்குதங்கிச் சிகிச்சை பெற்றுத் தனது நோய் நீங்கப் பெற்றாள். அவ்விதம் தங்கிச் சிகிச்சை பெற்ற இடத்தில் யாழ்ப்பாணத் தமிழ் மருத்துவர்கள் பெரிதும்போற்றி வணங்கும் முருகப்பெருமானுக்கு ஒரு கோவிலும் கட்டுவித்தாள். இளவரசியின் குதிரை முக விகாரம் நீங்கிய அவ்விடத்துக்கு மாவிட்டபுரம் (மா-குதிரை, விட்ட- நீங்கிய புரம்- இடம்) என்றும், அங்கு அமைக்கப்பட்ட முருகன் கோவிலுக்கு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் என்றும் பெயர் ஏற்பட்டது. இக்கோவில் இன்றும் யாழ்ப்பாணம் மட்டுமன்றி இலங்கைத் தமிழர் அனைவரதும் பக்திக்குரிய புண்ணிய ஸ்தலமாக விளங்கிநிற்கிறது.

அடுத்து, இலங்கையில் சித்தமருத்துவப் பரம்பரையில் கதிர்காமமும் முக்கிய இடம் பெற்றுள்ளது என்று அறியக் கூடியதாகவுள்ளது. பதினெண் சித்தர்களில் ஒருவரான போகநாதர் என்பவரே முருகனருளால் கதிர்காம யந்திரத்தை ஸ்தாபித்தவர் என்று கூறுவர். தமிழ்நாட்டில் பொதிகை மலையைப் போல் ஈழநாட்டில் கதிரைமலை (கதிர்காமம்) சித்தர்களின் புண்ணிய வாசஸ்தலமாக விளங்கி வந்துள்ளது. மூலிகை வளம்மிக்க இப்புண்ணியபூமியில் சித்தர் கணத்தலைவரான முருகப்பெருமானின் யந்திரத்தை ஸ்தாபித்து சித்தர்கள் வழிபட்டு வந்ததுடன் அங்கிருந்து சித்த மருத்துத்தையும் பரப்பியிருத்தல் வேண்டும். கதிர்காமத்தில் மூலிகை மருத்துவம் பெற்றிருந்த முக்கியத்துவம் காரணமாக அங்கு மூலிகைச்சந்தை பன்னெடுங்காலமாக இருந்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதனை அங்கு செல்பவர்கள் நேரில் கண்டு கொள்ள முடியும். முக்கியமாக கடலணிஞ்சில் அல்லது கடலிறாஞ்சிப்பட்டை (சிங்களத்தில் கொத்தல கிம்புட்டு என்பர்), மரமஞ்சள் (சிங்களம்-வெனிவல்கட்ட), புலிநகம் (சிங்-புலி உகிர்), சீந்தில் (சிங்-ரஸகிந்த), செஞ்சந்தனம் (சிங்-ரத் ஹந்துன்), வெண்சந்தனம் (சிங்-சுது ஹந்துன்), ருத்திராட்சம் முதலான அனேக மூலிகைச் சரக்குகளைக் கொண்ட மருந்துக் களஞ்சியங்களாகக் கதிர்காமத்தில் உள்ள பல கடைகள் விளங்குகின்றன. கதிர்காமத்துக்கு அருகில் (இலங்கையின் தென்பகுதியில்) மூலிகை மலையொன்றும் (மூலிகைகந்த) காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இது அனுமன் எடுத்து வந்த சஞ்சீவி மலையின் ஒரு பகுதி என்றுங் கூறுவர்.

ஈழத்தமிழர் மருத்துவத்தில் கதிர்காமம் பெற்றிருந்த முக்கியத்தைப் பரராசசேகர வைத்திய நூலெங்கணும் காணக் கூடியதாகவுள்ளது. யாழ்ப்பாணச் சமய, இலக்கிய கலாசாரத்தைப் பற்றிப் பேசுபவர்கள் அதைக் கந்தபுராண கலாசாரம் என்று கூறுவதுண்டு. அதுபோன்று யாழ்ப்பாண வைத்திய முறை பற்றிப் பேசுபவர்கள் பரராசசேகர வைத்தியம் பற்றிப் பேசாதுவிடார். ஏனெனில் யாழ்ப்பாண வைத்தியத் துறையில் பரராசசேகரம் ஓர் ஒப்பற்ற நூலாக அன்றும், இன்றும் கருதப்பட்டு வருகிறது. சித்த வைத்தியத்திலேயே பரராச சேகரம் போன்றதொரு பெருந்தொகுப்பு நூல் வேறில்லை என்று கூறலாம். அத்தகைய நூலில் கதிர்காமத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளமையானது, ஈழத்தில் சித்த மருத்துவத் துறையில் கதிர்காமம் வகித்த முக்கிய பங்கினை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. மருந்து, மாத்திரைகள் பிழைத்தால் (அதாவது அவற்றால் நோய் நீங்காவிட்டால்) கதிரைமலை மேவு முருகனை வணங்கிட அந்நோய்கள் மாறிவிடும் என்று இந் நூலின் பலவிடங்களிலும் கூறப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத் தக்கது.

எனவே, கதிர்காமத்தை மையமாகக் கொண்டு வளர்ச்சியடைந்த சித்த மருத்துவம் காலப்போக்கில் தமிழர் அதிகம் வாழும் வடக்குக் கிழக்குப் பிரதேசத்திற்கு மட்டுப்படுத்துப்பட்டிருக்க வேண்டும். இங்கு வாழ்ந்த மன்னர்களும், சித்தமருத்துவர்களும், மக்களும் அதனைப் பேணி வளர்த்து வந்துள்ளனர். அதன் விளைவாக இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வலுவான சித்த மருத்துவ பாரம்பரியத்தை தற்போதும் காணக் கூடியதாகவுள்ளது.

இத்தகைய வரலாற்றுப் பின்னணியுடன் இலங்கையில் சித்த மருத்துவம் பற்றிப் பொதுவாகவும், இருபதாம் நூற்றாண்டில் அதன் வளர்ச்சி பற்றிச் சிறப்பாகவும் ஆராய்வதே இந்நூலின் நோக்கமாகும்.

2. ஈழத்துச் சிறப்புச் சித்த மருத்துவத் துறைகள்

சித்த மருத்துவமானது பிற்காலத்தில் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டு விட்ட போதிலுங்கூட இவ்வைத்திய முறையானது அப்பிரதேசங்களில் நன்கு செழிப்புற்று வளர்ச்சியடைந்தது. அதன் பல பிரிவுகளும் தனித்தனியாக விருத்தியடைந்து அவ்வத்துறைகளில் நிபுணத்துவம் பெற்ற பல வைத்திய சிகாமணிகளும் அங்கு வாழ்ந்து மக்களுக்கு அரும்பணியாற்றியுள்ளனர். ஆனால், பிறநாட்டு அந்நியர் வருகையால் எமது அரும்பெரும் வைத்தியச் செல்வம் கவனிப்பாரற்றுச் சோபையிழந்தது. இலைமறைகாயாக இவ்வைத்தியத்துறையில் சிறந்து விளங்கியவர்களும் தாமறிந்தவற்றைத் தக்கவர்களுக்குக் கற்றுக்கொடுக்காது விட்டமையால் பல மருத்துவ உண்மைகள் ஒருவருக்குந் தெரியாமல், பயன்படாமல் மறைந்து போய்விட்டன. இந்நிலையில் ஈழத்துச் சிறப்புச் சித்த மருத்துவ முறைகள் பற்றி நாம் அறிந்து கொள்வது மிகச் சிரமமான தொன்றாகவே உள்ளது. ஈழத்தில் வெளிவந்துள்ள சித்தமருத்துவ நூல்களில் இருந்தும் பரம்பரை வைத்தியர்களிடமிருந்தும், தப்பிப் பிழைத்துள்ள ஏட்டுச்சுவடிகளை எமக்குப் பார்வையடத் தந்துதவிய சில நல்லவர்களின் சேவையாலும், எமது பிரதேசத்தில் சிறப்புடன் கையாளப்பட்டு வந்த சித்தமருத்துவ முறைகள் பற்றி ஓரளவிற்கு எம்மால் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் பதினேழாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இங்கு மதப்பிரசாரகராக வந்த போல்டேயஸ் பாதிரியார் தமது காலத்தில் இங்கு நிலவிவந்த வைத்திய முறைபற்றிக் குறிப்பிட்டுள்ளமை நோக்கற்குரியது.

''இக்காலத்தில் நாட்டு வைத்தியம் சிறப்புப் பெற்றிருந்தது. நாட்டு வைத்தியர்களின் எண்ணிக்கைக்கும் குறைவில்லை. இவர்களுக்குச் சத்திர சிகிச்சை செய்வதில் பயிற்சியில்லை. நோய்கள்

பற்றித் தாம் பெற்றுள்ள அனுபவம், பயிற்சி ஆகியவற்றைக் கொண்டே இவர்கள் நோய்களை மாற்றுவர். இவ்வைத்தியம் சம்பந்தமாக இவர்களது முன்னோர்களால் அவர்கள் அனுபவங்களையும், ஆராய்ச்சிகளையும் எழுத்தில் பொறித்த ஏட்டுப் பிரதிகள் உண்டு. இவ்வைத்தியர்கள் நோய்களுக்கான சிகிச்சையாகக் குளிசைகளையும், திரவங்களையும் மருந்துகளாக அளிப்பது வழக்கம். இத்தகைய மருந்துகளை இவர்கள் பல்வேறு மூலிகைகளிலிருந்தும் தயாரிப்பர். காய்ச்சல், அதிக வயிற்றோட்டம் ஏற்படும் போது சிறிதளவு மிளகை அரைத்துத் தண்ணீர் சேர்த்துப் பொக்கிளடியில் பூசும்படி வைத்தியர்கள் பணிப்பர்''

தானும் இவ்வாறு குணமடைந்தவர்களில் ஒருவர் எனவும் போல்டேயஸ் பாதிரியார் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து அக்காலத்தில் எமது பிரதேசத்தில் சித்த மருத்துவம் சிறப்புற்று விளங்கியதை அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. அதேநேரம் அறுவை மருத்துவம் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சியடைந்திருக்கவில்லை என்பதும் புலனாகிறது. அறுவை மருத்துவத்துடன் தொடர்புடைய விரண சிகிச்சைப் பிரிவே இங்கு வளர்ச்சியடைந்துள்ளது. புண்களுக்கு வைத்தியம் செய்பவர்களான பரிகாரிமார் இங்கு இருந்திருக்கிறார்கள். ஆயினும் அவர்கள் கட்டு, கட்டிகளை வெட்டுதல், சீழை வெளிப்படுத்தல், விரணங்களைச் சுத்தப்படுத்தல் போன்ற செயல்களையே கூடுதலாகச் செய்திருக்க வேண்டும், மருந்து வகைகளை பயன்படுத்துவதில் அவர்களுக்குக் கற்றறிந்த வைத்தியர்கள் மேற்பார்வையாளர்களாக இருந்து உதவியிருக்க வேண்டும். ஏனெனில் விரணசிகிச்சைக்குரிய மருந்துகள் சாதாரண பச்சிலை வகைகளை விட மருத்துவ விதிகளுக்கமையத் தயாரிக்கப்பட வேண்டிய நிலையிலிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் சித்த மருத்துவமானது பொதுமருத்துவம், சிறப்பு மருத்துவம் என்று இரு பிரிவுகளாக வளர்ச்சி கண்டிருந்தது. இதில் பொது மருத்துவமானது சாதாரணமாக ஏற்படக்கூடிய நோய்களுக்குச் சிகிச்சையளிக்குந் துறையாகவுள்ளது. சிறப்பு மருத்துவமானது சில விசேட காரணங்களின் அடிப்படையில் பல்வேறு துறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. (சொக்கநாதர் தன்வந்திரியம் என்னும் வைத்திய நூலில் சாதாரண சிகிச்சை முறைகளை மானிட சிகிச்சை என்றும் பற்ப செந்தூரங்களைக் கொண்டு செய்யப்படும் சிகிச்சை முறைகளை தேவ சிகிச்சை என்றும், அறுத்தல், சுடுதல் முதலிய அறுவைச் சிகிச்சை முறைகளை அரக்கர் வைத்தியம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது) ஈழத்துச் சித்த மருத்துவ உலகில் பின்வரும் சிறப்புச் சித்த மருத்துவத் துறைகள் வழக்கிலுள்ளன.

1. குழந்தைப்பிள்ளை வைத்தியம் அல்லது குழந்தைப்பிணி மருத்துவம்
2. ஸ்திரீரோக சிகிச்சை
3. கெர்ப்பரோக சிகிச்சை
4. வாத வைத்தியம்
5. விஷக்கடி வைத்தியம்
6. மனநோய் வைத்தியம்
7. கட்டு வைத்தியம்
8. முறிவு நெரிவு வைத்தியம்
9. கண் வைத்தியம்

இவற்றைவிட சன்னி, தோல்வியாதி. செங்கமாரி......... போன்ற, தனியொரு வியாதிக்கு மட்டும் சிகிச்சையளித்த வைத்தியர்களும் உண்டு. இத்துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்த பல வைத்தியர்கள் எமது மண்ணில் வாழ்ந்து மக்களுக்கு அரும்பணியாற்றியுள்ளனர். அவைபற்றி இங்கு சுருக்கமாக நோக்குவது வருங்காலத்தில் இத்துறைகளைப் புனரமைத்து விருத்தி செய்ய உதவும்.

1. குழந்தைப்பிணி வைத்தியம்

(Siddha Paediatrics) - எமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில் குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்களுக்குச் சித்த மருத்துவர்களை நாடும் வழக்கமே அதிகளவில் காணப்படுகிறது. குழந்தை வைத்தியத்தில் நிபுணத்துவம் பெற்ற வைத்தியர்கள் அளவெட்டி சில்லாலை போன்ற இடங்களில் வாழ்ந்திருக்கிறார்கள். குழந்தைகளுக்கு ஏற்பட்ட நோய்களுக்குச் சிகிச்சையளிப்பது மட்டுமன்றி அவர்களுக்கு நோய் வராமல் தடுப்பதும் குழந்தைப்பிள்ளை வைத்தியத்தின் முக்கிய குறிக்கோளாகும். குழந்தை பிறந்த சில நாட்களில் கோரோசனையை மிளகளவு எடுத்துத் தாய்ப்பாலில் உரைத்து நாக்கில் தடவுவர். இவ்விதம் வாரத்தில் ஒரு தடவை செய்து வருவர். அதனால் குழந்தைகளுக்கு சளி, காய்ச்சல், அஜீரணம், வயிற்றுப் பொருமல் முதலியன ஏற்படமாட்டாது. மலமும் நன்கு கழியும்.

யாழ்ப்பாண குழந்தை வைத்தியத்தில் கோரோசனை அல்லது கோரோசனை சேர்ந்த முக்கூட்டு மாத்திரை, கோரோசனை மாத்திரை என்பன இன்றுவரை வழக்கிலுள்ள சிறந்த மருந்துகளாம்.

அதுபோலவே கற்பூரவள்ளி இலையும் குழந்தை வைத்தியத்தில் முக்கியத்துவம் பெறுகிறது. குழந்தைக்குச் சளி ஏற்பட்டால் அதை நீக்குவதற்குக் கற்பூரவல்லியிலையை வெதுப்பிச் சாறு பிழிந்து அதில் சிறிது கல்கண்டு சேர்த்துக் கொடுக்கும்படி வைத்தியர் பணிப்பர். வாரத்தில் இரண்டு அல்லது மூன்று தடவை அரைத் தேக்கரண்டி வீதம் குழந்தைக்கு புகட்டுவர். நோய்நிலையை அனுசரித்து இத்துடன் கோரோசனை அல்லது அது சேர்ந்த மாத்திரைகளில் ஒன்றையும் உரைத்துக் கொடுப்பதுண்டு. கற்பூரவள்ளி இலைச்சாற்றில் Anti Streptococcal Action - இருப்பதாக நம்பப்படுகிறது. எனவே, குழந்தைப் பருவத்தில் ஏற்படக்கூடிய பல தொற்று நோய்களை இது தடுக்கிறது.

குழந்தை பிறந்ததிலிருந்து அதற்குக் கோரோசனை கொடுப்பது, கிரந்தி எண்ணெய் தலைக்கு வைப்பது போன்ற பலவிடயங்களையும், சித்த மருத்துவர்களின் ஆலோசனையுடனே எமது மக்கள் செய்வார்கள். தற்போது கூட இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் வசிக்கும் தமிழ் மக்கள் தமது குழந்தைகளுக்குக் கோரோசனை மாத்திரை, கிரந்தி எண்ணெய் முதலியவற்றை யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற சித்த வைத்தியர்களிடமிருந்து வாங்கிச் செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது. கோரோசனை மாத்திரை, முக்கூட்டு மாத்திரை, பாலசஞ்சீவி மாத்திரை, பிரமி நெய், வல்லாரை நெய், மாதுளை நெய், வடி கிரந்தி எண்ணெய், கொதி எண்ணெய், கோழியாவாரைச் சாற்றெண்ணெய், செவ்வரத்தம்பூக்கிரந்தி எண்ணெய், அக்கரசஞ்சீவி மாத்திரை என்பன யாழ்ப்பாணச் சித்த வைத்தியர்கள் குழந்தை வைத்தியத்தில் பயன்படுத்தும் முக்கியமான மருந்துகளிற் சிலவாகும். பரராசசேகரம் நூலில் பாலரோக நிதானம் என்னும் பிரிவில் சிறுவர் நோய்களுக்கான சிகிச்சை முறைகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. பிற்காலத்தில் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த பாலரோகம் சம்பந்தமான நூல்கள் யாவும் அதன் தழுவலாகவே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

2. ஸ்திரீ ரோகம், கெர்ப்பரோகம்: (Siddha Gynaecology & Obstetrics)

இவ்விருதுறைகளிலும் தனித்து பாண்டித்தியம் பெற்று சிகிச்சையளித்தவர்கள் இங்கு இருந்ததாகத் தெரியவில்லை. பொதுச் சிகிச்சை வைத்தியர்களிற் சிலரே இத்துறையிலும் தேர்ச்சி பெற்று பெண்களுக்குச் சிகிச்சையளித்து வந்துள்ளனர். பரராசசேகரத்தில் இவ்விரு துறைகளும் ஒரேபிரிவின் கீழ் அதாவது கெர்ப்பரோக நிதானம் என்ற பிரிவில் கூறப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ்ப்பெண்களை பொறுத்தவரையில் அவர்களிற் பலர் பிற ஆடவரிடம் தமது உடம்பைக் காண்பித்து வைத்தியம் செய்விக்கும் வழக்கம் அக்காலத்தில் அதிகம் இருந்திருக்கவில்லை என்றே தோன்று கிறது. தமிழ்ப் பெண்களிற் பலர் பாட்டி வைத்தியத்தையே பெரிதும் பின்பற்றினர். அக்காரணத்தால் அவர்களுக்கு ஏற்படும் நோய்கள் பற்றியோ, அவற்றுக்கான சிகிச்சை முறைகள் பற்றியோ, அதிகமாக அறிந்துக்கொள்ள முடியாதிருந்தது. அந்நிலை காலப்போக்கில் மாற்றமடைந்தது. பெண்கள் சுதேசமருத்துவர்களிடமும், ஆங்கில மருத்துவர்களிடமும் சிகிச்சை பெற முற்பட்டனர். பெரும்பாலான பெண்கள் பாட்டி வைத்தியத்துக்கு அடுத்தபடியாகத் தமது நோய் களுக்கு சித்த வைத்தியர்களிடம் சிகிச்சையும், ஆலோசனையும் பெறுவதையே பெரிதும் விரும்புவர். முக்கியமாக வெள்ளைபடுதல்'' மாதவிடாய்க் கோளாறுகள், கர்ப்பாசய சம்பந்தமான ஏனைய பிரச்சினைகள், மலட்டுத்தன்மை போன்றவற்றிற்குச் சித்த மருத்து வர்களையே பெரிதும் நாடுவர். பெரும்பாலான சித்த மருத்துவர்கள் இத்துறையில் சிறந்து விளங்கியதுடன் குடும்ப ஆலோசகர்களாகவும் இருந்து வந்துள்ளனர். வெண்பூசனி நெய், வெண் பூசனி லேகியம், கெர்ப்பரத்தினாதிச் சூரணம், மதிகாந்தச் சூரணம், பூங்காவி செந்தூரம், காந்த செந்தூரம், அயகாந்த செந்தூரம், கறுப்புத்தூள், சிவப்புத்தூள், கெற்பரத்தினாதி எண்ணெய், சூலைவாய்வுக்குளிகை முதலியன இத்துறையில் பயன்படுத்தப்படும் சில சிறப்பு மருந்து களாகும்.

பாட்டிமார்களை நம்பி வீடுகளில் மகப்பேற்றை வைத்துக் கொண்டிருந்த தாய்மார்கள் படிப்படியாக ஆங்கில மகப்பேற்று வைத்தியசாலைகளை நாடியதைப் பின்வரும் பாடல் நகைச்சுவை யுடன் எடுத்துக் காட்டுகிறது.

> ''பன்றிக்குட்டி போலே முன்னர்
> பதினாறு பிள்ளை பெற்றார்
> அன்று வருத்தம் இல்லை
> ஆஸ்பத்திரி போனதில்லை
> இன்றுபார் இணுவிலிலே
> பெண்கள் தொகை
> எண்ணவுமோ முடியவில்லை''

இப்பாடல் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இணுவில் மகப்பேற்று வைத்தியசாலை தொடங்கப்பெற்ற பின்னர் தமிழ்ப் பெண் களிடையே ஏற்பட்ட மனமாற்றத்தை எடுத்துக் காட்டுகிறது. இப் பாடலைப் பாடிய புலவர் கல்லடி வேலுப்பிள்ளை என்பவராவார். அவர் அக்காலச் சித்த வைத்தியம் பற்றியும் நன்கு அறிந்திருந்தார் என்பது இருபாலைச் செட்டியார் வைத்திய விளக்கம் என்னும் நூலுக்கு அவர் வழங்கிய சிறப்புப்பாயிரம் மூலம் அறியக்கிடக்கிறது. எனவே பதினாறு பிள்ளை பெற்றும் பெண்கள் ஆரோக்கியமாக ஒரு காலத்தில் இருந்தனர் என்ற புலவரின் கூற்று அர்த்தம் நிறைந்த ஒன்று என்பதையும் மறுப்பதற்கில்லை.

தற்போது கூட யாழ்ப்பாணத்தில் சித்த மருத்துவர்களிடம் சிகிச்சை பெறுவோரில் பெண்களே அதிகம் என்பது குறிப்பிடத் தக்கது. எனவே, பெண்ணோயியல் என்னுந் துறையினை விருத்தி செய்து, அதற்கென நிபுணத்துவம் பெற்ற சித்த மருத்துவர்களை வருங்காலத்தில் உருவாக்குவது அவசியமானதொன்றாகும்.

3. வாதரோக சிகிச்சை: (Siddha Rhumatology)

வாதரோகங்களுக்குரிய சிகிச்சை முறைகள் பொதுச்சிகிச்சை முறையில் அடக்கப்பட்டுள்ளபோதிலும் இந்நோய்களின் எண்ணிக்கை, (வாதநோய்கள் — 80) தாக்கம், நாட்பட்ட தன்மை என்பன காரணமாக இச்சிகிச்சை எமது சமூகத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளது. அதன் விளைவாக வாத வைத்தியம் எமது பிரதேசத்தில் சிலரால் சிறப்பாகக் கையாளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. முக்கியமாக ஆவரங்கால், யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் வாழ்ந்த வைத்தியர்களில் சிலர் இத்துறைகளில் நிபுணத்துவம் பெற்று விளங்கியுள்ளனர். பரராசசேகரம், செகராச சேகரம் என்பனவும் வாதரோக சிகிச்சைக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளன. மூட்டுவாதங்கள், முகவாதம், பாரிசவாதம் மற்றும் பல்வேறு வகையான வாதநோய்களுக்கு சிகிச்சையளிப்பதில் மேற்படி வைத்தியர்கள் கைதேர்ந்தவர்களாக விளங்கியுள்ளனர். தாழங்காய் எண்ணெய், நாராயணத்தைலம், மாவிலங்கம்பட்டை எண்ணெய், வீரமாணிக்கன் எண்ணெய், முடக்குச் சூரணம், வெள்ளறுகுப்பற்பம், தெசமூலச் சூரணம் என்பன இவர்களால் பயன்படுத்தப்பட்டுவரும் சில சிறப்பு மருந்துகள் என அறியக் கூடியதாகவுள்ளது.

4. விஷக்கடி வைத்தியம்: (Siddha Toxicology)

நஞ்சியல் பற்றிய வைத்தியத்துறை ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் சிறப்புற்றிருந்தபோதிலும் தற்போது மிகவும் அழிந்து கொண்டுவருகிறது. விஷக்கடி வைத்தியர்கள் என்று நிபுணத்துவம் பெற்றோர் முக்கியமாகப் பாம்புக்கடி, தேட்கடி,

கொடுக்கன்கடி, சிலந்திக்கடி, ………… போன்ற ஜந்துக்களால் ஏற்படும் விஷங்களுக்குச் சிகிச்சையளிப்பதில் மக்களின் நம்பிக்கையைப் பெற்றிருந்தனர். இன்னொரு விதமாகச் சொல்வதாயின் அதற்காகவே, மக்கள் அவர்களிடம் செல்வர். தாவர, தாது நஞ்சுகளைப் பொறுத்தவரையில் அவற்றிற்குப் பொதுச்சிகிச்சை வைத்தியர்களிடமே சிகிச்சை பெறச் செல்வர். உதாரணமாக அலரிக்கொட்டை, எட்டிவிதை, பாஷாண நஞ்சுகள் முதலியவற்றை இங்கு குறிப்பிடலாம். விஷக்கடி வைத்தியத்தில் பார்வைபார்த்தல், நூல் கட்டுதல், மந்திர ஜபம் என்பனவும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சித்த மருத்துவ நூலான பரராசசேகரத்தில் நஞ்சுகள், விஷக்கடி பற்றி எதுவும் கூறப்பட்டில்லை. செகராசசேகரத்தில் விஷம் பற்றிக் கூறப்பட்டுள்ளதாக கலாநிதி ப. சிவகடாட்சம் எடுத்துக் கூறியுள்ளார். எனினும் நஞ்சியல் பற்றி யாழ்ப்பாணத்தில் வெளிவந்த முதல் நூலாக அமுதாகரம் கருதப்படுகிறது. வட்டுக் கோட்டையைச் சேந்த இ. நாகேசையர் என்பவர் அமுதநுணுக்கம் என்னும் விஷவைத்திய நூலை எழுதியுள்ளதாக அறியக் கிடக்கிறது.

5. மனநோய் வைத்தியம்

சித்த மருத்துவ மூலதத்துவங்களில் உடலைப்போலவே மனமும் நோய்வாய்ப்பட கூடியது என்று கூறப்பட்டுள்ளது. உடல் நோய்கள் மனத்தையும், மனநோய்கள் உடலையும் பாதிக்கச் செய்யவல்லன - திருமூலர் எண்ணாயிரம் என்னும் நூலில் மருந்து பற்றிக் கூறுகையில்.

“மறுப்பதுடல் நோய் மருந்தெனலாகும்
மறுப்பதுளநோய் மருந்தெனல்சாலும்
மறுப்பதினி நோய் வராதிருக்க
மறுப்பது சாவை மருந்தெனலாமே”

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சாதாரண உளத்தாக்கங்கள், உணர்ச்சிக்கோளாறுகளால் உண்டாகும் நோய்கள். (உ. ம் பயசுரம்) முதலியவற்றிற்குப் பொதுச் சிகிச்சை வைத்தியர்களே சிகிச்சையளிப்பர். ஏற்கனவே கூறியது போல குடும்ப சித்த வைத்தியர்களுக்கு நோயாளியின் குடும்பம், ஊர், சுற்றுச்சூழல் சம்பந்தமான பூரண விபரமும் தெரிந்திருக்குமாதலால் அவர்கள் உளரீதியான பாதிப்புகளுக்குக் தகுந்த ஆலோசனைகள் வழங்கி வழிகாட்டக் கூடிய நிலையிலிருந்திருக்கிறார்கள்.

பித்து அல்லது உன் மாதம் போன்ற இலகுவில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரமுடியாத நோய்களையே மனநோய் என்று கருதுவர். பொது மக்களின் மொழியில் விசர், பனி, பைத்தியம், வலதுகுறைவு போன்ற சொற்கள் மனநோய்க்கு பிரயோகிப்படும். இவர்களுக்கான சிகிச்சை முறையில் பேர் பெற்று விளங்கியவர்கள் சுதுமலை, காரைக்கால் போன்ற இடங்களில் வாழ்ந்து வந்துள்ளர். புளி எண்ணெய், பருத்தியிலைச் சாற்றெண்ணெய் முதலியன இவர்களால் பயன்படுத்தபபட்ட முக்கிய மருந்துகளாம், நசியமிடல் (நையம்), பார்வை பார்த்தல், நூல்கட்டல், மந்திரித்தல், பேயோட்டுதல், கழிப்புக்கழித்தல் முதலியனவும் இதில் அடக்கப்படுவதுணடு. மேலும் கரவிஷம் அல்லது இடுமருந்து எனப்படும் மருத்தீட்டிற்கும் இவர்களிற் சிலர் சிகிச்சையளித்து வள்துள்ளனர். மனநோய் வைத்தியத்தைப் ‘‘பூநவைத்தியம்’’ என்றும் கூறுவர். மனநோய் சம்பந்தமான யாழ்ப்பாணத்துச் சித்த மருத்துவ நூல்கள் ஏதும் காணக்கிடைத்திலது.

6. அறுவை மருத்துவம் (Siddha Surgery)

சத்திர சிகிச்சை விதிமுறைபற்றிப் பரராசசேகரத்தில் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. ஆயினும் இத் துறையானது எமது பிரதேசத்தில் அதிகம் வளர்ச்சியடையவில்லை என்றே கூறலாம். போல்டேயஸ் பாதிரியாரின் கூற்றும் அதனை உறுதிப்படுத்துகிறது. எனினும் சத்திர சிகிச்சையின்றி பற்பம், செந்தூரம் சுண்ணம், கட்டு, களங்கு போன்ற அதிக வீரியமுள்ள மருந்துகளைப் பாவித்து நோய்களை நீக்குவதிலேயே வைத்தியர்கள் அதிக கவனம் செலுத்தியுள்ளனர் போல் தோன்றுகிறது. சத்திர சிகிச்சை தேவைக்கேற்ப திரிபடைந்து கட்டு வைத்தியம், முறிவு நெரிவு வைத்தியம் என்பனவாக வளர்ச்சி கண்டுள்ளது போல் தோன்றுகிறது. சொக்கநாதர் தன்வந்திரியம் என்னும் நூலில் அரக்கர் வைத்தியம் என்ற பிரிவில் அறுவை மருத்துவத்துடன் தொடர்பான கட்டுகள், பிளவை, புற்றுநோய் முதலான அநேக வியாதிகளுக்கான சிகிச்சைமுறைகள் கூறப்பட்டுள்ளன.

அ) கட்டுவைத்தியம்

கட்டு என்று கூறும்போது அது பொதுவாக சீழ்க்கட்டியையே குறிப்பிடுகிறது. ஆனால், கட்டு வைத்தியமானது பல்வேறு விதமான கட்டிகள், கட்டுகள், விரணங்கள், பிளவை, பகந்தரம், புண்கள் முதலிய பல்வேறு வியாதிகளுக்கான சிகிச்சை முறைகளைக் கூறுகிறது.

எனவே, இதனை விரண சிகிச்சை என்று கூறுவதே பொருத்த முடையதாக இருக்கும். இத்துறையில் தேர்ச்சி பெற்ற வைத்தியர்கள் இணுவில், பருத்தியடைப்பு (ஊர்காவற்றுறையில் உள்ளது), இளவாலை போன்ற இடங்களில் வாழ்ந்து வந்துள்ளனர். இந் நூலாசிரியரிடம் யாழ்ப்பாண கட்டு வைத்தியம் சம்பந்தமான ஏட்டுப் பிரதி ஒன்று கிடைத்துள்ளது. அது விரைவில் அச்சிடப் படவுள்ளது.

ஆ) முறிவு நெரிவு வைத்தியம்
(Siddha Orthopaedics)

நாயன்மார்க்கட்டு. ஒட்டகப்புலம், மூளாய் ஆகிய இடங்களில் முறிவு நெரிவு வைத்தியத்திற் சிறந்த வைத்தியர்கள் இருந்திருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் பழம் பெரும் சித்த வைத்திய சாலை நாயன்மார்க்கட்டிலேயே அமைந்துள்ளது. தற்போதும் அங்கு முறிவு நெரிவுகளுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கது. முக்கியமாக எலும்பு முறிவுகளுக்கு. விழுந்த, அடிபட்ட நோவுகள் (Traumatic Pain) முதலியவற்றிற்கு இத்துறையில் தேர்ச்சி பெற்ற வைத்தியர்கள் சிகிச்சையளிப்பர். புக்கை கட்டுவது, பத்துப் போடுவது, நோவெண்ணை பூசுவது முதலியன இவ்வைத்திய முறை யில் முக்கிய இடம் பெறுகின்றன. இவ்வைத்தியம் சம்பந்தமாக யாழ்ப் பாணத்தில் நூல்கள் ஏதும் இதுவரையில் வெளிவரவில்லை என்பது வருத்தத்துக்குரிய விடயமாகும்.

7. கண்வைத்தியம்
(Siddha Ophthal Mology)

தமிழ் வைத்தியத்தில் கண்வைத்தியமும் சிறப்பிடம் பெற்றுள்ளது, ''நயனவிதி குணமும் மருந்தும்'' என்னும் நூல் கண்வைத் தியம் சம்பந்தமாக யாழ்ப்பாணத்தில் வெளிவந்த ஒரேயொரு நூலாகும். பருத்தித்துறை. அளவெட்டி, கொல்லங்கலட்டி. நுணாவில், போன்ற இடங்களில் இத்துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற வைத்தியர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். நயனவிதி எண்ணெய், பொன்னாங்காணித் தைலம், சந்தனாதித் தைலம் என்பன இவர் களால் பயன்படுத்தப்பட்ட சில சிறப்பு எண்ணெய்வகைகளாகும். கண் சம்பந்தமான பல்வேறு வியாதிகளுக்கு இவர்கள் சிகிச்சையளித் துள்ளனர் என்றும் அறியக் கூடியதாக உள்ளது.

E. N. T என்று தற்காலத்தில் கூறப்படும் காது, மூக்கு தொண்டை வைத்திய முறையானது சற்று விரிவுபட்ட நிலையில் கழுத்தும், அதற்கு மேற்பட்ட உறுப்புக்களான வாய், முகம், கண், நாசி, கபாலம், மூளை, செவி முதலானவற்றில் ஏற்படும்

நோய்களை உள்ளடக்கியதாக ''சிரரோகம்'' என்ற பெயரில் பரராச சேகரத்தில் இடம் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்கூறியவற்றை விட, தோல்வியாதிகள், பறங்கிப்புண்கள் எனப்படும் மேகப்புண்கள், மேகநோய்கள் முதலியவற்றை மாற்றுவதில் தேர்ச்சி பெற்ற வைத்தியர்கள் மாரீசங்கூடல் சில்லாலை போன்ற இடங்களிலும், செங்கமாரி எனப்படும் காமாலைக்குச் சிகிச்சையளித்த வைத்திய பரம்பரையினர் அளவெட்டியிலும் வசித்ததாகக் கூறப்படுகிறது. விசர்நாய்க்கடிக்கு வைத்தியம் செய்த சிலரும் ஒரு சில இடங்களில் இருந்திருக்கிறார்கள்

மேலும் யாழ்ப்பாண வைத்தியர்களில் கணிசமானோர் வர்ம வைத்தியத்திலும் (மர்ம ஸ்தானங்கள் பற்றியது) தேர்ச்சி பெற்று விளங்கியுள்ளனர். முக்கியமாக இரண வைத்தியத்துடன் தொடர் பாய் வர்ம சிகிச்சையும் வளர்ந்திருக்கிறது. பரராசசேகரம் ஐந்தாம் பாகத்தில் வர்மக்கலைப்பற்றி தெளிவாக எடுத்துக் கூறப்பட்டிருப்பது இதற்குச் சான்றாக அமைகிறது. மர்ம ஸ்தானங்கள் அல்லது வர்ம ஸ்தானங்களைப் பற்றிய அறிவு இல்லாமல் இரண வைத்தியம் செய் யக்கூடாது என்பர். தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் தற்போதும் வர்ம வைத்தியத்தில் சிறந்த வைத்தியர்கள் பலர் இருப்ப தாகக் கூறுவர். ஆனால், யாழ்ப்பாணத்தில் இக்கலை தற்போது மிகவும் அருகிவிட்டது என்றே கூறலாம். வர்ம வைத்தியம் சம்பந்த மான யாழ்ப்பாணத்து ஏடுகள் பல தீண்டுவாரின்றிச் சிதைந்து போய் விட்டன என்பது வருந்தற்குரிய ஒரு விடயமாகும். சீனடி, சிலம்படி, வித்தை பயிற்றுவிப்போரும், காவடி எடுப்பவர்களுக்கு செதில் அல்லது ஊசி குத்துவோரும் மட்டும் மர்மஸ்தானங்களை பற்றி ஓரளவு தெரிந்து வைத்துள்ளனர். ஆயினும் இது வைத்தியத்தினின்று விலகிய ஒரு கலையாகவே உள்ளது. எனவே, வர்மக்கலை சம்பந்தமான எச்சமிச்சங்களை சேகரிக்க முயற்சிகள் மேற்கொண்டால் அதிலுள்ள அபூர்வ மருந்துகள் பற்றியும் அறிந்து கொள்ள வாய்ப்புண்டாகும்.

இங்கு குறிப்பிட்ட சிறப்பு மருத்துவத்துறைகளில் தேர்ச்சிபெற்ற பல வைத்தியர்கள் எமது பிரதேசத்தின் பல பாகங்களிலும் வாழ்ந்து தமது சேவைகளை வழங்கியுள்ளனர். ஆனால் அவர்களில் பெரும்பாலோரின் பரம்பரையினர் அவ்வத் துறைகளில் நிபுணத் துவம் பெற்று அவற்றைத் தொடர்ந்துள்ளார்கள் என்று கூறு வதற்கில்லை. அதனால் அவர்கள் கையாண்டு வந்த பல சிறப்புச் சிகிச்சை முறைகளைப் பற்றி அறிவதற்கும், ஆராய்வதற்கும் வழி யில்லாதுள்ளது. இக்காரணத்தினால் எமது பிரதேசத்தில் சிறப்புற்று விளங்கிய சித்த மருத்துவத்தின் பல்வேறு பிரிவுகளிலும் உள்ள

குறைபாடுகளைச் சீர்செய்வதும் சிரமமான ஒரு காரியமாகவே உள்ளது. போல்டேயஸ் பாதிரியார் காலத்திலேயே (அதாவது 17 ஆம் நூற்றாண்டுப் பகுதியிலேயே) எமது வைத்திய முறைகள் அரச ஆதரவை இழந்து சீரழியத் தொடங்கியிருக்க வேண்டும். அந்நிலையானது அவர் காலத்துக்குப் பின்வந்த இரு நூற்றாண்டுகளில் மேலும் மோசமடைந்து பத்தொன்பதாம் நூற்றாண்டில் இவ் வைத்திய அறிவு நிரம்பப் பெற்றோர் மிகவும் அருமையாகவே காணப்பட்டிருக்க வேண்டும். அதனாற்றான் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இங்கு வருகை தந்திருந்த டாக்டர். சாமுவேல், எஃப். கிறீன் அவர்கள் இங்குள்ள வைத்தியர்கள் 14-15 ஆம் நூற்றாண்டிற் சொல்லப்பட்ட மருத்துவ அறிவுடன் இருந்தார்களென்றும் உண்மையான (நவீன) விஞ்ஞான அறிவு அவர்களுக்குச் சிறிதளவேனும் இல்லாதிருந்தது என்றும் குறிப்பிட்டுள்ளார். அதனை நிவர்த்தி செய்யும் நோக்குடன் அவர்களுக்கும் தமிழில் மருத்துவ விஞ்ஞானத்தைக் கற்பிக்க முற்பட்டார். அதன் மூலம் சித்த வைத்தியத்திலுள்ள நல்ல அம்சங்களை விஞ்ஞான ரீதியாக வளர்த்தெடுப்பது கிறீனின் நோக்கமாக இருந்திருக்கலாம். கிறீன் அவர்களால் அக்காலத்தில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட வைத்திய நூல்களில் தமிழ் மருத்துவ கலைச்சொற்கள் பல இடம் பெற்றிருப்பதையும் இங்கு குறிப்பிடலாம். இந்து பதார்த்த சாரம் என்னும் நூல் சுதேச மருத்துவர்கள் பயன்படுத்தும் தாவர தாது, பிராணி வர்க்க மருந்துப்பொருட்களை விஞ்ஞானக் கண் கொண்டு நோக்கியுள்ளது. கிறீன் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்ட அங்காதி பாதம் என்னும் உடற்கூறு நூல் தமிழ்நாட்டிலுள்ள அரசினர் சித்தமருத்துவக் கல்லூரிகளில் பாட நூலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. பரராசசேகரம் முதலிய சித்த மருத்துவ நூல்களைப் பதிப்பித்த ஐ. பொன்னையா கிறீனின் மாணவ பரம்பரையில் வந்த ஒருவர் என்று கூறப்படுவதும் கவனத்திற் கொள்ளத்தக்கது.

இன்னொரு கோணத்திலும் இதை விளக்கிக் கொள்ள வேண்டியுள்ளது. அதாவது கிறீனின் காலத்தில் சுதேச வைத்தியர்கள் 14-15 ஆம் நூற்றாண்டுக்குரிய மருத்துவ அறிவைக் கொண்டிருந்ததாகக் கூறப்பட்டாலும் முறையான சித்த வைத்திய அறிவு நிரம்பப் பெற்றவர்களும் ஆங்காங்கே இருந்துள்ளனர். உதாரணமாக ''எல்லோரும் கைவிட்டால் சில்லாலைத் தம்பி'' என்று கிறீனின் காலத்திலேயே சில்லாலையைச் சேர்ந்த இன்னாசித்தம்பி பரம்பரையினர் சித்த வைத்தியத்தில் சிறந்து விளங்கியுள்ளனர். ஏனைய வைத்தியர்களால் மாற்றமுடியாத பல வியாதிகளை அவர்கள் மாற்றியதைக் கிறீனும் அவதானித்திருக்கிறார். அது போலவே ஆங்கில வைத்தியர்களுக்குச் சவால் விட்டு நோய்களை மாற்றியதில் சித்த மருத்துவர்களில் இருபாலைச் செட்டியாரும் ஒருவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சித்த வைத்தியத்தில் கூறப்பட்டுள்ள உடல் தத்துவம், சைவ சித்தாந்தக் கோட்பாடுகள் முதலியன மெய்ஞ்ஞானத்துடன் சம்பந்தப்பட்டவை. அவற்றைக் கிறீன் போன்றோரால் விளங்கிக் கொள்ள முடியாத காரணத்தால் அவர்கள் சுதேச வைத்தியர்களுக்கு அறிவியல் ரீதியான அறிவு அல்லது விளக்கம் இல்லை என்ற முடிவுக்கு வந்திருக்கக் கூடும்.

மானிப்பாயில் ஸ்தாபிக்கப்பட்ட கிறீன் அவர்களின் தமிழ் மொழி மூல ஆங்கில வைத்தியக் கல்லூரி சொற்ப காலத்தில் மூடப்பட்டு விட்டது. அது போலவே சித்த வைத்தியத்திலும் விஞ்ஞான ரீதியான வளர்ச்சி என்பது கணிசமான அளவிற்கு மேல் தொடரவில்லை. ஒரு வேளை கிறினீன் வைத்தியக் கல்லூரி வளர்ச்சி கண்டிருக்குமானால் அதனுடன் இணைந்து யாழ்ப்பாணச் சித்த மருத்துவமும் விஞ்ஞான ரீதியாக மேலும் வளர்ச்சியடைந்திருக்கக் கூடும்.

3. சித்த மருத்துவக் கல்வி

இலங்கையில் சித்த மருத்துவம் சரித்திர காலந்தொட்டு வழக்கிலிருந்து வந்துள்ள போதிலும் அக்காலச் சித்த மருத்துவக் கல்வி பற்றித் தெளிவாக விபரங்களைப் பெற முடியாதுள்ளது. பெரும்பாலும் குரு சிஷ்ய முறைக் கல்வி நிலையே அக்காலத்தில் இருந்து வந்தது. சிலர் தென்னிந்தியாவிற்குச் சென்றும் சித்த மருத்துவத்தைக் கற்று வந்தனர். சித்த மருத்துவம் கற்பதற்கென்று தனியான பாடத்திட்டங்கள் ஏதும் அக்காலத்தில் இல்லாத போதிலும் வைத்தியத்துறையில் ஈடுபடுவோர், அத்துறை சார்ந்த நூல்களில் மட்டுமன்றி சமூகத்திற்குப் பயன்படும் சமயம், சோதிடம், சைவ சித்தாந்த சாத்திரங்கள் முதலிய நூல்களிலும் தேர்ச்சியுடையவராய் இருத்தல் வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

''சோதிடம் பஞ்ச பட்சி துலங்கிய சரநூல் மார்க்கம்
கோதறு வகார வித்தை குருமுனி ஓது பாடல்
தீதிலாக் கக்கிஷங்கள் செப்பிய கன்ம காண்டம்
ஈதெலாங் கற்றுணர்ந்தோர் இவர்களே வைத்தியராவார்''

என்று பதினெண் சித்தர் நாடி நூலில் வைத்தியரிலக்கணம் பற்றி வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. பரராசசேகரம் அங்காதிபாதத்திலும் வைத்தியனிலக்கணம் பற்றி எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட கிறிஸ்தவ பண்டிதர் வைத்திய நூற்றிரட்டு என்னும் நூலில் வைத்தியன் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கங்களும் நடைமுறைகளும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

''கருவழித்திட மருந்து கொடுக்கலாகா
சனமயக்கஞ் செய் மருந்து காட்டலாகா
வருபெல்லி சூனியத்தை நம்பலாகா
மாற்றுவோமதை யென்று வழுத்தலாகா''
பெருமுழக்கிட்டஞ்ஞானக்கிரியை செய்வார்
பேதமைக்கனுசரணை செய்யலாகா
குருபரனை யெந்நாளும் வணங்கிப் போற்று
குற்றமறு மோட்சமதிற் குலவுவாரே''

சொக்கநாதர் தன்வந்திரியத்திலும் வைத்தியனிலக்கணம், வைத்தியன் அறிந்திருக்க வேண்டியவை பற்றி நன்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தரசர் காலத்தில் சித்த மருத்துவக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது போல் தோன்றுகிறது. யாழ்ப்பாணத்து மன்னர் வைத்திய நூல்களைத் தொகுத்து வெளியிடுவதிலும், மூலிகைத் தோட்டங்கள் அமைப்பதிலும் பெரும் ஆர்வம் காட்டியுள்ளனர். எனவே, அக்காலச் சித்த மருத்துவக் கல்வி நிலையும் மேம்பட்டதாகவே இருந்திருக்க வேண்டும். செகராசசேகரன் என்னும் மன்னன் போர்க்களத்தில் இறந்த வீரர்களின் உடல்களை வெட்டி உடலுறுப்புகளைப் பற்றி ஆராய்ந்தான் என்று கூறப்படுகிறது.

''இயம்பிய குடலு முறு மென்பு நாடிகளு மற்றுஞ்
செயம்பொரு சிங்கை நாடன் செகராசசேகரன்றா
னுயர்ந்தவாள் வடக்கராக முருட்டிய களத்தின் மீதே
அயஞ் சிறுதுளது தீர அளந்து கண்டறிந்ததாமே''

உடலுறுப்புகளைப் பற்றிக் கற்க உதவும் அங்காதிபாதம் என்னும் நூல் பரராசசேகரத்தில் அடங்கியுள்ளது.

இவ்விதம் யாழ்ப்பாண மன்னர் காலத்தில் சித்த மருத்துவக் கல்விநிலை சிறப்பாக இருந்த போதிலும் அந்நியரான போர்த்துக்கேயர் வருகையின் பின் சீரழியத் தொடங்கியது. குருசிஷ்ய முறையில் தொடர்ந்த கல்வி நிலையும் பாதிக்கப்பட்டு தந்தைக்குப் பின் மகன் வைத்தியன் என்ற குடும்ப பாரம்பரிய முறை தலை

தூக்கியது.(அதாவது மகன் தந்தையிடமோ, பிறரிடமோ வைத்தியம் கற்றிருந்தாலும் சரி, கற்காதிருந்தாலும் சரி, தந்தை வைத்தியன் என்றால் தந்தைக்குப் பிறகு மகனும் வைத்தியனாகக் கணிக்கப்பட்டான்; அல்லது வைத்தியம் செய்ய முற்பட்டான்) இந்நிலையில் ஒரு புறம் வைத்தியம் அழியாது பாதுகாக்கப்பட்டது என்றும் கருதலாம். மறுபுறம் குடும்ப இரகசியமாக வைத்திய முறைகள் பல மறைக்கப்படவும் அழிந்து போகவும் வழிகோலியது என்றுங் கூறலாம். இங்ஙனம் வைத்தியமானது குடும்பங்களுக்குள் முடங்கிப் போய்விட்ட சூழ்நிலையில் வைத்தியர்களிடையே சிகிச்சை முறையில் பொதுமைப்பாட்டை (Uniformity) காண்டல் இயலாததாயிற்று. அனுபவ அறிவும், சொந்த கையாட்சி மருந்துகளுமே முக்கியத்துவம் பெற்றிருந்தன.

இத்தகைய ஒரு சூழ்நிலையிலேயே கிறீன் அவர்கள் இங்குள்ள வைத்திய முறைகளைக் கண்ணுற்றிருக்க வேண்டும். முறையான பாடத்திட்டத்திற்கமைய அறிவியல் ரீதியிலான அணுகுமுறையை அவர்கள் பின்பற்றினால் சிறந்த சேவையை மக்களுக்கு வழங்க முடியும் என்று அவர் கருதினார். கிறீன் அவர்கள் 1850 ஆண்டு காலப்பகுதியில் மானிப்பாயில் நிறுவிய தமிழ்மொழி மூலமான வைத்தியக் கல்லூரி (இலங்கையில் நிறுவப்பட்ட முதலாவது ஆங்கில மருத்துவக் கல்லூரி) சுதேச வைத்தியர்களின் கல்வி நிலையையும் மேம்படுத்துவதாக அமைந்தது. சுதேச மருத்துவர்கள் அக்கல்லூரியில் கல்வி பயில்வதற்கும் கிறீன் சந்தர்ப்பம் வழங்கினார்.

கிறீனின் வைத்தியக் கல்லூரியில் கல்வி பயிலாத சித்த வைத்தியர்களும் அக்கல்லூரியினால் மறைமுகமாகவேனும் பயன்பெற்றனர். குறிப்பாக கிறீனால் மொழிபெயர்க்கப்பட்ட அங்காதிபாதம், இந்து பதார்த்த சாரம், இரணசிகிச்சை முதலான நூல்கள் அவர்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தின என்று கருதுவதில் தவறில்லை. அறிவியல் ரீதியாக சித்த மருத்துவம் வளர்க்கப்படல் வேண்டும் என்ற எண்ணமும் அதனால் முளைவிட்டது. கிறீனின் மாணவர்களில் ஒருவரான மானிப்பாயைச் சேர்ந்த C. W. சுப்பிரமணியபிள்ளை என்பவர் 1889 இல் வெளியிட்ட பாலவைத்தியம் என்னும் நூல் சித்த மருத்துவ முறைகளையும் ஆங்கில வைத்தியமுறைகளையும் தழுவி எழுந்த ஒன்று என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இது ஒருபுறமிருக்க, ஆங்கிலேயர் காலத்தில் பொதுக்கல்விக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவத்தாலும், வேலைவாய்ப்புகளாலும் சித்த வைத்தியர்களிற் பலர் தமது பிள்ளைகளை அரசாங்க வேலைகளுக்கு அனுப்பி வைக்க முற்பட்டனர். அதனால் தந்தைக்குப் பின் மகன் என்ற குடும்ப பரம்பரை வைத்தியமுறையும் ஆட்டங்காணத் தொடங்கியது. சித்த வைத்தியர்களிடம் மூலிகை சேகரித்துக் கொடுத்தல், மருந்தரைத்தல் போன்ற உதவிகளைச் செய்து கொடுத்துக் கொண்டிருந்த பலர் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு தாமும் வைத்தியஞ் செய்ய முற்பட்டனர் அதனால் சித்த மருத்துவத்தின் தரம் மேலும் சீரழிந்தது.

இந்நிலையில் சித்தமருத்துவத்தைக் காப்பாற்ற வேண்டுமானால் சித்த வைத்தியக் கல்லூரி ஒன்று அவசியம் என்ற எண்ணம் பலரிடையே எழுந்தது. அதன் பயனாக சுதேச வைத்தியக் கல்லூரிகள் காலப்போக்கில் தோற்றுவிக்கப்பட்டன. அவை பற்றிய விபரத்தை இனி நோக்குவோம்.

1. இலங்கா ஆயுர்வேத சித்த வைத்தியக் கல்லூரி

இலங்கையில் நிறுவப்பட்ட முதலாவது சுதேச வைத்தியக் கல்லூரி இதுவாகும். 1925 ஆம் ஆண்டு வைகாசி மாதம் வைத்திய கலாநிதி ஜே. பஸ்தியாம்பிள்ளை என்பவரால் யாழ்ப்பாண நகரில் இக்கல்லூரி நிறுவப்பட்டது. அரசு உதவியோ, பொதுசன உதவியோ இன்றி அவர் தனது சொந்தப் பணத்தில் இக்கல்லூரியையும் அதனுடன் தொடர்பாக ஒரு வைத்தியசாலையையும் அமைத்தார். இக்கல்லூரியை நிர்வகிப்பதற்கு வட இலங்கை சுதேச வைத்திய சபை (Northern Board of Indigenous Medicine) என ஒரு சபையை அமைத்து அதற்கு சேர். வைத்திலிங்கம் துரைசாமி அவர்களைத் தலைவராக நியமித்தார். சிலகாலம் ஸ்தாபகரே கல்லூரி அதிபராகக் கடமையாற்றிய பின் இந்தியாவிலிருந்து வைத்திய கலாநிதி H. S. ஐயங்கார் DASC அவர்களை அதிபராக நியமித்தார். இந்தியாவிலிருந்தும், யாழ்ப்பாணத்திலிருந்தும் தெரிந்தெடுக்கப்பட்ட சில வைத்திய அறிஞர்கள் விரிவுரையாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

அரசாங்கத்திலிருந்தோ அல்லது பொதுமக்களிடமிருந்தோ ஸ்தாபகர் பண உதவி எதனையும் பெறவில்லை. கல்லூரியுடன் இணைக்கப்பட்ட வைத்தியசாலையில் இருந்தே செலவுக்காகிய பணத்தைச் சம்பாதித்துக் கொண்டார். அவர் தயாரித்த மருந்துகளுள் ''ஒம வாட்டர்'' மாந்த எண்ணெய், மூதண்ட செந்தூரம், கோரோசனை மாத்திரை என்பன யாழ்ப்பாணத்தில் மிகவும் பிரசித்தி பெற்றவை. மாணவர்களின் வருடாந்திரப் பரீட்சையை நடாத்துவதற்காக இந்தியாவில் இருந்து சில பரீட்சகர்களையும் நியமித்தார். அதற்கு Indian Board of Examiners என்று பெயரிட்டார். காலஞ்சென்ற பண்டிதர் மே. துரைசுவாமி ஐயங்கார், AVS வேப்பேரி, சென்னை அவர்கள் அச்சபைக்குத் தலைவராக இருந்தார்.

1951 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இக்கல்லூரியை அரசாங்கம் அங்கீகாரம் செய்து அரசாங்க வர்த்தமானியில் பிரகடனஞ் செய்தது. அதன் பயனாக இக்கல்லூரியில் சித்தியடைந்த சகலபட்டதாரிகளும் ஆயுர்வேத திணைக்களத்தில் எவ்வித பரீட்சையுமின்றிப் பதிவு செய்யப்பட்டனர். எனினும் 1962 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஆயுர்வேத மசோதாவினால் இக்கல்லூரியின் அங்கீகாரம் நீக்கப்பட்டது. கல்லூரியில் சில குறைபாடுகள் இருந்தமையே அதற்குக் காரணமாகும். அதன் பிறகு இக்கல்லூரியின் பட்டதாரிகள் பதிவு பெற்றுக் கொள்வதில் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கினர். முகாமைச் சபையிலுள்ள சில அங்கத்தவர்கள் ஆயுர்வேத ஆணையாளரைப் பேட்டி கண்டு அது பற்றி எடுத்துக் கூறினர். அதன் பயனாக மாணவர்களின் இறுதிப் பரீட்சையை ஆயுர்வேத திணைக்களம் நடாத்தி அதில் சித்திபெற்ற பட்டதாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வைத்தியப் பதிவு செய்யப்படுகிறது.

பரம்பரை வைத்தியர்களின் பிள்ளைகள் வைத்தியம் கற்பதற்கு இக்கல்லூரியில் முன்னுரிமை வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இக்கல்லூரியில் கற்றுத் தேறிய மாணவர்களுக்கு (Diploma in Ayurvedic Medicine) DAM என்னும் பட்டம் வழங்கப்படுகிறது. இங்கு கல்வி பயின்ற நூற்றுக்கணக்கான சித்தவைத்தியர்கள் நாட்டின் பல பாகங்களிலும் தமது சேவையை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக சித்த வைத்தியத்துறைக்கு இக்கல்லூரி அரிய சேவை வழங்கி வந்துள்ளதை எவரும் மறுக்க முடியாது.

இக்கல்லூரியானது தரமுயர்த்தப்பட வேண்டியது அவசியமான தொன்றாகும்.

2. சுதேச வைத்தியக் கல்லூரி-திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (College of Oriental Medicine)

இக் கல்லூரியானது 1935 ஆம் ஆண்டு தை மாதம் தைப்பூசத்தன்று திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் அக்கல்லூரி அதிபர் திரு. எஸ். நடேசபிள்ளை பி. ஏ. பி. எல். அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இக் கல்லூரி அதிபராக வைத்திய கலாநிதி எஸ். எம். பொன்னையா, LIM (Madras) அவர்கள் நியமிக்கப்பட்டார், விரிவுரையாளராக டாக்டர் எஸ் இராமநாதன் LIM (Madras), டாக்டர் எம். குணரத்தினம் LIM (Madras), டாக்டர் எஸ். பொன்னையா FRCS, டாக்டர் ஆ. வைரமுத்து, டாக்டர், பொ. கந்தசாமி, டாக்டர் வி. கனகசபை ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

சிறிது காலம் தாவரவியல், இரசாயனம், பௌதிகம், விலங்கியல், ஆகிய பாடங்களும் கற்பிக்கப்பட்டன. 30 மாணவர்கள் வரை இங்கு கற்று வந்தனர். இக்கல்லூரி விரிவுரையாளர்களின் வேதனம் சரியாகக் கொடுக்கப்படாமையினால் அவர்களில் சிலர் தாமாகவே நின்று விட்டனர். மாணவர் வரவும் படிப்படியாகக் குறைந்து விட்டது. கல்லூரி நிர்வாகம் சரிவர நடத்த முடியாமல் போனதால் 1936 ஆம் ஆண்டு புரட்டாசி மாதத்துடன் இக்கல்லூரி மூடப்பட்டு விட்டது.

3. சுதேச மருத்துவக் கல்லூரி

இக்கல்லூரி 1929 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதி கொழும்பில் பொரளை என்னும் இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது இக்கல்லூரி அமைக்கப்படவேண்டும் என்று சட்டசபையில் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியவர் கௌரவ கே. பாலசிங்கம் அவர்களாவார். (இவரே 1926 ஆம் ஆண்டு சுதேச வைத்திய சபையை அமைத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே அங்கு சித்த, ஆயுர்வேத, யுனானி மருத்துவ முறைகள் மூன்றும் போதிக்கப்பட்டன ஆரம்பத்தில் இக்கல்லூரி சுதேச வைத்திய சபையாலும் (Board of Indigenous Medicine) பின்னர் சுதேச வைத்தியத் திணைக்களத்தாலும் (Department of Indigenous Medicine) பராமரிக்கப்பட்டு வந்தது.

1931 ஆம் ஆண்டு பொரளையில் தற்போது ஆயுர்வேத வைத்தியசாலை அமைந்துள்ள இடத்தில் வெளிநோயாளர் பகுதியுடன் வைத்தியக் கல்லூரியும் வைத்தியசாலையும் கட்டுவதற்கான நிதி உதவியையும், காணியையும் அரசாங்கம் வழங்கியது. கால நீரோட்டத்தில் இக்கல்லூரி பல மாற்றங்களுக்குட்பட்டு வளர்ந்தது. *1941* ஆம் ஆண்டு S. W. R. D. பண்டாரநாயக்காவின் காலத்தில் அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. *1951* ஆம் ஆண்டு Dr. R. B. Lenora கல்லூரித் தலைவராக இருந்தபோது பாடத்திட்டம் ஐந்துவருடங்களுக்குரியதாக மாற்றியமைக்கப்பட்டது. *1977* ஆம் ஆண்டு கலாநிதி பதியுதீன் முகம்மது அவர்கள் கல்வியமைச்சராக இருந்த காலத்தில் சித்திரைமாதம் இரண்டாம் திகதி இக்கல்லூரி இலங்கைப் பல்கலைக்கழகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் ஒரு அங்கமாக மாறியது. தற்போது உயர்கல்வி அமைச்சில் ACT No. *16* of *1978* என்ற சட்டத்தின் கீழ் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கீழ் உள்நாட்டு மருத்துவக் கல்வி நிறுவகமாகச் (Institute of Indigenous Medicine) செயற்பட்டு வருகின்றது.

எனவே, கொழும்பு உள்நாட்டு மருத்துவக் கல்வி நிறுவகமானது இலங்கையின் மூன்று முக்கிய சமூகத்தைச் சேர்ந்தவர்களினாலும் கட்டியெழுப்பப்பட்ட ஒன்றாகும். இங்கு பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களின் குறைந்தபட்ச கல்வித் தகைமையானது க. பொ. த. உயர்தர வகுப்பில் (G. C. E. (A/L) விலங்கியல், தாவரவியல், இரசாயனவியல், பௌதிகவியல் ஆகிய நான்கு பாடங்களிலும் ஒரே தடவையில் சித்தி பெற்றிருக்க வேண்டும் என்பதாகும். ஐந்து வருடப்பட்டப் படிப்பும் ஒரு வருட மருத்துவமனைப் பயிற்சியும் அளிக்கப்பட்ட பின்னர் மாணவர்களுக்கு D. A. M. S. (Diploma in Ayurvedic Medicine and Surgery) என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

1980 ஆம் ஆண்டு பட்டமாணிப்படிப்பிற்கான ஒரு பாடவிதானம் தயாரிக்கப்பட்டு அது *1982* இல் கொழும்புப் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டது. இப்பாடத்திட்டம் அமைப்பதில் முக்கிய பங்காற்றியவர் உலக சுகாதார மையத்தில் ஆயுர்வேத ஆலோசகராகப் பணிபுரியும் பேராசிரியர் குருப் ஆவார். (Prof. P. N. V. Krup, Advisor on Ayurvedic Medicine of the WHO) புதிய பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன.

1) இலங்கை சுதேச மருத்துவ பட்டப்படிப்பை இந்தியப் பல்கலைக்கழக சுதேச மருத்துவக் கல்லூரிகளின் தரத்துக்குக் கொண்டு வருதல்,

2) இதில் பயிலும் மாணவர்கள் தேசிய சுகாதார சேவையில் தமது பங்களிப்பை வழங்க வழிவகுத்தல் என்பனவாகும்.

B. S. M. S. பட்டமாணிப் படிப்பிற்கான பாடத்திட்டம் - 1982

முதலாம் ஆண்டு

பாடம் Subject	அங்கீகரிக்கப்பட்ட பாடநூல்கள் Text Books
1) உயர் தமிழ் (Advanced Tamil)	1) தமிழ் இலக்கிய வரலாறு - செல்வநாயகம் 2) திருமூலர் திருமந்திரம் 3) திருக்குறள் - மருந்து அதிகாரம் 4) தமிழ் இலக்கணம் - ஆறுமுகநாவலர் 5) சித்தரிலக்கியங்கள் (சித்தர் பாடல்கள்)
2) உடற் கூறுகள் (Anatomy)	1) அங்காதிபாதம் 2) Grays Anatomy 3) Ellisis Anatomy
3) உடல் தொழிலியல் (Physiology)	1) உடல் தத்துவம் 2) Applied Physiology - Samson Wrights 3) Human Physiology - Chattergie
4) குணபாடம் (தாவரம்) (Materia Medica) (Vegetable)	1) குணபாடம் (தாவரம்) எஸ். கோவிந்தசாமி முதலியார் 2) பதார்த்த குண சிந்தாமணி - கண்ணுச்சாமி முதலியார்

பாடம் Subject	அங்கீகரிக்கப்பட்ட பாட நூல்கள் Text Books
5) மருத்துவ வரலாறும் அடிப்படைத் தத்துவங்களும் (History and Principles of Medicine)	1) History of Siddha Medicine-Publication of Govt. of Tamil Nadu. 2) சித்தமருத்துவ வரலாறு - வேணுகோபால் 3) Ayurveda Act - Relevant issues
6) மூலதத்துவம் I (Fundermental Principle I)	1) இந்து சமயம் T. M. P. மகாதேவன் 2) Saiva Siththantham - In relation to Science- S. M. Muthaian 3) Methods in Bio-statistics for Medical students - B. K Mahayan
7) மூலதத்துவம் II (Fundermental Principle- II)	1) சித்தமருத்துவாங்கச் சுருக்கம் - உத்தமராயன் 2) Introduction to Kaya Chikitsa - C. Dwaraganath

இரண்டாம் ஆண்டு

1) உயர் தமிழ்	முன் பார்க்க
2) உடல் கூறுகள்	முன் பார்க்க
3) உடல் தொழிலியல்	முன் பார்க்க
4) குணபாடம் (தாவரம்)	முன் பார்க்க

பாடம் Subject	அங்கீகரிக்கப்பட்ட பாடநூல்கள் Text Books
குணபாடம் (தாது) (Materia Medica Mineral Section)	1) குணபாடம் (தாது - சீவ வகுப்பு) ஆர். தியாகராஜன்
அவுடத பாக விதி (Pharmacology and Pharmacognosy)	1) சித்த அவுடத சங்கிரகம் - ஆயுர்வேத திணைக்கள வெளியீடு 2) சுதேச வைத்திய அவுடதத்திரட்டு

மூன்றாம் ஆண்டு

உயர் தமிழ்	முன்பார்க்க
நோய் நாடல் (மூலதத்துவம்) (Medicine)	1) சித்த மருத்துவாங்கச் சுருக்கம் C. உத்தமராயன்
சிகிச்சை, மூலதத்துவம்) (Treatment) :·ue)	2) நோய்நாடல் நோய் முதல்நாடல் திரட்டு 3) யூசிமுனி வைத்திய சிந்தாமணி 4) நோய்களுக்குச் சித்த பரிகாரம் 5) பரராசசேகரம் (முழுவதும்)
4) பிணி இயல் (Pathology include Bacteriology and Parasitology)	1) Text book of Pathology - Muir 2) Hand book of Pathology

பாடம் Subject	அங்கீகரிக்கப்பட்ட பாடநூல்கள் Text Books
5) ஆரோக்கியமும் நோய் அணுகா விதியும் (Community Medicine)	1) அஷ்டாங்க ஹிருதயம் 2) Human Nutrition-Mottram
6) நஞ்சு இயல் (Toxycology)	1) நஞ்சு நூல் - தமிழ்நாடு அரசு வெளியீடு 2) Modern Trends in Toxycology

நான்காம் ஆண்டு

1) நோய் நாடல்-சிகிச்சை I	முன் பார்க்க
2) நோய் நாடல் - சிகிச்சை II	முன் பார்க்க
3) நீதி மருத்துவம்	1) Forensic Medicine-Keeth Simpson
4) பிள்ளைப்பிணி மருத்துவம் (Paediatrics)	1) பால வாகடம் - தமிழ்நாடு அரசு வெளியீடு 2) பாலரோகம் - பரராசசேகரம்
5) சாலாக்கிய தந்திரம் (E. N. T. & Eye and) Diseases	1) அகஸ்தியர் நயன விதி 2) பரராசசேகரம் - சிரரோகங்கள் நயன ரோகங்கள் 3) சரபேந்திர வைத்திய முறைகள் - நயன ரோகம்

பாடம் Subject	அங்கீகரிக்கப்பட்ட பாட நூல்கள் Text Books
6) பரம்பரை மருத்துவம் (Traditional Medicine)	1) பரராசசேகரம் (முழுவதும்) 2) சுதேச வைத்திய அவுடத திரட்டு 3) இருபாலைச் செட்டியார் வைத்திய விளக்கம்

ஐந்தாம் ஆண்டு

1) நோய் நாடல் - சிகிச்சை I	முன் பார்க்க
2) நோய் நாடல் - சிகிச்சை II	முன் பார்க்க
3) மாதர் நோய்கள் (Gynaecology)	1) பரராசசேகரம் - கெர்ப்பரோகம் 2) சரபேந்திர வைத்திய முறைகள் - கெர்ப்பரோகம்
4) சூல் மருத்துவம் (Obstetrics)	1) Obstetrics-Ten Teachers 2) A Short Text book of obstetrics - Gibbard
5) அறுவை மருத்துவம் (Surgery)	1) அறுவை மருத்துவம் - C. உத்தமராயன் 2) அகஸ்தியர் ரண வைத்தியம் 3) Clinical Acupuncture - Anton Jeyasooriya
6) பரம்பரை மருத்துவம்	முன்பார்க்க

இப்பட்டமாணிப்படிப்பிற்கு 1982 - 83 ஆம் கல்வியாண்டில் முதல்தடவையாக மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். இதில் சித்த, ஆயுர்வேத, யுனானி, மருத்துவங்களைக் கற்கும் மாணவர்களுக்கு அவர்கள் தமது கல்வியைப் பூர்த்தி செய்யும் போது முறையே B. S. M. S., B. A. M. S., B. U. M. S., என்னும் பட்டங்கள் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இப்பாடத்திட்டத்தில் தற்போது பின்வருமாறு நெறிமாறுதல்கள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முதலாம ஆண்டு

1. மூலதத்துவம்
2. மருத்துவ வரலாறும் இந்து தத்துவமும்
3. உடற்கூறியல்
4. உடற்றொழிலியல்
5. குணபாடம் (தாவரம்)

இரண்டாம் ஆண்டு

1. உடற்கூறியல்
2. உடற்றொழிலியல்
3. குணபாடம் (தாவரம்)
4. குணபாடம் (தாது - சீவ வகுப்பு)
5. அவுடத பாகவிதி

மூன்றாம ஆண்டு

1. நோய் நாடல்
2. சிகிச்சை
3. பிணியியல்
4. சித்தர் தத்துவங்களும் இலக்கியமும்
5. நீதிமருத்துவமும் நஞ்சியலும்

நான்காம் ஆணடு

1. நோய்நாடல் சிகிச்சை (பொது)
2. நோய் நாடல் சிகிச்சை (சிறப்பு)
3. சாலாக்கிய தந்திரம்
4. குழந்தை மருத்தும்
5. ஆரோக்கியமும் நோய் அனுகாவிதியும்

ஐந்தாம் ஆண்டு

1. நோய் நாடல் சிகிச்சை (பொது)
2. நோய் நாடல் சிகிச்சை (சிறப்பு)
3. மகப்பேற்றியல்
4. மாதர் நோய்கள்
5. அறுவை மருத்துவம்

சித்த மருத்துவப் பிரிவானது ஆரம்பத்திலிருந்தே பொரளை உள்நாட்டு மருத்துவக் கல்வி நிறுவகத்தில் செயற்பட்டு வந்த போதிலும் அதனை யாழ்ப்பாணத்திற்கு மாற்ற வேண்டும் என்ற கருத்தும் பலகாலமாக இருந்துவந்தது. ஏனெனில் சித்த மருத்துவர்களும், சித்த மருத்துவ பாரம்பரியமும் யாழ்ப்பாணத்தில் அதிகமிருந்ததனால் என்க. எனவே, சித்த மருத்துவமானது கொழும்பிலும் பார்க்க யாழ்ப்பாண மண்ணில்தான் நன்கு வளர்ச்சியடையும் என்ற கருத்து பலராலும் முன் வைக்கப்பட்டது. ஆயினும் இதைச் செயற்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுக் கொண்டேயிருந்தது.

1983 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் ஏற்பட்ட கலவரங்களை அடுத்து யாழ்ப்பாணத்திற்கு இடம்பெயர்ந்த சித்த மருத்துவ மாணவர்களும், விரிவுரையாளர்களும் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாகவும், அப்போதைய யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், சித்த மருத்துவத்துறைத் தலைவர் சித்த மருத்துவ கலாநிதி சு. பவானி, யாழ் பல்கலைக்கழகப் பதிவாளர் என். சிவராசா ஆகியோரின் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளினாலும், பொரளை உள்நாட்டு மருத்துவக் கல்வி நிறுவகத்தின் பரிபாலன சபையின் பொர்சின் பயனாகவும் உயர்கல்வி அமைச்சின் அனுமதியுடன் 1984 ஆம் ஆண்டு ஆடிமாதம் இரண்டாம் தேதி சித்த மருத்துவத்துறையானது கொழும்பு உள்நாட்டு மருத்துவக் கல்வி நிறுவகத்திலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டது. புதிய பிரிவை யாழ் பல்கலைக்கழக மூதவையும், பேரவையும், அங்கீகரித்தன. சித்த மருத்துவத்துறையானது யாழ் பல்கலைக்கழகத்தின் ஒரங்கமாகக் கைதடியில் செயற்பட ஆரம்பித்தது. எனினும், கைதடி சித்த மருத்துவத்துறையில் விரிவுரைகள் 1985 ஆம் ஆண்டு தை மாதம் 21ம் திகதியே ஆரம்பமாகின. 1983ம் ஆண்டு ஜூலையில் கொழும்பிலிருந்து இடம்பெயர்ந்த சுமார் 50 சித்த மருத்துவ மாணவர்கள் ஒன்றரை வருட காலம் பொறுமையுடன் காத்திருந்து தமது சித்த மருத்துவக் கல்வியைத் தொடர்ந்தனர்.

1989ம் ஆண்டு சித்திரை மாதம் நடைபெற்ற முதலாவது B.S.M.S இறுதிப் பரீட்சையில் தோற்றிய ஐந்து மாணவர்கள் B.S.M.S பட்டம் பெறும் தகுதியைப் பெற்றனர். அதன் பின்னர் 1997 வரை ஏழு தொகுதி மாணவர்கள் இத்துறையிலிருந்து B.S.M.S பட்டதாரிகளாகப் பட்டம் பெற்றுள்ளனர்.

B.S.M.S பட்டமாணிக் கற்கைநெறியே தற்போது இலங்கையிலுள்ள அதியுயர் சித்த மருத்துவக் கற்கைநெறியாக உள்ளது. இப்பட்டம் பெற்றோரில் கணிசமானோர் சித்த மருத்துவ அதிகாரிகளாகவும் பணிபுரிகின்றனர். ஏறத்தாழ ஐம்பது சதவீதத்தினர் (எவ்வித வேலை வாய்ப்புகளுமின்றி) தனிப்பட்ட முறையில் வைத்தியத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். சித்த மருத்துவத்தில் பட்டபின்படிப்பு (Post Graduate Studies) மேற்கொள்வதற்குரிய வசதிகள் இன்னும் ஏற்படுத்தப்படவில்லை.

எனவே, இவர்கள் தமிழ்நாடு டாக்டர் எம். ஜி. ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயற்படும் பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியையே தமது பட்டமேற்படிப்பிற்கு நம்பியிருக்க வேண்டியுள்ளது. வருங்காலத்தில் சித்த மருத்துவ பட்டமேற்படிப்புத் துறைகள், ஆராய்ச்சிப் பிரிவுகள் என்பன இங்கு ஏற்படுத்தப்படும்போது சித்த மருத்துவக்கல்வி வளர்ச்சி துரித கதியில் நடைபெறும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இலங்கையில் சுமார் எழுபத்தைந்து ஆண்டுகளாக புகழ்பெற்ற இருகல்லூரிகள் சித்தமருத்துவர்களை உருவாக்கி வந்துள்ளன. அப்படி இருந்தும் சித்தமருத்துவ வளர்ச்சி பற்றி அடிக்கடி கவலையுடன் பேசப்பட்டுவரும் ஒரு நிலையையும் காணமுடிகிறது. இக்கல்லூரிகள் எதிர்நோக்கும் முக்கியமான சில பிரச்சனைகள் பற்றி இங்கு எடுத்துக் கூறுவது பொருத்த முடையது. முதலாவதாக சித்த மருத்துவ மாணவர்களுக்கு போதிய பாடநூல்கள் இல்லாதிருப்பது பெருங்குறைபாடாகும். மாணவர்களின் பாடத்திட்டத்தில் கூறப்பட்டுள்ள நூல்களிற் பல கிடைப்பதற்கு அரிதாகவுள்ளன. நூலகத்திலுள்ள ஒரு சில நூல்களை வைத்துக் கொண்டு அனைத்து மாணவர்களும் பயன் பெறுதல் இயலாத காரியமாகும். எனவே, தமிழ்நாட்டு சித்தமருத்துவப்பாட நூல்களை மாணவர்களுக்குப் போதியளவில் கிடைப்பதற்கு வழி செய்தல் வேண்டும். அத்துடன் ஈழத்துச் சித்தமருத்துவ நூல்களான பரராசசேகரம், செகராசசேகரம் முதலியன பாடத்திட்டத்தில் இடம்பெற்றிருந்தும் அவையும் காண்பதற்கே அரிதாகப் போய்விட்டன. அதிஷ்டவசமாக இலங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக்கல்லூரி இவ்விடயத்தில் எடுத்துக் கொண்ட பெருமுயற்சியினால் பரராசசேகரம் நூலின் சில பாகங்கள் 1999 ஆம் ஆண்டில் மறுபதிப்பாக வெளிவந்துள்ளன.

தென்னிலங்கையில் ஆயுர்வேத வைத்தியர்கள் சுறுசுறுப்புடன் செயற்பட்டு நூல்களை எழுதுவதாலும் ஆயுர்வேத வைத்தியத் திணைக்களம் அவற்றை அச்சிடுவதில் உதவி செய்வதாலும் சிங்களமொழியில் ஆயுர்வேத வைத்திய நூல்களிற்பல வெளிவந்து ஆயுர்வேத மாணவர்களுக்கும் வைத்தியர்களுக்கும் பெரிதும் பயன்படுகின்றன. சித்தமருத்துவத்தைப் பொறுத்தவரையில் அண்மைக்காலத்தில் ''ஏட்டுவைத்தியம்'' என்ற ஒரு நூல் மட்டுமே ஆயுர்வேத வைத்தியத் திணைக்களத்தின் உதவியுடன் அச்சில் வெளிவந்துள்ளது. ஏட்டுப்பிரதிகள் அச்சில் வெளிவருவது மட்டுமன்றி புதிய நூலாக்கங்களும் இடம்பெறுதல் அவசியமாகும். இது பற்றியும் பின்னர் விரிவாக ஆராயப்படும்.

அடுத்து பல்கலைக்கழகச் சித்தமருத்துவத்துறைக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படும் விடயத்தில் மாறுதல் செய்தல் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். தற்போது சித்தமருத்துவம் ஒரு பட்டமாணிப் பயிற்சி நெறியாக இருக்கின்றபோதிலும் தனிப்பட்டமுறையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டே மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இந்நிலையை மாற்றி பல்கலைக்கழகத்தின் ஏனைய துறைகளுக்கு மாணவர்களைதெரிவு செய்யப்படுவது போன்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஊடாக (உயர் கல்வி அமைச்சு) தெரிவு செய்யப்பட்டால் இன்னும் கூடுதலான மாணவர்கள் இத்துறையில் கல்விபயில முன்வருவர். தமிழ்நாட்டில் பல்கலைக்கழக புகுமுகத்தேர்வில் சித்தி பெற்ற மாணவர்களில் பெரும்பாலோர் அலோபதி மருத்துவத்துக்கு அடுத்தபடியாக சித்தமருத்துவக் கற்கை நெறியையே தெரிவு செய்வதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அதுபோலவே சித்தமருத்துவத்துறைக்கு விரிவுரையாளர்கள் நியமனம் பெறும்போது ''சித்தமருத்துவத்தில் விரிவுரையாளர்'' என்று பொதுவாகவே தெரிவு செய்யப்படுகின்றனர். ஆனால், சித்த மருத்துவத்தில் பல்வேறு பிரிவுகள் உள்ளதால் அவ்வத் துறைக்கென விரிவுரையாளர்களைப் பிரத்தியேகமாகத் தெரிவு செய்வது விரும்பத்தக்கது. உதாரணமாக மருத்துவம், குணபாடம் எலும்பு முறிவுநெரிவுதுறை, நஞ்சியல், நோய்நாடல், குழந்தை மருத்துவத்துறை விரிவுரையாளர் எனத்தெரிவு செய்யப்படலாம்.

இத்துறைகளில் நிபுணத்துவம் பெற்ற விரிவுரையாளர்கள் இல்லாவிட்டால் புதிதாகத் தெரிவுசெய்யப்படும் விரிவுரையாளர்கள் அவ்வத்துறைகளில் நிபுணத்துவம் பெறும் வகையில் அவர்களுக்கு பட்டமேற்படிப்பு வசதிகளைச் செய்து கொடுக்கலாம்.

மேலும் தற்போது சித்த மருத்துவத்துறையானது யாழ் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தரின் கீழ் ஒரு தனிப்பிரிவாகவே செயற்பட்டு வருகிறது. இப்பிரிவானது சித்தமருத்துவப் பீடமாக வளர்ச்சி பெற்று, பல்வேறு சிறப்புச் சித்தமருத்துவப்பிரிவுகளும் தனித்தனி Departments ஆக வளர்ச்சி பெறுவதும் அவசியமாகின்றது. மாணவர்களினது தொகையை அதிகரிப்பதன் மூலமும் ஒவ்வொரு துறையிலும் நிபுணத்துவம் பெற்ற விரிவுரையாளர்களை நியமிப்பதன் மூலமுமே இவை சாத்தியமாகும்.

4. சித்த போதனா வைத்தியசாலை

ஈழத்துச் சித்தமருத்துவ வளர்ச்சியிலும், யாழ் பல்கலைக்கழகச் சித்த மருத்துவத் துறையின் வளர்ச்சியிலும் சித்த போதனாவைத்திய சாலையின் முக்கியத்துவத்தையும், பங்களிப்பையும் எடுத்துக் கூறுவது அவசியமாகின்றது. நோயாளர்களுக்குச் சிகிச்சையளிப்பதுடன் நின்றுவிடாது மக்களின் சுகாதாரம், நல்வாழ்வு என்பவற்றைப் பேணுவதிலும் இவ்வைத்தியசாலை செயற்படுகிறது. சித்தமருத்துவ மாணவர்கள் தமது வைத்தியசாலைச் செய்முறைப் பயிற்சி அனுபவங்களைப் பெறுவதற்கும், சித்த மருத்துவப் பட்டப்படிப்பை பூர்த்தி செய்த மாணவர்கள் தமது ஓராண்டுகால உள்ளகப் பயிற்சியினைப் பெறுவதற்கும், சித்த மருத்துவத்துறை விரிவுரையாளர்களும், சித்தமருத்துவர்களும் இத்துறையில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் சித்தபோதனா வைத்தியசாலை முக்கிய இடம் பெறுகிறது.

கைதடியில் அமைந்துள்ள அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலையானது இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிரதேசத்துக்குரிய ஒரேயொரு சுதேச சித்த வைத்தியசாலையாகும். இவ்வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவானது 1973 ஆம் ஆண்டு ஆனிமாதம் 29 ஆம் திகதி அப்போதைய சுகாதார அமைச்சர் கௌரவ W. D G. ஆரியதாச அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பின்னர் 1978 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 2 ஆம் தேதி ஆயுர்வேத ஆணையாளர் திரு. B. P. வேரகொட அவர்களால் உள்நோயாளர் சிகிச்சைப் பிரிவானது திறந்து வைக்கப்பட்டது. அது 150 படுக்கை வசதிகளையும், மகப்பேற்று விடுதியையும் கொண்டதாக அமைந்திருந்தது. ஆரம்ப காலங்களில் மகப்பேற்று விடுதியிலும் சாதாரண பெண் நோயாளர்களே அனுமதிக்கப்பட்டனர். எனினும் 1990 ஆம் ஆண்டு கார்த்திகை மாதத்திலிருந்து மகப்பேற்று விடுதியானது அதன் பெயருக்கு ஏற்ப இயங்க வைக்கப்பட்டது. பிரசவத்திற்காக கர்ப்பிணிப் பெண்கள் இதில் அனுமதிக்கப்பட்டனர். அத்துடன்

கர்ப்பிணித்தாய்மார்களுக்கான கிளினிக்கும் (Ante natal Clinic) தொடக்கி வைக்கப்பட்டது. மேலும் 1990 ஆம் ஆண்டிலிருந்து இரண்டாம், மூன்றாம் விடுதிகள் பல்கலைக்கழக விடுதிகள் என்ற அந்தஸ்தைப் பெற்றன.

1993 ஆம் ஆண்டு ஆடிமாதம் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு, பஞ்சகர்ம சிகிச்சைப் பிரிவு என்பன ஆரம்பிப்பதற்கு ஆயுர்வேத ஆணையாளரின் அனுமதி பெறப்பட்டது. அதில் பஞ்சகர்ம சிகிச்சைப் பிரிவை விடுதி ஒன்றுடன் இணைத்தும், குழந்தைகள் சிகிச்சைப் பிரிவை விடுதி நான்குடன் இணைத்தும் தொடங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் நடைமுறைச்சிக்கல்கள் காரணமாக அவற்றைச் செயற்படுத்த முடியவில்லை. 1993 ஆம் ஆண்டு இவ்வைத்தியசாலை சித்தபோதனா வைத்தியசாலை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. எனினும் இலங்கை மத்திய அரசாங்கத்தில் ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் இவ்வைத்திய சாலை நிர்வகிக்கப்படுவதால் அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலை என்ற பொதுப் பெயரும் வழக்கிலுள்ளது.

1985 ஆம் ஆண்டு முதல், யாழ் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவத்துறையானது இவ்வைத்தியசாலைக்கு அடுத்துள்ள கட்டடத்தில் இயங்கத் தொடங்கியதுடன் இவ்வைத்தியசாலையின் முக்கியத்துவம் நன்கு உணரப்பட்டது. சித்த மருத்துவ மாணவர்கள் தமது வைத்தியசாலைப் பயிற்சியினை இங்குதான் பெறுகின்றனர். சித்தமருத்துவப் பட்டதாரிகள் தமது ஓராண்டுகால மருத்துவமனைப் பயிற்சியினை பெறுவதற்கும் இவ்வைத்தியசாலை பேருதவியாக இருந்து வருகிறது.

வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு:-

தமிழ் மக்களிற் கணிசமானோர் சுதேச வைத்தியத்தில் கொண்டுள்ள நம்பிக்கையைப் பல இடங்களிலிருந்தும் இங்கு சிகிச்சைபெறவரும் நோயாளர்களைக் கொண்டு அறிந்து கொள்ள முடியும். யாழ் குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் மட்டுமன்றி அதற்கு அப்பால் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பல இடங்களிலிருந்தும் நோயாளர்கள் இங்கு வந்து சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். எனினும் யாழ் குடாநாட்டை நாட்டின் ஏனைய பகுதிகளுடன் இணைக்கும் யாழ் கடல் நீரேரிப்பகுதி 1990 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பிரயாணத்திற்குத் தடை செய்யப்பட்ட பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு, போக்குவரத்துப் பிரச்சினைகளும் ஏற்பட்டதால் நாட்டின் ஏனைய

பாகங்களிலிருந்து இங்கு சிகிச்சை பெறவரும் நோயாளர்களின் எண்ணிக்கை மிகவும் வீழ்ச்சி அடைந்தது. அதே சமயம் யாழ்குடா நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் யுத்த அனர்த்தங்களினால் இடம் பெயர்ந்த மக்களிற் பலர் இவ்வைத்தியசாலையை அண்மித்த பகுதிகளில் வந்து தஞ்சமடைந்ததால் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் தொகை இன்னொரு விதத்தில் அதிகரித்தது.

1980 ஆம் ஆண்டிலிருந்து 1996 ஆம் ஆண்டு வரை வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற நோயாளர் விபரத்தை அட்டவணை 1 லிருந்து அறிந்து கொள்ளலாம்.

அட்டவணை 1

வெளிநோயாளர் பிரிவு வருகை

ஆண்டு	முதல்வருகை	தொடர்வருகை	மொத்தம்
1980	n.a.	n.a.	27,422
1981	n.a.	n.a.	22,987
1982	n.a.	n.a.	21,556
1983	n.a.	n.a.	n.a.
1984	n.a.	n.a.	n.a.
1985	7,947	4,298	12,245
1986	7,460	6,646	14,106
1987	5,100	4,939	10,039
1988	5,813	6,552	12,365
1989	6,915	6,353	13,268
1990	9,262	6,902	16,164
1991	12,328	9,047	21,375
1992	10,434	5,435	15,869
1993	11,064	17,909	28,976
1994	20,971	9,418	30,389
1995	27,584	20,173	47,757
1996	24,367	19,088	43,455

n.a. — Data not available

புதிய நோயாளர்கள், தொடர்சிகிச்சைக்கு வரும் நோயாளரும் கணிசமான அளவில் உள்ளனர். முக்கியமாக வாதரோகங்கள் (மூட்டுவாதம் முதலியன), பீனிசம், தொய்வு, சர்ம நோய்கள் போன்றவற்றிற்குத் தொடர்ந்து சிகிச்சை பெறுவதற்காகத் தொடர் நோயாளர்கள் வருகின்றனர். ஆயினும் அவற்றுக்கான சிறப்புச் சித்த மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் எதுவும் வெளி நோயாளர் பிரிவில் இல்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

வெளிநோயாளர் பிரிவைப் பொறுத்த வரையில் பால், வயது வேறுபாடுகளின்றிப் பலதரப்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற வருகின்றனர். பல்வேறு நோய்களுக்கும் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். எனினும், மூட்டுவாதம், பாரிசவாதம், அழல்வாதம், பாண்டு, முகவாதம், இளைப்பிருமல், மதுமேகம், கிருமி, வாதசுரம், பீனிசம், மூலநோய், சர்மநோய்கள், சுவாச நோய்கள், வெள்ளைபடுதல், பெரும்பாடு, இரைப்பை அழற்சி, கிரந்தி, கரப்பான் போன்ற நோய்களுக்குச் சிகிச்சை பெறுவதற்கே அதிகளவில் நோயாளர்கள் வருகின்றனர். அண்மைக்காலங்களில் யுத்த அனர்த்தங்களினால் ஏற்பட்ட உளநெருக்கீடுகள் (Stress) மெய்ப்பாட்டு நோய்கள் (Somatization), மனவடு (PTSD) மற்றும் உளநோய்களுக்குள்ளான நோயாளர்கள் கணிசமான அளவில் வருகின்றனர். அவர்களிற் பெரும்பாலோரை யாழ். போதனா வைத்தியசாலை உளமருத்துவ சிகிச்சைப்பிரிவுக்குச் செல்லுமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. மெய்ப்பாட்டு நோயாளர்களுக்கு உடல்தேற்றி, நரம்புரமாக்கி செய்கையுள்ள மருந்துகளும் வெளிப்பிரயோக எண்ணெய்களும் வழங்கப்படும்போது கணிசமான முன்னேற்றம் காணப்பட்டது. ஆயினும் இது தொடர்பான மேலாய்வுகள் அவசியமாகின்றன.

1995 கார்த்திகை மாதத்தில் ஏற்பட்ட வலிகாமம் பெரும்புலம் பெயர்வினை அடுத்து இவ்வைத்தியசாலையில் சிகிச்சை பெறவரும் நோயாளர்களின் எண்ணிக்கை என்றுமில்லாதவாறு அதிகரித்தது. 1995 கார்த்திகை மாதம் முதல் 1996 மாசி மாதம் வரையான நான்கு மாத காலப்பகுதியில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை 17,473 ஆகும். (பிரச்சினைகள் காரணமாக இக்காலத்தில் வெளிநோயாளர் பிரிவு காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை தினமும் மூன்று மணித்தியாலங்களுக்கு மட்டுமே செயற்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது) 1995 ஆம் ஆண்டின் மொத்த நோயாளர் தொகையுடன் ஒப்பிடுகையில் இது ஏறத்தாழ அரைவாசியாகும். இங்ஙனம் நோயாளர் தொகை அதிகரித்தமைக்கு ஆங்கில மருந்துகளுக்கு நிலவிய தட்டுப்பாடும், ஆங்கில மருத்துவமனைகள் சரிவர இயங்காத நிலையும் மட்டும் காரணம் என்று கூறிவிட முடியாது. ஏனெனில், சாவகச்சேரி, மந்திகை அரசினர் ஆங்கில வைத்தியசாலைகளுக்கு அருகில் வசித்தவர்கள் கூட வெகுதூரம் பிரயாணஞ் செய்து இவ்வைத்தியசாலைக்குச் சிகிச்சைபெற வந்திருக்கிறார்கள் என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. உண்மையில் ஆங்கில மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவியது போலவே சித்த ஆயுர்வேத மருந்துகளுக்கும் இக்காலத்தில் தட்டுப்பாடு நிலவியது. சித்த வைத்தியத்தில் மக்களுக்கிருந்த நம்பிக்கை போர்ச்சூழலில் மேலும் அதிகரித்ததே அதிக எண்ணிக்கையில் அவர்கள் சித்தவைத்தியத்தை நாடக்காரணம் எனலாம்.

வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைபெறவரும் நோயாளர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தமது நோய்களுக்குப் பொது வைத்தியர்களிடமே சிகிச்சைப் பெறவேண்டியவர்களாகவுள்ளனர். நிபுணத்துவ சேவைகளோ, சிறப்புச் சிகிச்சைப் பிரிவுகளோ, இங்கு இல்லை என்றே கூறலாம். 1990 ஆம் ஆண்டிலும் 1992 ஆம் ஆண்டிலும் முறிவு நெரிவு வைத்தியம், விஷக்கடி வைத்தியம் என்பவற்றுக்கான பரம்பரை வைத்தியர்களின் சிகிச்சைகளுக்கென்று தனியான பிரிவுகள் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் நேர்முகத் தேர்வின் போது சிறப்பு மருத்துவம் செய்யும் வைத்தியர்களில் பலர் சமுகமளிக்கத் தவறியமையாலும், தெரிவு செய்யப்பட்ட இருவர் ஒழுங்காகத் தமது கடமைகளுக்குச் சமுகமளிக்காமையாலும், அவர்களின் சிகிச்சைகளுக்கு அவசியமான மருந்துகள் செய்வதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படாமையாலும் இம்முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

குழந்தைகள் சிகிச்சைப்பிரிவு:

வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைபெறவரும் நோயாளர்களுள் 15 — 20% வீதத்தினர் குழந்தைகளாக இருப்பது குறிப்பிடத்தக்கது. 1993 ஆம் ஆண்டு ஆனிமாதம் முதல் 1994 ஆம் ஆண்டு வைகாசி மாதம் வரையுள்ள பன்னிரண்டு மாத காலப்பகுதியில் எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்களின்படி வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற குழந்தைகளின் விபரத்தையும் (14 வயதுக்கு உட்பட்ட) அதே காலப்பகுதியில் வெளிநோயாளர் பகுதியில் சிகிச்சை பெற்ற மொத்த நோயாளர்களில் குழந்தைகளின் வீதத்தையும் அட்டவணை II எடுத்துக் காட்டுகிறது.

அட்டவணை II

குழந்தைப் பிணியாளர் விபரம்

மாதம்		முதல் வருகை	தொடர் வருகை	மொத்தம்	விதம்
ஆனி	1993	204	271	475	17
ஆடி	1993	151	161	312	11
ஆவணி	1993	285	286	571	19
புரட்டாதி	1993	301	222	523	17
ஐப்பசி	1993	244	129	373	14
கார்த்திகை	1993	184	202	386	17
மார்கழி	1993	221	174	395	16
தை	1994	290	116	406	15
மாசி	1994	165	108	273	10
பங்குனி	1994	310	198	408	12
சித்திரை	1994	295	201	496	18
வைகாசி	1994	293	215	508	15

தோல்வியாதிகள், சுவாசநோய்கள், கிரந்தி, ஜீரணக்கோளாறுகள் போன்ற பல்வேறு வியாதிகளுக்குச் சிகிச்சை பெறுவதற்காக குழந்தைகள் இங்கு அழைத்து வரப்படுகின்றனர்.

விரண சிகிச்சைப் பிரிவு:

விரண சிகிச்சைக்கெனத் தனியான பிரிவு ஏதும் இல்லாத போதிலும், வெளிநோயாளர் பிரிவின் ஒரு பகுதியில் நோயாளர்களின் நன்மைகருதி 1994 ஆம் ஆண்டிலிருந்து விரணசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பல்வேறு வகையான விரணங்கள், நோவு (Traumatic Pain), கட்டு, புண்கள் முதலியவற்றிற்கு இப்பிரிவில் சிகிச்சையளிக்கப்படுகிறது. இதில் பயன்படுத்தப்படும் மருந்துகள் யாவும் வைத்தியசாலை மருந்தகத்திலேயே தயாரிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டதும், வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைபெறவரும் நோயாளரின் தொகை அதிகரிப்பதற்கு ஒரு காரணம் என்று கூறலாம். 1995 கார்த்திகை மாத வலிகாமம் இடம்பெயர்வின் போது பல வழிகளாலும் காயப்பட்டவர்களுக்குச் சிகிச்சையளிப்பதில் இப்பிரிவு சிறந்த சேவையாற்றியுள்ளது. (அட்டவணை III பார்க்க) எதிர்காலத்தில் சிறு அறுவைச்சிகிச்சைப் பிரிவாக (Minor Surgery) இதனை விருத்தி செய்வது மிகவும் நன்மைபயப்பதாக அமையும்.

அட்டவணை III

விரண சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்ற நோயாளர் விபரம்

ஆண்டு/ மாதம்	1994	1995
தை	20	79
மாசி	29	44
பங்குனி	13	65
சித்திரை	37	56
வைகாசி	12	64
ஆனி	99	28
ஆடி	73	83
ஆவணி	46	38
புரட்டாதி	30	31
ஐப்பசி	53	185
கார்த்திகை	64	243
மார்கழி	103	74
மொத்தம்	578	990

எனவே, சிறப்புச் சித்தமருத்துவ சிகிச்சைப் பிரிவுகளை அமைத்து, நிபுணத்துவ சேவைகளை நோயாளர்களுக்கு வழங்குவதன் மூலம் இவ்வைத்தியசாலையின் தரத்தை மேலும் உயர்த்த முடியும். அதுமட்டுமன்றி சித்த மருத்துவம் பயிலும் மாணவர்கள் ஒவ்வொரு துறையிலும் சிறந்த பயிற்சிகளைப் பெறவும் இது வழிவகுக்கும். யாழ். பல்கலைக்கழகத்தில் சித்த மருத்துவத்துறை செயற்படத் தொடங்கி பத்து ஆண்டுகளுக்கு மேலாகியும் அதன் வளர்ச்சி கணிசமான அளவிற்கு மேல் அதிகரிக்காமல் இருப்பதற்கு மாணவர்களுக்கு இத்தகைய சிறப்பு மருத்துவத் துறைகளில் போதுமான அளவிற்குச் செய்முறைப் பயிற்சிகள் வழங்கப்படாமையும் ஒரு காரணம் எனலாம். ஏனெனில் சித்தமருத்துவத் துறையின் வளர்ச்சியை மதிப்பிடுவதற்கு அங்கிருந்து வெளியேற்றப்படும் சித்த பட்டதாரி மருத்துவர்களே முக்கிய அளவுகோலாக விளங்குகின்றனர். அவர்களிடமிருந்து மருத்துவ சேவையைச் சமூகம் அதிகளவில் எதிர்பார்க்கின்றது. அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கு வேண்டிய அறிவும், அநுபவமும் அவர்களுக்கு மாணவப் பருவத்திலேயே வழங்கப்படல் வேண்டும். அதற்குப் போதனா வைத்தியசாலை சகல வசதிகளுடனும் செயற்படல் அவசியமாகும். எனவே, இவ்வைத்தியசாலையில் நோயாளர்களின் தேவைகருதி ஆரம்பிக்கப்படவேண்டிய முக்கிய சிகிச்சைப் பிரிவுகள் வருமாறு.

1. குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு
2. பெண்ணோயியல் சிகிச்சைப் பிரிவு
3. கண்வைத்திய சிகிச்சைப் பிரிவு
4. சிறு அறுவை மருத்துவ சிகிச்சைப் பிரிவு
5. முறிவு நெரிவு சிகிச்சைப் பிரிவு
6. விஷவைத்திய சிகிச்சைப் பிரிவு
7. வாதரோக சிகிச்சைப் பிரிவு
8. நீரிழிவு சிகிச்சைப் பிரிவு
9. சர்மரோக சிகிச்சைப் பிரிவு
10. உளநோய் சிகிச்சைப் பிரிவு

உள்நோயாளர் சிகிச்சைப் பிரிவு

வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவைப் போலவே உள்நோயாளர் சிகிச்சைப்பிரிவிலும்சிகிச்சைபெறவரும்நோயாளர்களின் எண்ணிக்கை 1990 ஆம் ஆண்டிற்குப் பிறகு படிப்படியாக அதிகரித்து வந்துள்ளது (அட்டவணை IV, V பார்க்க). முக்கியமாக பெண் நோயாளர்களின் தொகை இக்காலத்தில் கணிசமான அளவில் அதிகரித்துள்ளமை

அட்டவணை IV

உள்நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றோர் விபரம்

நோயாளர் / ஆண்டு	ஆண்கள்	பெண்கள்	கர்ப்பிணிகள்	மொத்தம்
1985	340	142	—	482
1986	374	122	—	496
1987	153	39	—	192
1988	113	155	—	159
1989	241	220	—	461
1990	278	208	18	504
1991	319	220	190	729
1992	319	195	119	633
1993	372	201	104	677
1994	364	236	102	702
1995	394	252	199	845
1996	n.a	n.a	n.a	n.a

குறிப்பு:- 1987 ஐப்பசி மாதத்திலிருந்து 1988 வைகாசி வரை உள்நாட்டுக் குழப்பத்தினால் வைத்தியசாலை சீராக இயங்கவில்லை.

1995 கார்த்திகை, மார்கழி மாதங்களின் பின் 1996 மே மாதம் வரை உள்நோயாளர் பிரிவு சீராக இயங்கவில்லை.

குறிப்பிடத்தக்கது. உள்நோயாளர் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெறும் நோயாளர்களுக்கு விடுதி வைத்தியர் (Ward Physician) விதிப்பதற்கு இணங்க தைலம் பூசுதல் (Oil application), ஒத்தடம் (Fomentation), உடற்பயிற்சி (Physiotherapy) என்பன கொடுக்கப்படும். ஆனால் இவற்றில் பயிற்சிபெற்ற ஊழியர்கள் இருவர் மட்டுமே இங்கு தற்போது கடமையில் உள்ளனர். மேலும் சில ஊழியர்கள் இத்துறையில் பயிற்சியளிக்கப்பட்டால் நோயாளர்களுக்கு மிகுந்த நன்மைகிட்டும். அத்துடன் வெளிநோயாளர் பிரிவைப் போலவே உள்நோயாளர் பிரிவிலும் சிறப்பு மருத்துவ சிகிச்சைப் பிரிவுகளை ஆரம்பித்து நிபுணத்துவ சேவைகளுக்கு வழிசெய்து கொடுக்கப்பட வேண்டியுள்ளது.

அட்டவணை V

உள்நோயாளர், வெளிநோயாளர் பிரிவுகளில்
சிகிச்சை பெற்றோர் விபரம்

ஆண்டு	வெளிநோயாளர் பிரிவு	உள்நோயாளர் பிரிவு
1980	27422	806
1981	22987	613
1982	21556	834
1983	n.a	n.a
1984	n a	n.a
1985	12245	482
1986	14106	496
1987	10039	192
1988	12365	159
1989	13268	461
1990	16164	504
1991	21375	729
1992	15869	633
1993	28976	702
1994	30389	702
1995	47757	845
1996	43455	n a

மகப்பேற்று விடுதி

1990 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து இவ்வைத்தியசாலையில் மகப்பேற்று விடுதியானது செயற்பட ஆரம்பித்தது. வைத்தியசாலைச் சுற்றாடலில் வசித்து வரும் மக்களுக்கு மட்டுமன்றி தென்மராட்சியின்

பல்வேறு பகுதிகளிலும் வாழும் மக்களுக்கும், இடம்பெயர்ந்து அகதிமுகாங்களில் வாழும் மக்களுக்கும் இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்றே கூறவேண்டும். அதுமட்டுமின்றி சித்தமருத்துவ இறுதியாண்டு மாணவர்கள் தமது மகப்பேற்றுப் பாடத்தைக் கற்பதற்கும் நேரடி அனுபவம் பெறுவதற்கும் வாய்ப்பாக அமைந்துள்ளது.

இவ்விடுதி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 1996 ஆம் ஆண்டுவரை இங்கு பிரசவத்திற்கு வந்திருந்த தாய்மார்களின் விபரத்தையும் ANC க்கு வருகை தந்த கர்ப்பிணிகளின் விபரத்தையும் அட்டவணை VI எடுத்துக் காட்டுகிறது. குறிப்பாக 1996 ஆம் ஆண்டு குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இடம்பெயர்ந்து வைத்தியசாலைக்கு அருகாமையில் குடியேறிய கர்ப்பிணிப் பெண்களுக்கும் 1995 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் வலிகாமம் இடம்பெயர்வின் போது இன்னலுற்று வந்த கர்ப்பிணிகளுக்கும் இவ்விடுதி சிறந்த சேவையாற்றியுள்ளது. 1995 ஆம் ஆண்டு கார்த்திகை, மார்கழி மாதங்களில் உள்நோயாளர் பிரிவில் மகப்பேற்று விடுதி மட்டுமே செயற்பட்டது குறிப்பிடத்தக்கது. இவ்வருடத்தின் கடைசி மூன்று மாதங்களில் நடைபெற்ற பிரசவங்களின் எண்ணிக்கை 72 ஆகும்.

அட்டவணை VI

ஆண்டு	முதல் வருகை	தொடர் வருகை	பிரசவம்
1990	48	62	18
1991	210	760	190
1992	164	600	119
1993	79	256	104
1994	114	370	102
1995	178	522	199

மருத்துவ ஆய்வுகூடம்

நோய்களை நிதானிப்பதில் மருத்துவ ஆய்வுகூடத்தின் உதவி இன்றியமையாத ஒன்றாகும். விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்தி நோய்களை நிதானிப்பது காலவிரயத்தைத் தடுத்து, உடனடியாகவே தகுந்த சிகிச்சைகளை மேற்கொள்ள வழிவகுக்கும். அதுமட்டுமன்றி சிகிச்சையின் போது ஏற்படும் முன்னேற்றம் அல்லது முன்னேற்றமின்மையை மதிப்பிடவும் ஆய்வுகூட அறிக்கைகள் துணை நிற்கும். இவ்வைத்தியசாலையில் சிறந்த ஆய்வுகூடமொன்றும், நன்கு பயிற்றப்பட்ட ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலாளர் (M. L. T.)

ஒருவர் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. எனினும் இவ்வாய்வு கூடத்தின் பல தேவைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டியுள்ளன. அப்போது தான் இவ் ஆய்வுகூடத்தின் பயனை நோயாளர்கள் முழுமையாகப் பெறமுடியும்.

முக்கியமாக பிணியியல் ஆய்வு கூடம் (Pathology Laboratory) நுண்ணுயிரியல் ஆய்வு கூடம் (Microbiology Laboratory), X கதிர், பிரிவு முதலியவைகளை நிறுவுவதும் அவசியமாகும். E. C. G. Ultrasonic scan முதலிய வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதும் அவசியமாகும்.

இவற்றையெல்லாம் சித்தமருத்துவர்களால் பயன்படுத்த முடியுமா? விளங்கிக்கொள்ள முடியுமா? என்ற கேள்விகள் சிலருக்கு எழலாம். எல்லாவற்றுக்கும் மேலாக சித்தமருத்துவர்களுக்கு இவை அவசியந்தானா என்று கூடச் சிலர் கேள்வி எழுப்பக்கூடும். சித்தமருத்துவத்தை விஞ்ஞானரீதியில் வளர்ப்பதற்கு இவையெல்லாம் அவசியம் என்பதே எமது கருத்து. மேற்படி விஞ்ஞானக் கண்டுபிடிப்பின் பலாபலன்களைப் பயன்படுத்த எவருக்கும் உரிமையுண்டு. இவற்றைப் புரிந்து கொள்வதற்காகவே பிணியியல், நுண்ணுயிரியல், உடற்றொழிலியல் போன்றவற்றின் அடிப்படைத் தத்துவங்கள் B. S. M. S பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும் X-ray, E. C. G, Scan முதலிய பரிசோதனை அறிக்கைகள் பெரும்பாலும் அவ்வத்துறையில் தேர்ச்சி பெற்றவர்களால் எழுதப்படுகின்றன. எனவே, அவற்றின் உதவியுடன் நோயை நிதானித்து அறிவதும், உரிய சிகிச்சைமுறைகளை மேற்கொள்வதும் இலகுவானதாகின்றது. அதுமட்டுமன்றி மருந்து கொடுப்பதற்கு முன்னுள்ள நோயின் நிலை, மருந்து கொடுத்தபின்னர் அதாவது சிகிச்சைக்குப் பின்னர் நோயின் நிலை எவ்வாறுள்ளது. அதாவது குணமடைந்துள்ளதா? குறைந்துள்ளதா? அப்படியேயுள்ளதா? அல்லது கூடியுள்ளதா? என்பன போன்ற விபரங்களை அறிந்து கொள்வதற்கும் ஆய்வுகூடப்பரிசோதனைகள் உதவுகின்றன. எனவே Clinical research சரிவர நடாத்துவதற்கும் மருத்துவ ஆய்வுகூடங்கள் பேருதவியாக அமையும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பெரும்பாலான இடங்களில் தனியார் Diagnostic Centres உள்ளன. இவை சகலவசதிகளுடனும் செயற்படுகின்றன. அத்துடன் அரச மருத்துவமனைகளிலும் ஆய்வுகூடவசதிகள் பெருமளவில் உள்ளன. அவற்றையெல்லாம் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பை அங்குள்ள சித்தமருத்துவர்கள் பெற்றிருப்பதனால் அங்கு சித்தமருத்துவ வளர்ச்சி குறிப்பிடத்தக்களவில் முன்னேற்றங் கண்டுள்ளது.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தனியார் ஆய்வுகூடநிலையங்கள் மிகமிகக்குறைவு. அவற்றில் பரிசோதனைக்கான கட்டணமும் அதிகமாக உள்ளது. எனவே, சித்த போதனா வைத்தியசாலையிலாவது முதல்கட்டமாக போதிய ஆய்வுகூட வசதிகளை ஏற்படுத்தினால் அது அரசாங்க சேவையிலுள்ள சித்தவைத்தியர்களுக்கு மட்டுமன்றி ஏனையோருக்கும் பிரயோசனமுடையதாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

மருந்தகம்

இவ் வைத்தியசாலையின் உயிர் நாடியாக விளங்கும் மருந்தகத்தைப் பற்றியும் இங்கு குறிப்பிடுவது அவசியமாகும். மருந்தகமானது கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்படும் ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபன மருந்துகளையும், மருந்து தயாரிப்பதற்கான மூலப்பொருட்களான தாது, தாவர, விலங்கு முதலியவற்றின் மூலப்பொருட்களையும் (Raw Drugs) கொண்டதொரு களஞ்சியமாக விளங்குகிறது. அத்துடன் உள்நோயாளர் பிரிவில் சிகிச்சைபெறும் நோயாளர்களுக்கான குடிநீர் வகைகள், அனுபானங்கள், வெளிப்பூச்சு வகைகள் முதலியன தினமும் இங்கு தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.

நோயாளர்களுக்குத் தேவையான சிறப்பு மருந்துகள் பலவும் காலத்துக்குக் காலம் இங்கு தயாரிக்கப்படுகின்றன. வைத்தியசாலையில் மருந்துத் தட்டுப்பாடு நிலவிய வேளைகளில் எல்லாம் சளைக்காது மருந்துகளைத் தயாரித்து வழங்கிய பெருமை இதற்குண்டு. இவ்வைத்தியசாலையில் பணிபுரியும் சில ஊழியர்களுக்கு மருந்து தயாரிப்பதில் அனுபவ அறிவு உள்ளபோதிலும் அவர்களுக்கான மருந்தாளர் பயிற்சிநெறி (Pharmacist Course) எதுவும் இல்லாதிருப்பது பெருங்குறைபாடாகும். இலங்கையில் சித்தமருந்தாளர் பயிற்சிநெறி இதுவரை முறையாக அறிமுகப்படுத்தப்படாத நிலையிலுள்ளமை வருத்தத்துக்குரிய விடயமாகும். எனவே, பயிற்றப்பட்ட சித்த மருந்தாளர்களை உருவாக்கினால்தான் மருந்தகத்தை மேலும் அபிவிருத்தி செய்ய முடியும். அதன் மூலம் சித்தமருந்துகளைப் பெருமளவில் இங்கு தயாரிப்பதற்கும் வாய்ப்பு ஏற்படும்.

இவ்வைத்தியசாலையின் வளர்ச்சியில் அரசாங்கமும் ஆயுர்வேத ஆணையாளரும் காட்டும் ஆர்வம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அதனை யாவரும் நல்ல முறையில் பயன்படுத்தினால் வருங்காலத்தில் சித்தமருத்துவத்தை மேலும் வளர்ச்சியடையச் செய்யமுடியும்.

நன்றி:- இக்கட்டுரைக்குத் தேவையான தகவல்களைப் பெறுவதற்கு மகிழ்ச்சியுடன் அனுமதி வழங்கிய சித்த போதனா வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் (திருமதி) இந்திரா சத்தியநாதன் அவர்களுக்கும், தேவையான விபரங்களைத் தந்துதவிய வைத்தியசாலைப் பிரதம லிகிதர் திரு. எஸ். செல்லத்துரை அவர்களுக்கும், மற்றும் திருவாளர் க. பேரின்பம், சி. புவனேந்திரன், வி. புவனேந்திரன், எம். பற்பராஜா திருமதி மங்களேஸ்வரி, திருமதி ம. செல்வமணி ஆகியோருக்கும் கட்டுரையாசிரியரின் நன்றிகள்.

5. அரசாங்க சித்த மருத்துவ சிகிச்சை நிலையங்கள்

வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு ஒரேயொரு சித்த போதனா வைத்தியசாலை மட்டுமே உள்ளது என்று சென்ற கட்டுரையில் எடுத்துக் காட்டினோம். இவ்வைத்தியசாலையானது மத்திய அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அதேசமயம் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் 83 அரசினர் சித்த மருத்துவ சிகிச்சை நிலையங்களும் செயற்படுவது குறிப்பிடத்தக்கது. (1995 ஆம் ஆண்டு வடக்குகிழக்கு மாகாணசபை சுற்று நிருபத்துக்கமைய) இவற்றுள் ஒன்பது மத்திய சித்த மருத்துவ சிகிச்சை நிலையங்களாகும் (Central Dispensaries). இவை அனைத்தும் வடக்குக் கிழக்கு மாகாண சபையின் சுகாதார மகளிர் விவகார அமைச்சின் அனுசரணையுடன் அந்தந்தப் பிரதேசத்துக்குரிய உதவி அரசாங்க அதிபர்களினாலும் மாநகரசபை ஆணையாளராலும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. எனவே, இவற்றின் நிர்வாகத்தில் அரசாங்க அதிபர், உள்ளூராட்சி ஆணையாளர், உதவி அரசாங்க அதிபர்கள் ஆகியோருக்கும் முக்கிய பங்குள்ளது.

1990 ஆம் ஆண்டு வடக்குக் கிழக்கு மாகாண சுகாதார மகளிர் விவகார அமைச்சின் கீழ் வடக்குக் கிழக்கு மாகாண ஆயுர்வேதப் பணிப்பாளர் (சித்த வைத்தியர்) ஒருவர் நியமிக்கப்பட்டதை அடுத்து இச்சிகிச்சை நிலையங்களை நிர்வகிக்கும் பொறுப்பு அவரின் கீழ் ஒருநிலைப்படுத்தப்பட்டது என்று கூறலாம்.

அரசாங்க சுற்றறிக்கைகளில் வடக்குக் கிழக்கில் அமைந்துள்ள சித்த மருத்துவ சிகிச்சை நிலையங்கள் ஆயுர்வேத சிகிச்சை நிலையங்கள் (Ayurvedic Dispensaries) என்றே குறிப்பிடப்படுவதால் சிலருக்கு அது பொருள் மயக்கத்தைக் கொடுக்கக் கூடும். ஆயுர்வேத என்பதன் அர்த்தம் ஆரம்பத்திலேயே தெளிவுபடுத்தப்பட்டுள்ளது

என்பதை மீண்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். ஏனெனில் இவ்வைத்தியசாலைகளில் ஒரு சிலவற்றைத் தவிர ஏனையவற்றில் சித்த மருத்துவர்களே பணிபுரிந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. அது போலவே வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே தமிழ் மக்கள் அதிகம் வசிக்கும் இடங்களில் அரசினர் ஆயுர்வேத வைத்திய சிகிச்சை நிலையங்களில் சில சித்த மருத்துவர்கள் பணிபுரிந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. இச் சித்த மருத்துவ சிகிச்சை நிலையங்களும் நோயாளர்களுக்குச் சிறந்த சேவையாற்றி வருகின்றன. ஆயினும் இச்சித்த வைத்திய சிகிச்சை நிலையங்கள் பலவற்றில் அடிப்படை வசதிகள்கூட இல்லாத நிலையையும் காண முடிகின்றது. போதுமான இடவசதி, மருத்துவ உபகரணங்கள், தேவையான மருந்துகள், ஆளணிகள் என்பன இவற்றில் பலவற்றில் இல்லை. இங்கு கடமை புரியும் மருத்துவர்களே நோயாளரைப் பரிசோதிப்பதிலிருந்து மருந்தாளர் முதலியோரின் கடமைகளையும் செய்ய வேண்டிய நிலையிலுள்ளனர். இச்சிகிச்சை நிலையங்களில் பணிபுரியும் மருத்துவர்களின் அறிவு, அனுபவம் என்பவற்றை மேம்படுத்துவதற்கு வழி செய்து கொடுக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. பயிற்சிக் கருத்தரங்குகள், பட்டமேற்படிப்பு வசதிகள் என்பன இவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

எனினும் சித்த போதனா வைத்தியசாலைக்கும், சித்த மருத்துவ சிகிச்சை நிலையங்களுக்கும் இடையில் நிர்வாக ரீதியாகவோ அல்லது வேறு எவ்விதமாகவோ தொடர்புகளேதும் இல்லாதிருக்கிறது. குறிப்பாக யாழ் குடாநாட்டில் மாத்திரம் 46க்கும் மேற்பட்ட சித்த மருத்துவ சிகிச்சை நிலையங்கள் இருக்கின்றன. இவற்றுக்கும், யாழ் குடாநாட்டிலேயே உள்ள சித்த போதனா வைத்தியசாலைக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இல்லாதிருக்கிறது. இது சித்த மருத்துவ வளர்ச்சியைப் பாதிக்கும் ஒரு விடயமாகும். ஏனெனில், சித்த மருத்துவ சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு மேலதிக சித்த மருத்துவ சிகிச்சை தேவைப்படுமிடத்து அவர்களை சித்த போதனா வைத்தியசாலைக்கு முறைப்படி அனுப்பி வைக்க நடைமுறைகளேதும் இல்லை (Referel system). அது மட்டுமன்றி, சித்த மருத்துவ சிகிச்சை நிலையங்களில் பணிபுரியும் சித்த மருத்துவர்கள் தமது அறிவை வளர்த்துக் கொள்வதற்கும், ஆய்வுகளை மேற்கொள்வதற்கும், சித்த போதனா வைத்திய சாலையை அணுக முடியாத நிலையிலுள்ளனர். பாரம்பரிய சித்த மருத்துவர்களும் இதே விதமான பிரச்சனைகளையே எதிர்நோக்குகின்றனர்.

மேலும், சித்த போதனா வைத்தியசாலையிலுள்ள மருந்தகம் நல்ல முறையில் செயற்பட்டு, மேற்படி சித்த மருத்துவ சிகிச்சை நிலையங்களுக்கும், சித்த மருத்துவர்களுக்கும் ஒரே விதமான மருந்துகளைச் சீராக வழங்கக் கூடிய நிலை ஏற்படுமேயானால் நோயாளர்களுக்குச் சிகிச்சையளிப்பதிலும் ஒரு ஒழுங்கு முறையை (UNIFORMITY) ஏற்படுத்த முடியும். அதன் மூலம் சித்தமருந்துகள் சம்பந்தமான ஆய்வுகளையும் விரிவுபடுத்த முடியும்.

இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களிலுள்ள சித்த மருத்துவ சிகிச்சை நிலையங்களின் விபரம் வருமாறு.

மத்திய சிகிச்சை நிலையங்கள் (Central Dispensaries)

அம்பாறை மாவட்டம்

1) நவமிகம
2) ஸ்ரீபுர
3) சந்துன்புர
4) அம்பாறை

மட்டக்களப்பு மாவட்டம்

5) புதுக்குடியிருப்பு
6) மஞ்சந்தொடுவாய்
7) மட்டக்களப்பு நகரம்

வவுனியா மாவட்டம்

8) மடுக்கந்தை
9) வவுனியா

ஏனைய சிகிச்சை நிலையங்கள் (Free Alternative Dispensaries maintained dy respective Local Authorities)

யாழ்ப்பாண மாவட்டம்

10) அனலைதீவு (ஊர்காவற்றுறை பிரதேச சபை)
11) எழுவைதீவு (" " ")
12) நயினாதீவு (வேலணை பிரதேச சபை)
13) புங்குடுதீவு (" " ")
14) வேலணை (" " ")

15) யாழ்ப்பாணம் (யாழ்ப்பாணம் மாநகர சபை)
16) நல்லூர் (நல்லூர் பிரதேச சபை)
17) அரியாலை (,, ,,)
18) மானிப்பாய் (வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை)
19) சண்டிலிப்பாய் (,, ,, ,,)
20) சுழிபுரம் (வலிகாமம் மேற்கு பிரதேச சபை)
21) சங்கானை (,, ,, ,,)
22) அராலி (,, ,, ,,)
23) வட்டுக்கோட்டை (,, ,, ,,)
24) ஏழாலை (வலிகாமம் தெற்கு பிரதேச சபை)
25) உடுவில் (,, ,, ,,)
26) தாவடி (,, ,, ,,)
27) மயிலிட்டி (வலிகாமம் வடக்கு பிரதேச சபை)
28) அளவெட்டி (,, ,, ,,)
29) காங்கேசந்துறை (,, ,, ,,)
30) தெல்லிப்பளை (,, ,, ,,)
31) அச்சுவேலி (வலிகாமம் கிழக்கு பிரதேச சபை)
32) நீர்வேலி (,, ,, ,,)
33) வாதரவத்தை (,, ,, ,,)
34) உரும்பிராய் (,, ,, ,,)
35) உடுப்பிட்டி (வடமராட்சி தென்மேற்கு பிரதேசசபை)
36) கப்புத்தூர் (,, ,, ,,)
37) உடுப்பிட்டி தெற்கு (,, ,, ,,)
38) துன்னாலை தெற்கு (,, ,, ,,)
39) நெல்லியடி (,, ,, ,,)
40) கட்டைவேலி (,, ,, ,,)
41) புலோலி (பருத்தித்துறை பிரதேச சபை)
42) நாகர்கோவில் (,, ,,)
43) செம்பியன்பற்று (,, ,,)
44) கற்கோவளம் (,, ,,)
45) வியாபாரிமூலை (,, ,,)
46) சுருவில் (,, ,,)
47) வல்லிபுரக்குறிச்சி (,, ,,)
48) வரணி (சாவகச்சேரி பிரதேச சபை)
49) கச்சாய் (,, ,,)
50) மிருசுவில் (,, ,,)
51) கொடிகாமம் (,, ,,)
52) வரணி வடக்கு (,, ,,)
53) கெற்பலி (,, ,,)
54) சரசாலை (,, ,,)
55) தனங்கிளப்பு (,, ,,)

கிளிநொச்சி மாவட்டம்

56) புலோப்பளை (பச்சிலைப்பள்ளி பிரதேச சபை)
57) இயக்கச்சி (,, ,, ,,)
58) முகமாலை (,, ,, ,,)
59) கிளாலி (,, ,, ,,)
60) பூநகரி (பூநகரி பிரதேச சபை)
61) பல்லவராஜன் கட்டு (,, ,, ,,)
62) கரைச்சி (கரைச்சி பிரதேச சபை)
63) உருத்திரபுரம் (,, ,,)
64) வட்டக்கச்சி (,, ,,)

முல்லைத்தீவு மாவட்டம்

65) முள்ளியவளை (மருதம்பட்டு பிரதேச சபை)
66) ஒட்டுசுட்டான் (புதுக்குடியிருப்பு பிரதேச சபை)
67) ஒலுமடு (,, ,,)

மன்னார் மாவட்டம்

68) எருக்கலம்பிட்டி (மன்னார் பிரதேச சபை)
69) நானாட்டான் (நானாட்டான் பிரதேச சபை)
70) முசலி வடக்கு (முசலி பிரதேச சபை)
71) முசலி மேற்கு (மாந்தை மேற்கு பிரதேச சபை

வவுனியா மாவட்டம்

72) சின்னச் செட்டிக்குளம் (வெண்கலச் செட்டிக்குளம் பிரதேச சபை)
73) கிழக்குமோலை வடக்கு (வவுனியா பிரதேச சபை)
74) உடயவூர் (வவுனியா வடக்கு பிரதேச சபை)

திருகோணமலை மாவட்டம்

75) சீனன்குடா (திருமலை நகர சபை)
76) உப்புவெளி (,, ,,)
77) சாம்பல்தீவு (,, ,,)
78) ஆண்டான் குளம் (,, ,,)
79) மடத்தடி (,, ,,)
80) சேருவில (சேருவில பிரதேச சபை)
81) கந்தளாய் (கந்தளாய் பிரதேச சபை)

82) கல்முனை (கல்முனை பிரதேச சபை)
83) அக்கரைப்பற்று (கருங்கொடித்தீவு பிரதேச சபை)

குறிப்பு:- வடக்குக் கிழக்குப் பிரதேச சித்த மருத்துவ சிகிச்சை நிலையங்கள் பற்றிய விபரங்களைக் கொடுத்துதவிய வடக்குக் கிழக்கு மாகாண முன்னாள் ஆயுர்வேத பணிப்பாளர் சித்த மருத்துவ கலாநிதி பூரண உரோ மகேசுவரன் அவர்களுக்கு எமது நன்றிகள். 1995 ஆம் ஆண்டிற்குப் பின் மேலும் சில சித்த மருத்துவ சிகிச்சை நிலையங்கள் புதிதாகத் திறப்பதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

6. ஈழத்துச் சித்த மருத்துவ நூல்கள்

ஈழத்துச் சித்தமருத்துவ வரலாற்றையும், அதன் வளர்ச்சிப் போக்கையும் எடுத்துக் காட்டும் ஆவணங்களில் இங்கு வெளிவந்த சித்த மருத்துவ நூல்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இலங்கையின் பல பாகங்களிலும் சிதறிக் காணப்படும் சித்த வைத்தியம் சம்பந்தமான ஏட்டுச்சுவடிகள் இங்கு சித்த மருத்துவம் ஒரு காலத்தில் செழிப்புற்றிருந்ததை எடுத்துக் காட்டுகின்றன. ஆனால், தற்போது இச்சுவடிகளிற் பல கவனிப்பாரற்று அழிந்து கொண்டிருப்பதையும் காண முடிகிறது தமிழ் மருத்துவ ஏட்டுச் சுவடிகளைச் சேகரிப்பதற்கும் பாதுகாப்பதற்கும், ஆராய்வதற்கும், அச்சிற் பதிப்பிப்பதற்கும் ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருப்பது வருந்தற்குரியது. 1994 ஆம் ஆண்டில் ஏட்டு வைத்தியம் என்னும் நூல் அப்போதைய சித்த மருத்துவத் துறைத்தலைவர் சித்த மருத்துவ கலாநிதி சு. பவானி அவர்களின் முயற்சியினால் ஆயுர்வேதத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டது. (இதைவிட 1980 இல் சித்த அவுடத சங்கிரகம் என்னும் சித்த மருந்துகளின் தொகுப்பு நூல் ஆயுர்வேத வைத்தியத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் உள்ள தமிழ் வைத்திய ஏட்டுச் சுவடிகளின் பெயர்ப் பட்டியலொன்றை அதன் பிரதம நூலகர் திரு. சி. முருகவேள் 1992 ஆம் ஆண்டில் தொகுத்து வெளியிட்டுள்ளார். ஆனால், அதில் கூறப்பட்டுள்ள எந்த ஏட்டுப் பிரதியையும் அச்சில் பதிப்பிப்பதற்கான நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் தனிப்பட்ட வைத்தியர்களிடமும், வைத்திய பரம்பரையினரிடமும் எஞ்சியுள்ள ஏட்டுச் சுவடிகளின் எதிர்காலத்தைப் பற்றி யாது கூறமுடியும்?

கி. பி. 12 - 15 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் காலத்தில் பரராசசேகரம், செகராசசேகரம், இலங்கைச் சிங்கை மன்னன் நயனவிதி முதலான

நூல்கள் தோற்றம் பெற்றன. இவை யாவும் தொகுப்பு நூல்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றில் கூறப்பட்டுள்ள மருந்துகளிற் பல தற்போதும் இலங்கையிலும், தமிழ்நாட்டிலும் வழக்கிலுள்ளன. கி.பி. 17, 18 ஆம் நூற்றாண்டளவில் அமுதாகரம், இருபாலைச் செட்டியார் வைத்திய விளக்கம், பதார்த்த சூடாமணி, சொக்கநாதர் தன்வந்திரியம் போன்ற நூல்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

இந்நூல்கள் பலவற்றையும், யாழ்ப்பாணத்தில் வெளிவந்த வேறு பல சித்த மருத்துவ நூல்களையும் இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் அச்சுவாகனம் ஏற்றிய பெருமை ஏழாலையைச் சேர்ந்த சுதேச வைத்தியர் ஐ. பொன்னையா அவர்களையே சாரும். செகராசசேகரம் நூலை அச்சுவேலியைச் சேர்ந்த ச. தம்பி முத்துப்பிள்ளையும், அமுதாகரத்தை திருகோணமலையைச் சேர்ந்த சு. தம்பையாபிள்ளை என்பவரும் பதிப்பித்துள்ளனர்.

ஈழத்துச் சித்த மருத்துவ நூலாக்கத்தில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த வைத்தியர்களும் பெரும்பணியாற்றி யுள்ளனர். திருகோணமலையைச் சேர்ந்த வைத்தியர் சி. ஆறுமுகம் பிள்ளை என்பவர் இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரசோற்பத்தி வருடத்தில் (1931) நோய் நிதானங்கள் என்னும் அரிய தமிழ்மருத்துவ நூலைத் தொகுத்து வெளியிட்டுள்ளார். சித்த மருத்துவ நோய் நாடல் சம்பந்தமாக எமக்குக் கிடைத்த முதலாவது நூல் இதுவென்றே கூறலாம். ஆயுர்வேத வைத்தியத்தில் மாதவன் நிதானம் போன்ற நோய் நிதான நூல்கள் பல இருப்பினும் சித்த மருத்துவத்தில் நோய் நிதானத்துக்கு என்று தனியான நூல் எதுவும் இலங்கையில் இல்லாதிருந்தது. அக்குறைபாட்டைப் போக்கும் நோக்குடனேயே தாம் இதனைத் தொகுத்ததாக நூலாசிரியர் தமது முகவுரையில் குறிப்பிட்டுள்ளார். அங்காதிபாதம் என்னும் பெயரில் இதே நூலாசிரியர் எழுதிய ஒரு நூல் இற்றைவரை கையெழுத்துப் பிரதியாகவே உள்ளது. அதுபோலவே, திருகோணமலையைச் சேர்ந்த ப. சின்னத்தம்பி என்பவர் 1906 இல் எழுதிய அங்காதிபாதம் என்னும் நூலும் கையெழுத்துப் பிரதியாகவே இருந்து வருகிறது.

இந்நூலாசிரியரின் பார்வைக்குக் கிடைத்த ஈழத்தில் வெளிவந்த சித்த மருத்துவ நூல்களின் பட்டியல் இங்கு அகர வரிசையில் தரப்படுகிறது.

1. அங்காதிபாதம்

(வாகட தத்துவத்துடன்) - பரராசசேகரத்தைச் சார்ந்தது. ஐ. பொன்னையா (பதிப்பாசிரியர்) 1936 (இரண்டாம் பதிபபு)

இந்நூல் 2 பதிப்புகள் வந்துள்ளது. சித்த அங்காதிபாதம் பற்றி இலங்கையில் அச்சில் வெளிவந்துள்ள ஒரேயொரு நூல் இதுவாகும். 96 தத்துவங்கள், கருவுற்பத்தி, உடலமைப்பு, உடலியக்கம், அதில் முத்தாதுக்களின் செயற்பாடு, பிரகிருதி பேதங்கள், வாதாதி தேகிகளுக்குரிய உணவு வகைகள், நோய்களின் எண்ணிக்கை, நோய் வரும் வழி, நடத்தைப் பிழையால் வரும் நோய்கள், சுகவாழ்விற்கு இன்றியமையாதன, மருந்துகளின் செய்முறை, மருந்துகளின் பாவனைக்காலம், கருவிகளின் விபரம். போன்ற விடயங்கள் அடங்கியுள்ளன. இந்நூலில் கூறப்பட்டுள்ள கருவுற்பத்தி விபரங்கள், மு. துரைராசன் எழுதிய கருவுற்பத்தி நூலிலும், சித்த மருத்துவாங்கச் சுருக்கம் (டாக்டர். க. சு. உத்தமராயன் எச். பி. ஐ. எம்.) சித்த மருத்துவ நோய் நாடல், நோய் முதல் நாடல் திரட்டு (டாக்டர். ப. சண்முகவேலு, எச். பி ஐ. எம்.) முதலான தமிழ்நாடு அரசு சித்த மருத்துவக் கல்லூரியில் பாட நூல்களிலும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

2. அமுதாகரம்

அ. வரதபண்டிதர் (நூலாசிரியர்), சு. தம்பையாபிள்ளை, (பதிப்பாசிரியர்) விக்டோரியா ஜூபிலி அச்சுக்கூடம், சென்னைப் பட்டினம் 1892.

சுன்னாகத்தைச் சேர்ந்த அ. வரதபண்டிதரால் இயற்றப்பட்டது. நஞ்சியல் பற்றிய நூல், சித்தராரூடத்தைத் தழுவி எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதில் பாம்புக்கடி, தேள்கடி, புலிமுகச்சிலந்திக்கடி முதலான பல்வேறு ஜந்துக்களினால் ஏற்படும் விடங்களுக்கான சிகிச்சைமுறைகள் கூறப்பட்டுள்ளது.

3. அனுபவமுள்ள குடிநீர் வகைகள்

ஏ. சி. இராசையா வெளியீடு-வைத்தியகலாநிதி வேலாயுதபிள்ளை குகமூர்த்தி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் 1985

இதில் ஆசிரியர் அனுபவத்தில் கண்டதும், யாழ்ப்பாணம் வைத்தியர்களின் பயன்பாட்டிலுள்ளதும் பல்வேறு நோய்களுக்குப் பயன்படுவதுமான குடிநீர் வகைகளைத் தொகுத்தளித்துள்ளார். இக்குடிநீர்களுடன் சேர்த்து வழங்கப்படும் மாத்திரைகள் முதலியவற்றையும் குறிப்பிட்டிருப்பது சிறப்பான அம்சமாகும்.

4. இலக்கியத்தில் மருத்துவக் கருத்துக்கள்

கலாநிதி இ. பாலசுந்தரம், நாட்டார் வழக்கியற்கழக வெளியீடு யாழ்ப்பாணம் 1991

பண்டைத் தமிழ் இலக்கிய நூல்களில் இடம் பெற்றுள்ள சித்த மருத்துவக் கருத்துக்களை வெளிக்கொணரும் முயற்சியில் இந்நூல் துணை நிற்கிறது. குறிப்பாக சங்ககாலம், சங்க மருவிய காலத்தில் எழுந்த இலக்கிய நூல்களில் தமிழ் மருத்துவக் கருத்துக்கள் முக்கியத்துவம் பெற்றிருந்ததை தொல்காப்பியம், திருக்குறள் திருமந்திரம், ஏலாதி, ஆசாரக்கோவை, சிறுபஞ்ச மூலம் முதலான பல நூல்களின் துணை கொண்டு ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார்.

5. இருபாலைச் செட்டியார் வைத்திய விளக்கம், பதார்த்தசூடாமணி

ஐ. பொன்னையா (பதிப்பாசிரியர்) யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலை, 1927

இருபாலைச் செட்டியார் என்பவரால் இயற்றப்பட்டது. இதில் வைத்திய விளக்கத்தில் நாடிகளின் தோற்றம், தொழில் முதலியனவும் பல்வேறு நோய்களின் குணங்குறிகள் அவற்றுக்கான சிகிச்சை முறைகள் என்பனவும் கூறப்பட்டுள்ளது. பதார்த்த சூடாமணியில் தாவர, தாதுப் பொருட்களின் மருத்துவ குணங்கள் பற்றியும் உணவு வகைகள், பருகும் நீர் வகைகளின் மருத்துவ குணங்கள் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது,

6. ஈழத்து சித்தமருத்துவ நூல்கள் ஓர் அறிமுகம்

சித்த மருத்துவ கலாநிதி சே. சிவசண்முகராஜா, சித்த மருத்துவ வளர்ச்சிக்கழகம், 1993

இலங்கையில் வெளிவந்துள்ள சித்த மருத்துவ நூல்கள் பற்றியும், இலங்கையின் சித்த மருத்துவ வரலாறு பற்றியும் ஆய்வு செய்யும் நூலாக இது அமைந்துள்ளது.

7. ஒட்டு வைத்தியம்

ஆயுர்வேத திணைக்கள வெளியீடு, 1994

பல்வேறு நோய்களுக்குரிய மருந்துகள் இதில் இடம்பெற்றுள்ளன.

8. கிறிஸ்தவ பண்டிதர் வைத்திய நூற்றிரட்டு

அச்சுவேலி ஞானப்பிரகாச யந்திரசாலையிற் பதிப்பிக்கப் பெற்றது.

இதில் (1) வயலை ஸ்ரீ பிரான்சிஸ் பண்டிதர் இயற்றியதும் திருத்தியதுமான நூல் (2) பண்டத்தரிப்பு ஸ்ரீ பெரிய சமரக்கோன் முதலியார் இயற்றிய நூல் (3) இராசரிஷி வீரமாமுனிவர் இயற்றிய நசகாண்ட வெண்பா ஆகிய மூன்று நூல்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றில் முக்கியமாக நாடி விதி, பண்டிதரிலக்கணம், சென்மக்குறி (தேவ தத்துவம்), முத்தோஷக்குறி, மரணக்குறி முதலியனவும், பல்வேறு நோய்களுக்குரிய மருந்துகளும் கூறப்பட்டுள்ளன.

9. சித்த அவுடத சங்கிரகம்

எஸ். எம். பொன்னையா ஐ. சபாபதிப்பிள்ளை, ஆயுர்வேத திணைக்கள வெளியீடு.

இது முக்கியமாக சித்த வைத்தியம் பயிலும் மாணவர்களுக்கு, மருந்தியல் பற்றிக் கற்பதற்கு உதவும் ஒரு நூலாகும். மருந்துகளின் செய்முறை விதிகள், அளவைகள் என்பனவும் பரராசசேகரம், இருபாலைச் செட்டியார் வைத்திய விளக்கம், வைத்தியத் தெளிவு, சுதேச வைத்திய அவுடதத் திரட்டு, ஏட்டுப் பிரதிகள், சித்த வைத்தியத் திரட்டு, தேரையர் தைல வர்க்கச் சுருக்கம் போன்ற நூல்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மருந்துகளும் இதில் அடங்கியுள்ளன.

10. சித்த வைத்திய சிகிச்சைக் கிரமம்

(ஒரு குறிப்பு வழிகாட்டி) வி. முத்தையா ஜோன், 1972

இதில் யாழ்ப்பாண வைத்திய முறைகளையும் தனது அனுபவத்தையும் தொகுத்துத் தந்திருக்கிறார் நூலாசிரியர்.

11. சுதேச வைத்திய அவுடதத் திரட்டு

யாழ்ப்பாணம், வயாவிளான் ஆனந்தக்குமரன் அச்சுயந்திர சாலையிற் பதிப்பிக்கப்பெற்றது, 1945

யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, வைத்தியர்களால் பரம்பரையாகக் கையாளப்பட்டு வந்த பல அரிய கையாட்சிமருந்துகள் அடங்கிய தொகுப்பு நூல் இதுவாகும். இதில் இடம் பெற்றுள்ள சிவகரந்தைச் சூரணம் கொத்தமல்லிச் சூர்ணம், பஞ்ச தீபாக்கினிச் சூரணம், தச மூலச்சூரணம், பெரிய

வேர்க்கொம்புச் சூரணம், நந்தீசுர சிந்தாமணி, சின்னச் சிகப்புக் குளிகை, சின்னப்புன்னை வேர்க்குளிகை, சிவன் குளிகை (ஈசுர குளிகை) பெரிய சிகப்புக் குளிகை) நயன விதி எண்ணெய் போன்ற மருத்துகள் தற்போது யாழ்ப்பாண சித்த மருத்துவர்களின் கைகண்ட மருந்துகளாகும். இலங்கையில் வெளிவந்த முதலாவது Siddha Pharmacopoeia வாக இந்நூலைக் கருதினால் அது தவறாகாது.

12. சுதேச மருத்துவ மூலிகைக் கையகராதி

சித்த மருத்துவ கலாநிதி சே. சிவசண்முகராஜா, சித்த மருத்துவ வளர்ச்சிக் கழகம், கைதடி 1997

இந்நூல் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதற் பகுதி மூலிகைகளின் சமஸ்கிருத - தமிழ்ப் பெயர்களை அறிய உதவுகிறது. சித்த மருத்துவ நூல்களில் சமஸ்கிருதச் சொற்களில் இடம் பெற்றுள்ள மூலிகைகளின் தமிழ்ப் பெயரை அறிவதற்குதவுமுகமாக இது தொகுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பகுதி பரராசசேகரம், செகராசசேகரம் ஆகிய நூல்களில் இடம் பெற்றுள்ள மூலிகைகளை அறிவதற்குரிய முறையில் அகராதி வடிவில் தொகுத்தளிக்கப் பட்டுள்ளது. மூலிகைகளின் தாவர விஞ்ஞானவியற்பெயர்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளமை சிறப்பான அம்சமாகும்.

13. செகராசசேகரம் -

தம்பிமுத்துப்பிள்ளை (பதிப்பாசிரியர்) அச்சுவேலி ஞானப்பிரகாச யந்திரசாலை, 1932

இந்நூலில் வியாதி வரும் வகை, சலமலப்பகுப்பு, அங்காதிபாதம், உணவு வகை, நாடி விதி, சுரவிதி, சன்னி, மூலரோகம், விக்கல், சுவாதம், வாதரோகம், சலரோகம், காசம், குட்டம், கரப்பன்வகை, வலி, உதரரோகம், உட்குத்து, புறவீச்சு, நீரிழிவு, முதுகுப் பிளவை, பித்தம் 42 இன் குணமும் மருந்தும் என்பன இடம்பெற்றுள்ளன.

14. சொக்கநாதர் தன்வந்திரியம்

ஐ. பொன்னையா (பதிப்பாசிரியர்) ஏழாலை திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலை, 1933.

மாவிட்டபுரம் சொக்கநாதக்குருக்கள் என்பவரால் இயற்றப்பட்டது. இந்நூல் உக்கிரகாண்டம், சௌமிய காண்டம் என்னும் இரு பிரிவுகளையுடையது. இவ்விரு காண்டங்களுக்கும் முன்பாக வைத்தியனிலக்கணம், பதார்த்த குணவிளக்கம் என்பனவும் கூறப்பட்டுள்ளது. உக்கிரகாண்டத்தில் மானிட சிகிச்சை, தேவ வைத்தியம், அரக்கர் வைத்தியம் ஆகிய மூன்று வகைச் சிகிச்சை முறைகளும் கூறப்பட்டுள்ளது. இதில் தலை முதல் பல்வேறு அங்கங்களில் ஏற்படும் வியாதிகளுக்குரிய சிகிச்சை முறைகள் முக்கியமாக காதடைப்பு, கரப்பன், உதட்டு ரோகம், நாசிகாபீடம், பீனிசம், தும்மல், நாசியரிப்பு, பற்புழு, நாப்புற்று, அரோசகம், விக்கல், விற்புருதி, கொட்டாவி, இருமல், கண்டக்கரப்பன், சயரோகம், காதுக்கட்டு, கூவைக்கட்டு, மாந்தை, கண்டவாயு, மார்பு வலி, நாவரட்சி, முலைக்கட்டு, இதயசல்லியம், உட்குத்து, வரள் வாயு, காசம், விஷஅசீரணம், அட்டகுன்மம், உதர வாயு, மேகரோகம், வண்டுக்கடி, நிதம்ப சூலை, மலட்டு ரோகங்கள், பெரும்பாடு, மூலரோகம், சிரகணி, பெரு வியாதி, நகச்சுற்று, சிலந்தி, சன்னி - 13, வெட்டுக்காயம் போன்ற பல்வேறு வியாதிகளுக்குரிய சிகிச்சை முறைகள் கூறப்பட்டுள்ளன. சௌமிய காண்டத்தில் குழந்தைகள், கர்ப்பிணிகள், முதியோர், உடல் இளைத்தவர்கள் போன்றவர்களுக்கான எளிய சிகிச்சை முறைகள் கூறப்பட்டுள்ளன.

15. நயன விதி குணமும் மருந்தும்

அச்சுவேலி ஞானப்பிரகாச யந்திரசாலையில் 1904ல் பிரசுரிக்கப்பட்டது.

இஃது அகஸ்திய மகா முனிவர் (நாகமுனி) பரராசசேகரர் ஆகியோர் நாமங்களால் நம் நாட்டில் வழங்கிய பல ஏட்டுப் பிரதிகளிலிருந்து தொகுக்கப்பட்டது என்ற குறிப்புடன் வெளியிடப்பட்டுள்ளது. இதன் முதற்பகுதி நாகமுனிவர் (அகஸ்தியர்) அருளிச் செய்த நயனவிதி என்ற பெயரில் 216 செய்யுட்களைக் கொண்டதாயும், இரண்டாம் பகுதி இலங்கைச் சிங்கை மன்னன் நயன விதி என்னும் பெயரில் 28 செய்யுட்களையுடையதாகவும்

மூன்றாவது பகுதி பரராசசேகர நயனவிதி என்னும் பெயரில் 25 செய்யுட்களையுடையதாகவும், அமைந்துள்ளது. இதில் இடம்பெற்றுள்ள பல செய்யுட்கள் பின்னர் ஐ. பொன்னையா அவர்களின் பரராசசேகரம் சிரரோக நிதானப் பதிப்பில் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. கண் வைத்தியம் சம்பந்தமாக இலங்கையில் அச்சில் வெளிவந்துள்ள முதலாவது சித்த மருத்துவ நூல் இதுவாகும். யாழ்ப்பாணத் தமிழ் மன்னர்கள் முதலில் கந்தரோடை என வழங்கும் கதிரைமலையையும், பின்னர் சிங்கை நகரையும், இறுதியில் நல்லூரையும் இராசதானியாகக் கொண்டு ஆட்சி புரிந்ததாக வரலாற்றறிஞர்கள் கூறுகின்றனர்.

பரராசசேகரத்தில் பலவிடங்களிலும் கதிரைமலை என்ற சொற்பிரயோகம் இடம்பெற்றிருப்பதைக் காண முடிகிறது. கதிரைமலை என்பது கதிர்காமத்தைக் குறிப்பது என்று ஏற்கனவே எடுத்துக் காட்டியுள்ளோம். அது மட்டுமன்றி புராதன யாழ்ப்பாண இராசதானியான கதிரைமலையையும் அது குறித்து நிற்கிறது என்பதும் ஏற்புடையதே. செகராச சேகரம் மருத்துவ நூலில் கதிரை மலை என்ற சொல் குறிப்பிடப்படாத போதிலும், அதே காலப்பகுதியில் வெளிவந்ததாகக் கூறப்படும் செகராசசேகரமாலை என்னும் சோதிட நூலில் 'கந்த மலை' என்ற சொல் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

'கந்த மலை ஆரியர் கோன் செகராச சேகர மன்
கங்கை நாடன்''

எனவே, கதிரை மலையைத் தலைநகராகக் கொண்டிருந்த யாழ்ப்பாணத்தரசர்களும் சித்த வைத்திய வளர்ச்சிக்கு பெரிதும் உதவியிருக்கிறார்கள் என்று கருத இடமுண்டு. நாம் ஏற்கனவே, எடுத்துக் கூறியது போல யாழ்ப்பாணத்தில் சித்த வைத்தியத்தில் பாண்டித்தியம் பெற்ற வைத்தியர்களை நாடி வந்து மாருதப்புரவீகவல்லி தனது குன்ம நோயை நீக்கிக் கொண்டாள். அது மட்டுமன்றி, அவ்விளவரசி, பின்னர் கதிரை மலையை ஆண்ட மன்னனொருவனையே (உக்கிரசேனன்) திருமணம் செய்து கொண்டாள் என்பதும் குறிப்பிடத்தக்கது. கதிரை மலை மன்னர்கள் காலத்தில் யாழ்ப்பாணத்தில் சித்த வைத்தியம் செழிப்புற்றிருந்தது என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது.

கதிரைமலைக்குப் பின்னர் தமிழ் மன்னர் இராசதானி சிங்கை நகருக்கு மாறியது. சிங்கை நகரை ஆண்ட தமிழ் மன்னர்களும் சித்த மருத்துவ வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்துள்ளனர். அதனால் தான் ''இலங்கைச் சிங்கை மன்னன் நயனவிதி'' என்று அம்மன்னர்களில் யாரோ ஒருவரின் பெயரைத் தாங்கிய சித்த மருத்துவ நூல் வெளிவந்திருக்க வேண்டும்.

இந்நூலில் கண்நோய்களுக்கான காரணங்கள், 96 வகையான கண்நோய்கள், அவற்றின் குறிகுணங்கள், சிகிச்சை முறைகள் என்பன பற்றிக் கூறப்பட்டுள்ளது. இந்நூலிலுள்ள நயன நோய்கள் சிகிச்சை முதலியவற்றில் பல, தமிழ்நாடு அரசினர் சித்த மருத்துவக் கல்லூரிப் பாட நூலான அறுவை மருத்துவத்தில் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சித்தர் அறுவை மருத்துவம் - க. சி. உத்தமராயன், இரண்டாம் பதிப்பு, 1984, தமிழகஅரசு வெளியீடு)

16. நோய் நிதானங்கள்

வைத்தியர் சி. ஆறுமுகம்பிள்ளை, பருத்தித்துறை கலாநிதி யந்திரசாலையில் பதிக்கப்பெற்றது. 1931

இந்நூலில் சுரரோகம், சூலை, சன்னி, வலி, குன்மம் சுவாதம், பெருவாய்வு, வாய்வு, பாலர் நோய்கள், கணை, குத்து வாய்வு, வைசூரி, ஊழிக்காற்று நிதானம், சிரரோகங்கள், பாண்டு, காமாலை, கரப்பன், கெற்பரோகங்கள், வாதரோகங்கள் பித்தரோகங்கள், சிலேற்பன ரோகங்கள், தொய்வு, ஈளை காசம், மேகரோகம், உதரரோகம், பீனிசம், கழிச்சல், சிங்குரோகம், (நாக்கு ரோகம்) சத்தி, கிருமி, தோஷம் முதலான அநேக நோய்களை நிதானிப்பதற்குரிய குறிகுணங்கள் பல்வேறு நூல்களின் இருந்தும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது.

17. பண்டைய மருத்துவமும் பயன்தரு மூலிகைகளும்

கலாவதி பா. சிவகடாட்சம், பேராதனை 1979

மருத்துவ வரலாறும், அதில் பயன்படும் மூலிகைகள் பற்றியும் இதில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

18. பரராச சேகரம்

ஐ. பொன்னையா (பதிப்பாசிரியர் 1928—36 காலப்பகுதியில் வெளியிடப்பட்டது.

முதல் பாகம் — சிரரோக நிதானம் இதில் உச்சி (கபால) ரோகம், அமுத (மூளை) ரோகம், செவிரோகம், நாசிரோகம், நயனரோகம், வாய், கழுத்து ரோகங்கள் பற்றியும் அவற்றிற்கான சிகிச்சை முறைகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. இதிலுள்ள பல விடயங்கள் தமிழ்நாடு அரசு சித்த மருத்துவக் கல்லூரி பாட நூலான அறுவை மருத்துவம் என்ற நூலில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் பாகம் — இதில் கெர்ப்பரோகம், பாலரோகங்கள் பற்றியும் அவற்றிற்கான சிகிச்சை முறைகளும் கூறப்பட்டுள்ளன. இதிலுள்ள கெற்பரட்சணி தமிழ்நாடு அரசு சித்த மருத்துவக் கல்லூரிப் பாட நூலான நோயில்லா நெறியில் இடம் பெற்றுள்ளது. (நோயில்லா நெறி டாக்டர் கோ. துரை ராசன், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்கம், சென்னை - 106, 1993)

மூன்றாம் பாகம் — இதில் சுரம், சன்னி, வலி, விக்கல், சத்திரோக நிதானங்களும், அவற்றுக்கான சிகிச்சை மருந்துகளும் கூறப்பட்டுள்ளன.

நான்காம் பாகம் — வாத பித்த சிலேற்பன ரோக நிதானங்களும், சிகிச்சை முறைகளும் கூறப்பட்டுள்ளன.

ஐந்தாம் பாகம் — மேகரோகம், பிள்வை ரோகம், பவுந்திர ரோகம் முதலியனவும் - சத்திர விதி, வன்ம விதி, இரட்சை விதி என்பனவும் கூறப்பட்டுள்ளது. சிரரோக நிதானத்தைப் போலவே இதிலுள்ள பல விடயங்கள் தமிழ்நாடு சித்த மருத்துவக் கல்லூரி பாடநூலான அறுவை மருத்துவம் என்ற நூலின் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆறாம் பாகம்: — உதரரோகம், குன்மம், பாண்டு, காமாலை, சோகை, வாய்வு, சூலை ரோகங்களும் அவற்றுக்காக சிகிச்சை முறைகளும் கூறப்பட்டுள்ளது.

ஏழாம் பாகம்! மூலம், அதிசாரம், சிரகணி, கரப்பன், கிரந்தி, குட்டரோக நிதானங்களும், அவற்றுக்கான சிகிச்சை முறைகளும் கூறப்பட்டுள்ளன

எனவே, பரராசசேகரமானது ஈழத்துச் சித்த மருத்துவர்களால் மட்டுமின்றி, தமிழ்நாடு சித்த மருத்துவர்களாலும் சிறப்புடன் பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

19. பாலவைத்திய திரட்டு

வைத்தியர் க. வே. கந்தையாபிள்ளை (தொகுப்பு) அளவெட்டி - 1926

இந்நூல் பரராசசேகரம் பாலரோக நிதானம், இருபாலைச் செட்டியார் வைத்திய விளக்கம் என்பவற்றைத் தழுவி இயற்றப்பட்டது.

20. பாலவைத்தியம்

C. W. சுப்பிரமணியபிள்ளை, அச்சுவேலி ஞானப்பிரகாச யந்திரசாலை, 1931 - 3ம் பதிப்பு. டாக்டர் சாமுவேல் கிறீன் அவர்கள் யாழ்ப்பாண மருத்துவத்தில் ஏற்படுத்திய தாக்கத்தின் பிரதிபலிப்பாக இந்நூலைக் கருதலாம். பாலர் வைத்தியத்தில் நோய்நாடல், சிகிச்சை முறைகளில் ஆங்கில மருத்துவமும், தமிழ் மருத்துவமும் ஒருமித்து இந்நூலில் கூறப்பட்டுள்ளது.

21. பால வைத்திய வினாக்கள்

ஆ. வைரமுத்து வைத்தியர், யாழ்ப்பாணம் நாவலர் அச்சுக்கூடம் - 1925

440 வினாக்களைக் கொண்ட இந்நூல் அக்கால யாழ்ப்பாணச் சித்த மருத்துவக் கல்விநிலை எவ்விதம் வளர்ச்சியுற்றிருந்தது என்பதை நன்கு எடுத்துக் காட்டுகிறது எனலாம். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் சித்த வைத்திய மாணவர்கள் எவ்வெவற்றைப் பற்றி அறிந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டார்கள் என்பதை இவ்வினாக்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. கருவி காரணதத்துவங்களின் பிறப்பு, விரிவு, ஒடுக்கம், பிராணாயாமம் (சுவாசம்) ஐம்பூத இயல், 96 தத்துவங்கள், முத்தோடங்கள், நாடிநடை, தசவாயுக்கள், ஆறாதாரங்கள், அங்காதிபாதம், மனம், பஞ்சகோசங்கள், பல்வேறு வகையான நோய்கள், நோயாளர்களைப் பராமரிக்க வேண்டிய முறைகள், செடி, கொடி, சரக்கு, மருந்துகள் முதலான பல்வேறு விடயங்கள் பற்றிய வினாக்கள் இதில் இடம் பெற்றுள்ளன.

22. வைத்திய சிந்தாமணி

ஐ. பொன்னையா, (பதிப்பாசிரியர்) ஏழாலை, திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலை, 1932

இதில் எண்வகைத் தேர்வு (அட்டவித பரீட்சை)கள், இலங்கண விதி, கஷாயவிதி, சரக்குச் சுத்தி முறைகள், பற்ப செந்தூர விதி, மாத்திரை விதி, சூரண விதி, கிருத (நெய்) விதி, இரசாயன விதி, கற்ப விதி என்பவற்றின் கீழ் அவ்வவற்றுக்குரிய விளக்கங்கள், மருந்துகள் என்பன பற்றிக் கூறப்பட்டுள்ளதுடன் தைலங்கள், கண் மருந்துகளும் கூறப்பட்டுள்ளன.

23. வைத்தியத் தெளிவு – அனுபந்தத்துடன்

ஐ. பொன்னையா, (பதிப்பாசிரியர்) செட்டியாரியற்றியது, திருமகள் அச்சுயந்திரசாலை, சுன்னாகம், 1930

200 செய்யுட்களைக் கொண்ட இந்நூலில் நாடிகள் முத்தோடங்கள், சில பொதுவான நோய்கள் பற்றியும் அவற்றுக்கான மருந்துகள், பத்தியாபத்தியம் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

24. வைத்திய பூரணம் - 205 (அகத்திய முனிவர் அருளிச் செய்தது)

(அகத்திய முனிவர் அருளிச் செய்தது) ஐ. பொன்னையா பதிப்பாசிரியர், திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலை, மல்லாகம், 1938

அகத்திய முனிவரருளிய சித்த மருத்துவ நூல்கள் யாழ்ப்பாணத்தில் பெரிதும் கையாளப்பட்டு வந்துள்ளமைக்கு இந்நூலும் சான்றாக அமைகிறது. இதில் கூறப்பட்டுள்ள பல பற்ப செந்தூரங்கள், தைலங்கள், நீறுகள் என்பவற்றை யாழ்ப்பாண மருத்துவர்களிற் பலர் கையாண்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவற்றைவிட கொழும்பு சுதேச மருத்துவக் கல்லூரி, யாழ். பல்கலைக்கழகச் சித்த மருத்துவக் கல்விப் பிரிவு, லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி என்பனவற்றிலிருந்து வெளிவந்த சித்த மருத்துவ சஞ்சிகைகளும், பல்வேறு சித்த மருத்துவச் சங்கங்களும், தனிப்பட்ட வைத்தியர்களும் காலத்துக்குக் காலம் வெளியிட்ட சித்த மருத்துவ சஞ்சிகைகள், நினைவு மலர்கள், அனுபவக் குறிப்புகள் என்பனவும் ஈழத்துச் சித்த மருத்துவ வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

சுருக்கமாகக் கூறுவதாயின் இருபதாம் நூற்றாண்டில் கணிசமான சித்த மருத்துவ நூல்கள் அச்சுவாகனம் ஏறியுள்ளன. அநேக ஓலைச்சுவடிகள் அச்சுவாகனமேற வேண்டியநிலையிலுள்ளன. அச்சில் வெளிவந்த நூற்களிற் பல இரண்டாம் பதிப்பை எதிர்நோக்கியுள்ளன. மேலும் அச்சில் வெளிவந்த நூல்களை ஏனைய ஏட்டுப் பிரதிகளுடன் ஒப்பு நோக்கிச் செப்பனிடவும், காலத்திற்கேற்ப திருத்தி வடிவமைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளது. அவற்றில் கூறப்பட்டுள்ள மருந்துகள் விஞ்ஞான ரீதியான ஆய்வுகளுக்குட்படுத்தப்பட வேண்டியுள்ளன. அவற்றில் கூறப்பட்டுள்ள நோய்களிற் பல நன்கு இனங்காணப்பட வேண்டியுள்ளன. சில நோய்கள் தற்போது வழக்கிலில்லாதொழிந்து விட்டன. அவ்விதமே மூலிகை மருந்துகளின் நிலையும் ஆகும்.

எனவே, ஈழத்துச் சித்த மருத்துவ நூல்களைத் திருத்தி அமைத்தல் அவசியமானதொன்றாகவுள்ளது. அவ்விதம் திருத்தி அமைக்கும் போது (Revised Edition) நாம ஏற்கனவே சுட்டிக் காட்டியது போன்று பொது மருத்துவம், சிறப்பு மருத்துவம் என்ற பிரிவுகளில், தொகுப்பது பிரயோசனமுடையது. அதுமட்டுமின்றி தற்கால விஞ்ஞானமுறைகளையும், தேவைக்கேற்ப சேர்த்துக் கொள்ளுதல் அவசியமாகும். இவற்றை நாம் துரிதமாக மேற்கொண்டால் தான் இருபத்தோராம் நூற்றாண்டில் சித்த மருத்துவ ஆராய்ச்சிகளுக்கு வித்திட்டவர்களாவோம். ஏனென்றால் எந்தவொரு ஆராய்ச்சிக்கும் அடிப்படையாக உள்ளது நூலாய்வேயாகும். (Literary research) தரமான நூல்கள் இருந்தால் தான் அவற்றின் துணையுடன் மருந்து பற்றிய ஆய்வுகளையும் (Drug research) மருத்துவ ஆய்வுகளையும் (Clinical research) மேற்கொள்ளமுடியும்.

7. சித்த வைத்தியர்கள்

இலங்கை அரசாங்க ஆயுர்வேத வைத்திய சபையில் தம்மை பதிவு செய்து கொண்ட ஒருவரே சுதேச வைத்தியம் செய்வதற்கு உரித்துடையவராவார். ஆயுர்வேத வைத்திய சபையில் ஆயுர்வேத வைத்தியர், யுனானி வைத்தியர், சித்த வைத்தியர் என்றே பதிவுகள் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. இதில் தமிழ் வைத்தியர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் பரம்பரை வைத்தியர்களாக இருந்தாலென்ன, பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற வைத்தியர்களாக இருந்தாலென்ன தனியார் வைத்தியக் கல்லூரிகளில் பட்டம் பெற்றவர்களாக இருந்தாலென்ன, அவர்கள் அனைவரும் சித்த வைத்தியர்கள் என்றே பதிவு செய்யப்படுகின்றனர். அவர்களின் தராதரத்தில் எவ்வித ஏற்றத்தாழ்வும் காட்டப்படுவதில்லை. (இவ்விதமே ஆயுர்வேத, யுனானி வைத்தியர்களும் ஏற்றத்தாழ்வுகள் இன்றிப் பதிவு செய்யப்படுகின்றனர்). 1972 ஆம் ஆண்டளவில் சுமார் 10,000 சுதேச வைத்தியர்கள் தம்மை ஆயுர்வேத வைத்திய சபையில் பதிவு செய்துள்ளனர். 1995 ஆம் ஆண்டளவில் பதிவு செய்யப்பட்டோர் எண்ணிக்கை ஏறத்தாழ 15,000 ஆகும். இதில் சுமார் 2000 பேர் வரையில் சித்த வைத்தியர்களாவர். இவர்களை விட பதிவு செய்யாத பலநூற்றுக்கணக்கானவர்கள் தம்மைப் பரம்பரை வைத்தியர் என்று முத்திரை குத்திக் கொண்டு வைத்தியம் செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது. இவர்களுள் போலிவைத்தியரும் அடங்குவர்.

இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் சுதேச வைத்தியர்களைப் பதிவு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. அக்காலத்திலேயே வைத்தியர்களை அவர்களின் தராதரங்களுக்கேற்ப வகைப்படுத்தி பதிவு செய்யப்படல் வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்தது. அது தொடர்பாக அரசாங்கம் ஒரு விசாரணைச் சபையை அமைத்தது. அச்சபையின் அறிக்கை 1947 ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில் வெளியிடப்பட்டது. அதன்படி சுதேச மருத்துவர்களை மூன்று பிரிவாகப் பிரித்து அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வைத்தியக்

கல்லூரிகளில் கற்றுத் தேறியவர்களை "A" பிரிவிலும், பரம்பரையாகவும், குரு சிஷ்ய முறைப்படியும், தனிப்பட்ட கல்லூரிகளிலும் வைத்தியங் கற்றுக் கொண்டவர்களை "B" பிரிவிலும், சிறப்பு மருத்துவ முறைகளான கண் வைத்தியம், முறிவு நெரிவு வைத்தியம், விஷக்கடி வைத்தியம் முதலானவற்றில் மட்டும் அனுபவமுள்ளவர்களை "C" பிரிவிலும் பதிவு செய்யும்படி ஆலோசனை கூறப்பட்டது.

எனினும், மேற்படி விசாரணைச் சபை உறுப்பினர்களில் ஒருவராக இருந்த திரு. எஸ். நடேசன் அவர்கள் தமது தனிப்பட்ட கருத்தையும் பின்வருமாறு எடுத்துக் கூறியிருந்தார்: "வைத்தியர்களை முதன் முறையாக அரசாங்கம் பதிவு செய்யும் போது வைத்தியக் கல்லூரிகளில் பட்டம் பெறாவிட்டாலுங்கூட சகல விதங்களிலும் தக்க அனுபவமும், உயர்ந்த அறிவும் உடைய வைத்தியர்கள் பலர் இருப்பதால் அவர்கள் யாவரையும் எவ்வித பாகுபாடுமின்றி பதிவு செய்ய வேண்டும்". இக்கருத்தைச் சுதேச வைத்தியர்களிற் பெரும்பாலோர் ஆதரித்ததும் குறிப்பிடத்தக்கது. எனினும் அரசினர் வைத்தியக் கல்லூரிகளில் கற்றுத்தேறியவர்களை எவ்வித பரீட்சையுமின்றி பதிவு செய்ய வேண்டும் என்றும் ஏனையோரைத் தகுந்த வைத்தியர்களைக் கொண்ட சபையில் நேர்முகத் தேர்வு நடத்தி பதிவு செய்ய வேண்டும் என்ற கருத்துக் சிலரால் முன்வைக்கப்பட்டது.

திரு. நடேசன் போன்றோரின் கருத்துக்கள் அக்காலத்துக்குப் பொருத்தமுடையனவாக இருந்த போதிலும் தற்காலத்துக்கு ஏற்புடையதாகமாட்டா என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வர். அக்காலத்தில் இருந்தது போல தற்காலத்தில் பரம்பரை வைத்தியர்களின் தரம் உள்ளதா என்பது கேள்விக் குறியாக உள்ளது. இலங்கையில் கல்வித் தரம் பல வழிகளிலும் உயர்ந்துள்ளதுடன் சித்த மருத்துவம் கற்பதற்குரிய இரண்டு கல்லூரிகளும் சுமார் முக்கால் நூற்றாண்டுகளுக்கும் மேலாக சேவையாற்றிக் கொண்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக யாழ், இலங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி பரம்பரை வைத்தியர்களின் பிள்ளைகளுக்கு கல்வியில் முன்னுரிமையும் வழங்கி வந்துள்ளது. எனவே, சித்த மருத்துவப் பரம்பரையைத் தொடர விரும்பும் பரம்பரை வைத்தியர்கள் தமது பிள்ளைகளுக்கு முறையான மருத்துவக் கல்வியை வழங்குவதற்கு போதிய சந்தர்ப்பங்களும் வழங்கப்பட்டுள்ள இந்நிலையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இலைமறை காயாக உள்ள ஒரு சில பரம்பரை வைத்தியர்களைத் தவிர பெரும்பாலோர் போலி வைத்தியர்களாகவே உள்ளனர். இவர்கள் தம்மை வைத்தியர்களாகப் பதிவு செய்தோ அல்லது

செய்து கொள்ளாமலோ வைத்தியம் செய்து வருகின்றனர். இவர்களால் ஏற்படும் தவறுகள் யாவும் முழுச் சித்த மருத்துவ சமூகத்தையுமே பாதிப்படையச் செய்கிறது. எனவே, பரம்பரை வைத்தியர்களைப் பதிவு செய்யும் விடயத்தில் அரசாங்கம் அடுத்த நூற்றாண்டின் ஆரம்பத்திலாவது குறிப்பிட்ட காலக்கெடு விதித்து அத்துடன் முடிவுக்கு கொண்டு வருதல் வேண்டும். அப்போது தான் சித்த மருத்துவப் பட்டப்படிப்பை ஏற்படுத்தியதன் நோக்கத்தை அடைய முடியும்.

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை ஈழத்துச் சித்த மருத்துவ வளர்ச்சியில் பரம்பரை வைத்தியர்களுக்கு முக்கிய பங்கு இருந்து வந்தது. அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளிலிருந்து வைத்தியர்கள் உருவாகத் தொடங்கியதும் இவர்களின் முக்கியத்துவம் குறையத் தொடங்கியது எனலாம். எனினும் விரல் விட்டு எண்ணக்கூடிய பரம்பரை வைத்தியர்கள் இன்னமும் அதிசயிக்கத்தக்க விதத்தில் பல நோய்களைக் குணப்படுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது. பரம்பரை வைத்தியர்களிடம் அபூர்வமான, அனுபவ பூர்வமான சித்த வைத்திய முறைகள் இருப்பதாக ஒரு கருத்துப் பரவலாக நிலவுகிறது. எனவே, அவற்றை வெளிக் கொண்டுவர வேண்டும். அவற்றை எல்லோரும் பயன்பெறச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் சுதேச வைத்தியக் கல்லூரிகளில் கற்றுத் தேறிய இளைய தலைமுறையினரிடம் எழுந்துள்ளது. (இந்நோக்கத்திற்காகவே B.S.M.S. பாடத்திட்டத்தில் பரம்பரை மருத்துவம் என்று ஒரு பாடத்தை 4 ஆம் 5 ஆம் ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்டது). அதற்கான பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவை அதிகம் பயனளிக்கவில்லை என்றே கூறவேண்டும். அதற்கான காரணங்களிற் சில வருமாறு:-

1. வைத்தியக் கல்லூரிகளில் கற்றவர்களுக்குச் சித்தர் தத்துவங்களை விளங்கிக்கொள்வதற்குரிய பக்குவம் (Maturity) போதாது என்று பரம்பரை மருத்துவர்கள் கருதுவது.

2. தமக்குத் தெரிந்த வைத்திய இரகசியங்களைப் பிறருக்குச் சொன்னால் தமது வைத்தியம் பலிக்காது: குருவின் சாபத்துக்கு ஆளாகிவிடுவோம் என்ற அச்சம்.

3, தமக்குத் தெரிந்தவற்றைச் சொல்லிக்கொடுத்தால் அதன் மூலம் மற்ற வைத்தியர்கள் பயன்பெறும் வாய்ப்பு அதிகரிக்கும். அதனால் தமது வருமானம் பாதிக்கப்படும் என்ற தொழில் ரீதியான அச்சம்.

எனவே, இவற்றை நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்தாலொழியப் பரம்பரை வைத்தியர்களிடமிருந்து வைத்திய சம்பந்தமான அறிவைப் பெறுவது சிரமமானதொன்றாகும். பரஸ்பரம் நம்பிக்கையுணர்வை வளர்த்தெடுப்பதே இதில் முக்கியமாகும், அரசாங்கம் பரம்பரை வைத்தியர்களின் நலன் கருதி கருத்தரங்குகள் நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. இக்கருத்தரங்குகள் மூலம் பரம்பரை வைத்தியர்களுக்கு அறிவு வழங்கல், அவர்களிடமிருந்து அறிவைப் பெறுதல் ஆகிய இருபக்க நன்மைகள் விளையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. சித்த மருத்துவ பரம்பரை வைத்தியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று 1996 ஆம் ஆண்டு மார்கழி மாதம் சித்த போதனா வைத்தியசாலையில் அதன் பொறுப்பதிகாரியாக இருந்த சித்த மருத்துவ கலாநிதி திருமதி இ. சத்தியநாதன் தலைமையில் நடாத்தப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சில பரம்பரை வைத்தியர்களிடம் எவ்வித விடயமும் இல்லாதிருப்பதும் குறிப்பிடத்தக்கது. அவர்கள் தான் கூடுதலாக ''குரு சாபம்'' அது, இது என்று கூறித் தம்மிடம் ஏதோ விடயம் இருப்பது போலவும், அவற்றை வெளியிற் சொல்ல முடியாது என்றும், கூறி வாய்ச் சவாடல் விடுவர். இறைத்த கிணறுதான் ஊறும் அது போல சொல்லிக் கொடுக்க, சொல்லிக் கொடுக்கத்தான் அறிவு வளரும். எனவே உண்மையான வைத்திய அறிவுள்ளவர்கள், சித்த மருத்துவ வளர்ச்சியில் அக்கறையுள்ளவர்கள் தமக்குத் தெரிந்தவற்றைப் பிறருக்குச் சொல்லிக் கொடுப்பதற்குப், பின்னிற்க மாட்டார்கள். அதனை உண்மையான பரம்பரை வைத்தியர்களும் பின்பற்றுவார்கள் என எதிர்பார்ப்போமாக.

அதே வேளை பரம்பரை வைத்தியர்களிடமுள்ள இரகசியங்களில் தான் சித்த மருத்துவத்தின் எதிர்காலமே தங்கியுள்ளது என்று கருதாமல் எம் மத்தியில் கிடைத்துள்ள நூல்களையும் ஏட்டுச் சுவடிகளையும் ஆராய்ந்து அவற்றிலுள்ள உண்மைகளை மீண்டும், நிலை நாட்டுவதில் ஈடுபடுவதும் மிகவும் பிரயோசனமான தொன்றாகும். பரம்பரை வைத்தியர்களின் கரங்களிருந்த சித்த வைத்தியம் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சித்த மருத்துவப் பட்டதாரிகளின் கரங்களுக்கு மாறியுள்ளது. அதற்கேற்ப அதன் வளர்ச்சியை இருபத்தோராம் நூற்றாண்டில் தொடரவேண்டியது அவர்களின் கடமையாகும்.

அடுத்து, இலங்கையில் ஆங்கில மருத்துவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது சுதேச மருத்துவர்களின்

எண்ணிக்கை பலமடங்கு அதிகமாகவே உள்ளது. எமது மக்களைப் பொறுத்தவரையில் அவர்களிற் பெரும்பாலோர் (சுமார் 70—80 வீதத்தினர்) சுதேச மருத்துவத்தையே பெரிதும் நாடுகின்றனர். கிராமப் புறங்களில் இவ்விகிதம் இன்னும் அதிகமாகும். அவசியம் ஏற்பட்டாலொழிய ஆங்கில மருத்துவத்தை பெரும்பாலோர் நாடுவதில்லை. இந்த நூற்றாண்டின் நடுப்பகுதிக்குப் பின்னர் ஆங்கில மருத்துவமனைகளினதும் ஆங்கில மருத்துவர்களினதும் எண்ணிக்கையும் படிப்படியாக அதிகரித்து வந்துள்ளது. தற்போது இலங்கையிலுள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களிலிருந்தும் வருடந்தோறும் நூற்றுக் கணக்கானோர் ஆங்கில மருத்துவம் கற்று வெளியேறுகின்றனர். இருந்த போதிலும் சுதேச மருத்துவர்களின் சேவை இன்றியமையாத ஒன்றாக உள்ளது. இதற்குக் காரணங்கள் பல உள்ளன.

1) ஆங்கில மருத்துவத்தில் பட்டம் பெற்ற பலர் வெளிநாடுகளுக்குச் செல்வதில் நாட்டங் கொண்டுள்ளமை.

2) ஆங்கில மருத்துவர்களுக்கு அரசாங்க நியமனம் உடனடியாகக் கிடைக்கும் வாய்ப்புகள் அதிகம் உள்ளமை.

3) குடும்பம், பிள்ளைகளின் கல்வி போன்ற பல்வேறு காரணங்களால் ஆங்கில மருத்துவர்களிற் பலர் நகர்ப்புறங்களில் தொழிலாற்றுவதில் நாட்டங் கொண்டுள்ளமை.

ஆனால் சுதேச மருத்துவர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்குத் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் செல்லும் வாய்ப்புகள் மிக மிகக் குறைவாகவே உள்ளது. அதே நேரம் அரசாங்க வேலை வாய்ப்புக்களும் அவர்களுக்கு அதிகம் இல்லை. பெரும்பாலோர் தனிப்பட்ட முறையில் தொழில் புரிய வேண்டிய நிர்ப்பந்தத்திலேயே உள்ளனர். இருந்தபோதிலும் ஆங்கில மருத்துவ மனைகள், ஆங்கில மருத்துவர்கள் இல்லாத பெரும்பாலான இடங்களில் இச்சுதேச வைத்தியர்களே மக்கள் நல்வாழ்விற்குப் பொறுப்பாக உள்ளனர்.

1972 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வின்படி இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் இருந்த ஆங்கில, சுதேச மருத்துவர்களின் விபரத்தைப் பின்வரும் அட்டவணை எடுத்துக் காட்டுகிறது. மேலும் இந்த ஆய்வின்படி தனிப்பட்ட முறையில் தொழில்புரியும் ஆங்கில மருத்துவர்களிலும் பார்க்க ஏறத்தாழ 12 மடங்கு தனிப்பட்ட முறையில் தொழில் புரியும் பதிவு செய்யப்பட்ட சுதேச வைத்தியர்கள் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

S.H.S. Division	Doctor / Population Ratio Per 100.000	
	Western	Ayurveda
இலங்கை	6.7	77.5
அநுராதபுரம்	2.1	90.5
பதுளை	3.1	33.6
மட்டக்களப்பு	3.1	32.0
கொழும்பு	16.5	67.6
காலி	4.9	71.6
யாழ்ப்பாணம்	10.0	95.4
களுத்துறை	5.4	104.5
கண்டி	4.8	59.9
கேகாலை	2.1	114.6
குருணாகலை	2.7	115.5
மாத்தளை	3.1	68.1
மாத்தறை	3.4	84.0
புத்தளம்	8.2	80.6
இரத்தினபுரி	3.0	79.5
வவுனியா	0.0	39.2

Estimated Doctor / population Ratio by S. H. S. Division for Western and Ayurvedic Doctors, 1972.

(National Manpower Study)

இலங்கையின் வடக்குக் கிழக்கைப் பொறுத்தவரையில் 1983ஆம் ஆண்டிற்குப் பிறகு ஏற்பட்ட போர்ச் சூழ்நிலை காரணமாக பெருமளவில் ஆங்கில மருத்துவர்கள் வடக்குக் கிழக்கிற்கு வெளியே இடமாற்றம் பெற்றுச் சென்றதாலும் பலர் வெளிநாடுகளுக்குச் சென்று விட்டதாலும் அரசாங்க மருத்துவமனைகளிற்கூட ஆங்கில மருத்துவர்களுக்குப் பற்றாக்குறை நிலவியது. மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்ற தியாக சிந்தையுடைய மருத்துவர்கள் மட்டுமே பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் சேவையாற்றினர்.

இக்காலப்பகுதியில் வடக்குக் கிழக்குப் பகுதியில் வைத்திய சேவையை வழங்கியதில் சித்த மருத்துவர்களின் பங்களிப்பும்

குறிப்பிடத்தக்க ஒன்றாகும். வைத்தியசாலைகள் சரிவரச் செயற்படாமை, ஆங்கில மருத்துவர்களின் பற்றாக்குறை, போக்குவரத்துப் பிரச்சினைகள் போன்ற இன்னோரன்ன காரணங்களால் மக்களிற் பலர் சித்த மருத்துவத்தை நாட ஆரம்பித்தனர். சித்த போதனா வைத்தியசாலை, சித்த மருத்துவ சிகிச்சை நிலையங்கள் என்பவற்றிற்கு வருகை தந்த நோயாளரின் தொகையிலிருந்து இதை நன்கு அறிந்துகொள்ள முடியும். அதுமட்டுமன்றி தனிப்பட்டமுறையில் தொழில் புரிந்த சித்த மருத்துவர்களிடமும் பெரும் எண்ணிக்கையிலானோர் சிகிச்சை பெற்றனர்,

"அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவை போல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் — அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு"

என்ற பாடலுக்கிணங்க இங்கு சித்த மருத்துவர்களிற் பலர் மக்களோடு மக்களாக வாழ்ந்து, அவர்களின் சுக துக்கங்களில் பங்குபற்றித் தம்மாலியன்றளவு சேவை புரிந்து வருகின்றனர். இவர்களின் சேவையை மேம்படுத்தினால் எமது சமூகமும் நாடும் மேலும் பல நன்மைகளைப் பெறமுடியும்.

சித்த வைத்தியர்களைப்பற்றி இங்கு எடுத்துக்கூற முற்பட்டாலும் சித்த வைத்தியச் சங்கங்கள் பற்றியும் எடுத்துக் கூறினாற்றான் இவ்வத்தியாயம் நிறைவு பெறும் என்று கருதுகிறோம்.

சித்த வைத்தியச் சங்கங்கள்

இருபதாம் நூற்றாண்டில் இலங்கையில் சித்த வைத்தியத்தை வளர்ப்பதற்காகப் பல சித்த வைத்தியச் சங்கங்கள் தோற்றம் பெற்றுள்ளன. அவையனைத்தினதும் குறிக்கோள்களில் முக்கியமானவை:

1) சித்த மருத்துவர்களை ஒன்றிணைத்தல்

2) சித்த மருத்துவத்தின் தனித் தன்மையைப் பேணி வளர்த்தல்

என்பனவாகும். இக்குறிக்கோள்களை அடைவதற்காக அவை பெரும்முயற்சிகளை எடுத்துள்ளன. ஆயினும், சித்த மருத்துவர்களை ஒன்றிணைப்பதில் அவற்றால் பூரணமாக வெற்றியைப் பெறமுடியவில்லை என்றே கூறவேண்டும். சித்த மருத்துவர்களிடையே

இருந்த தலைமைத்துவப் போட்டிகள், நாட்டின் அரசியற் சூழ்நிலைகள் என்பன இதற்கு முக்கிய காரணங்கள் எனலாம்.

இருபதாம் நூற்றாண்டில் சித்தமருத்துவ வளர்ச்சியின் வேகத்தைக் கட்டுப்படுத்திய காரணிகளில் சித்தமருத்துவர்களிடையே நிலவிய ஒற்றுமையின்மையும் ஒரு முக்கிய காரணியாகும் என்பதை இங்கு ஒப்புக் கொண்டுதானாக வேண்டும். பரம்பரை வைத்தியர்களிடையேயும், பட்டம் பெற்ற வைத்தியர்களிடையேயும் நிலவிய ஒற்றுமையின்மை; பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற வைத்தியர்களிடையேயும் தனியார் வைத்தியக் கல்லூரியில் பட்டம் பெற்ற வைத்தியர்களிடையேயும் நிலவிய ஒற்றுமையின்மை, அரசாங்கத்தில் தொழில்புரிந்த வைத்தியர்களிடையேயும் தனிப்பட்ட முறையில் தொழில் புரிந்த வைத்தியர்களிடையேயும் நிலவிய ஒற்றுமையின்மை முதலியன இங்கு குறிப்பிடத்தக்கன.

"வேசியரும் பாம்பும் விதிநூல் வைத்தியரும்
பூசுரரும் கோழிகளும் பொன்னனையாய் - பேசியொரு
காரணந்தானின்றியே கண்டவுடனே பகையாம்
காரணந்தா னப்பிறப்புக் காண்"

என்ற பாடல் வரிகள் நிதர்சனமாவதையே இன்றுங் காண்கிறோம்.

அகில இலங்கைச் சித்த ஆயுள்வேதச் சங்கம், மட்டக்களப்பு சித்த ஆயுள்வேதச் சங்கம், ஆயுர்வேத சம்மேளனம், சுதேச வைத்திய அபிவிருத்திச் சங்கம், சித்தமருத்துவ அபிவிருத்திச் சங்கம் ஆயுர்வேத பாதுகாப்புச்சபை, சித்தமருத்துவ பட்டதாரிகள் சங்கம், சித்தமருத்துவ மாணவர் மன்றங்கள் என்பன இக்காலத்தில் தோன்றிய சில சித்தமருத்துவச் சங்கங்களாகும்.

சித்தமருத்துவ வளர்ச்சியில் இச்சங்கங்கள் ஒவ்வொன்றும் ஏதோ ஒருவிதத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதையும் மறுப்பதற்கில்லை. சித்த மருத்துவம் சம்பந்தமான மகாநாடுகள், கருத்தரங்குகள் என்பவற்றை நடாத்தியும் சித்த மருத்துவ நூல்களையும், சஞ்சிகைகளையும் வெளியிட்டும் சித்த மருந்துகளின் உற்பத்தியை ஊக்குவித்தும் சித்த மருத்துவர்களின் அடிப்படை, உரிமைகளுக்குக் குரல்கொடுத்தும் இச்சங்கங்கள் தமது பணிகளைச் செய்துள்ளன.

8. சித்த மருத்துவ வளர்ச்சிக்குத் தேவையான காரணிகள்

எந்த ஒரு துறையும் தனித்து நின்று வளர்ச்சி காணமுடியாது. ஒரு துறையின் வளர்ச்சிக்குப் பல துணைக் காரணிகள் அவசியமாகின்றன. உதாரணமாக மேலைத்தேச ஆங்கில மருத்துவத்தை எடுப்போமேயானால் அதன் வளர்ச்சியில் நவீன அறிவியற்றுறைகள் பலவும் துணை நிற்பதைக் காணக்கூடியதாக உள்ளது. அது மட்டுமன்றி ஆங்கில மருத்துவம் கற்றோருக்கும், கற்போருக்கும் தேவையான நூல்கள் (Standard text books) புதிது புதிதாக ஆக்கம் பெற்ற வண்ணமுள்ளன; தேவையான மருந்துகள் தாராளமாகக் கிடைக்கின்றன; தேவையான உபகரணங்கள் இலகுவில் பெறக்கூடியதாக உள்ளது; நோய்களை நிதானிப்பதற்கு வேண்டிய ஆய்வுகூட வசதிகள் உள்ளன; பயிற்றப்பட்ட துணை ஆளணி வசதிகள் உள்ளன; எல்லாவற்றுக்கும் மேலாக இவை யாவும் உலகளாவிய ரீதியில் ஒருமுகப்படுத்தப்பட்ட நிலை காணப்படுகிறது: எனவே அவர்களால் நோயாளர்களுக்குச் சிறந்த சேவையாற்ற முடிகிறது. அத்துடன் தமது மருத்துவத் துறையில் அவர்கள் தமது சிந்தனை, அறிவு முதலியவற்றை மேலும் விரிவுபடுத்த முடிகிறது.

இதை நாம் சித்த வைத்தியர் விடயத்தில் கருதுவோமாயின் அவர்களிடம்

1) எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகளின் பிரதிகளும், எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர் அச்சிடப்பட்ட, திருத்தியமைக்கப்படாத நூல்களுமே பெருமளவில் உள்ளன.

2) தேவையான மருந்துகளை ஒவ்வொரு சித்தவைத்தியரும் தமது சொந்த முயற்சியினாலேயே தயாரிக்க வேண்டிய நிலையிலுள்ளனர். அவற்றிற்குத் தேவையான மூலிகைகள், தாதுக்கள், விலங்குவர்க்கப் பொருட்கள் என்பவற்றை அவர்களே சேகரிக்க வேண்டியுள்ளது; அவற்றைப் பாதுகாக்க (Preservation) வேண்டியுள்ளது; சுத்தி (Purification) செய்ய வேண்டியுள்ளது. மருந்து தயாரிப்பதற்காக உபகரணங்கள், மருந்துக்கூடம் அமைத்தல் முதலியவற்றிற்கும் அவர் பெருந்தொகையான பணத்தை முதலீடு செய்ய வேண்டியுள்ளது.

3) இவற்றிற்கிடையில் தான் அந்த மருத்துவர் தன்னிடம் வரும் நோயாளிகளைப் பரிசோதித்து மருந்துகளும் ஆலோசனைகளும் வழங்குகிறார்.

4) இத்தகைய சூழ்நிலையில் அவரால் நோயாளர்களுடன் அதிக நேரம் செலவிட முடியாத நிலையும் ஏற்பட்டு விடுகிறது.

மேற்குறிப்பிட்ட காரணங்களால் ஒரு சித்த மருத்துவரின் மருத்துவ ஆய்வுத்திறன் பெரிதும் பாதிக்கப்படுகிறது. சித்த மருத்துவம் வளர்ச்சியடைவதைத் தாமதப்படுத்தும் காரணிகளாக இவை அமைந்துள்ளன எனலாம். எனவே, இவற்றை நீக்கினாற்தான் அடுத்த நூற்றாண்டில் சித்த மருத்துவத்தை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல முடியும். அதற்குத் தேவையானவை

1. சித்த மருத்துவ துணை ஆளணிகள் (Para Siddha Medical Staffs)
2. சித்த மருந்தகங்கள் (Siddha Pharmacies)
3. மூலிகைத் தோட்டங்கள் (Herbal gardens)
4. சித்த மருத்துவ ஆய்வு மையம் (Siddha Medical Research Centre)

இவையாவும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. சித்த மருத்துவர்களின் சுமையைக் குறைத்து, அவர்களின் சிந்தனையை சித்த மருத்துவ ஆய்வில் முழுமையாக ஈடுபட உதவக் கூடியன. அவை பற்றி இனிச் சுருக்கமாக நோக்குவோம்.

துணை ஆளணிகள்

சித்த மருத்துவர்களின் பணிகளைப் பன்முகப்படுத்தவும் அவர்களின் (குறிப்பாக வைத்திய சாலைகளில் பணிபுரிவோரின்) வேலைப் பளுவைக் குறைக்கவும் துணை ஆளணிகள் பெரிதும் உதவ

முடியும். உதவி மருத்துவர்கள் (AMP), யோகாசனம், பிராணாயாமம் முதலியவற்றில் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றவர்கள், எண்ணெய் பூசி உடல் பிடித்து விடுதல் முதலியவற்றில் தேர்ச்சி பெற்றோர் (Siddha Physio therapists), சத்துணவு ஆலோசகர்கள் (Nutritients), மூலிகை ஆய்வாளர்கள் (Herbalists), மருந்தாளர்கள் (Pharmacists) முதலியோரை இங்கு விசேடமாகக் குறிப்பிடலாம். இவர்களின் தேவையும் சேவையும் அவசியமானதாகும்.

சித்தமருத்துவர்களின் வேலைப்பளுவைக் குறைப்பதில் உதவி மருத்துவர்கள் நேரடியாக உதவ முடியும். குறிப்பாக வெளிநோயாளர் பிரிவுகளில் இவர்களின் உதவி இன்றியமையாதது. உள்ளக நோயாளிகளைப் பொறுத்தவரையில் (Ward Patients) மருத்துவ நிபுணர்கள் விதிக்கும் முறைகளுக்கேற்ப நோயாளிகளுக்குத் தேவையான யோகாசனப் பயிற்சிகள், மூச்சுப் பயிற்சிகள் என்பவற்றை அளிப்பதற்கு அவ்வத்துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களை நியமிப்பது சிறந்தது. அதுபோலவே சிலநோய்களுக்கு எண்ணெய் பூசி உடல் பிடித்து விடுதல் (Massage theraphy) ஒத்தடம் கொடுத்தல் அதனுடன் தொடர்பான பயிற்சிகளை நோயாளிகளுக்கு வழங்குவதற்கும் உரியவர்களை நியமிப்பது அவசியமாகும்.

அடுத்து சித்த மருத்துவத்தில் ''உணவே மருந்து'' என்ற உயரிய தத்துவம் உள்ளது. ஒருவர் சாதாரணமாக எவ்வித உணவுகளை உட்கொள்ள வேண்டும்; எந்த உணவுகளை உட்கொள்ளக்கூடாது; எவ்விதம் உணவுட்கொள்ள வேண்டும்; எப்போது உணவுட்கொள்ள வேண்டும் என்பன போன்ற பல விடயங்களைச் சித்த மருத்துவ நூல்கள் எடுத்துக் கூறியுள்ளன. ஒருவர் தமது தேக அமைப்பிற்கு ஏற்ப உணவுகளைத் தெரிவுசெய்து உட்கொண்டு வருவாரேயாயின் அவரை நோயணுகமாட்டாது என்பதே சித்தர்களின் கருத்தாகும். ஆனால், இன்றைய வேகமான உலகில் உணவுப் பழக்க வழக்கங்களை ஒழுங்காகக் கடைப்பிடிக்க அநேகம் பேரால் முடியாதுள்ளது. அதன் விளைவாகவே பல்வேறு நோய்களும் ஏற்படுகின்றன. எனவே நோய் ஏற்பட்ட பின்னருங்கூட மருந்துகளிலும் பார்க்க தகுந்த உணவு முறைகளைப் பின்பற்றி அந்நோய்களிலிருந்து விடுபடமுடியும். அதுமட்டுமன்றி நோய்க்கு மருந்து சாப்பிடும்போது எவ்வெவ்வுணவுகளைச் சாப்பிடவேண்டும். எவ்வெவற்றைச் சாப்பிடக்கூடாது (பத்தியா பத்தியம்) என்றெல்லாம் வைத்தியர்கள் விதிப்பதுண்டு. தற்கால மேலைத்தேச விஞ்ஞான உலகம் குறிப்பிடும் உணவுப் பழக்க வழக்கங்களிற்கும் சித்தமருத்துவம் கூறும் கீழைத்தேச விஞ்ஞான ரீதியிலான உணவுப் பழக்க

வழக்கங்களிற்கும் இடையில் கணிசமான வேறுபாடுகளுண்டு. எனவே, சித்த மருந்துகளை உட்கொள்ளும் நோயாளிகளுக்கு வைத்தியர் விதிக்கும் முறைப்படி உணவுகள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்குப் பயிற்றப்பட்ட உணவு ஆலோசகர் இருப்பது பிரயோசனமானது.

சித்த மருந்தகம்:

சித்த மருத்துவம் வளர்ச்சியடைய வேண்டுமானால் சித்த மருந்துகளின் பாவனை அதிகரிக்கப்படல் வேண்டும். சித்த மருந்துகளின் பாவனை அதிகரிக்கப்படவேண்டுமானால் சித்த மருந்துகள் தாராளமாகக் கிடைக்க வேண்டும். சித்த மருந்துகள் போதியளவில் கிடைக்க வேண்டுமானால் அவை தயாரிக்கப்படுவதற்குச் சித்த மருந்தகங்கள் தேவை. இலங்கையில் சித்த மருத்துவ வளர்ச்சியில் பிரச்சினையாக இருப்பது சித்த மருந்தகங்களின்மையேயாகும்.

அரசாங்கமானது 1969ல் ஆயுர்வேதமருந்துக் கூட்டுத்தாபனம்ஒன்றை நிறுவி ஆயுர்வேத மருந்துத் தயாரிப்புக்கு ஊக்கமளித்துள்ளது. இக்கூட்டுத்தாபனத்தின் முக்கியநோக்கங்களாவன:

1) ஆயுர்வேத மருந்துகளைத் தயாரித்தல், அவற்றை நியாய விலையில் விற்பனை செய்தல்.

2) ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளையும், மருந்து மூலப்பொருட்களையும் இறக்குமதி செய்தல், விநியோகித்தல்

3) ஆயுர்வேத மருந்துகளின் ஆராய்ச்சி

4) உள்நாட்டு ஆயுர்வேத மூலிகைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், மூலிகைச் செய்கையை ஊக்குவித்தல். அவற்றை கொள்வனவு செய்தல்.

ஆயினும், ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனமானது ஆயுர்வேத மருந்துகளை உற்பத்தி செய்த அளவிற்கு சித்த மருந்துகளின் உற்பத்தியில் போதிய கவனம் செலுத்தவில்லை என்றே கூறவேண்டும். எனவேதான் வடக்குக் கிழக்கிலுள்ள அரசாங்க சித்த வைத்திய சிகிச்சை நிலையங்களில் அரசாங்கத்தால் ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்படும் ஆயுர்வேத மருந்துகளையே சித்த மருத்துவர்கள் பயன்படுத்தவேண்டிய நிலையிலுள்ளனர். இது எந்த வகையில் சித்த மருத்துவ வளர்ச்சிக்கு உதவியாக அமைய முடியும்? சித்த

மருத்துவர்கள் சித்த மருந்துகளைப் பயன்படுத்தினால் மட்டுமே சித்த மருத்துவ வளர்ச்சிக்கு வழிகோல முடியும்.

யாழ்ப்பாணத்தில் சில தனியார் சித்த மருந்தகங்கள் சித்த மருந்துகளை உற்பத்தி செய்து வருகின்ற போதிலும் அவை தயாரிக்கும் மருந்துகள் தர நிர்ணயம் செய்யப்படுவதில் பல பிரச்சினைகள் உள்ளன. மேலும் அவை குறிப்பிட்ட சில மருந்துகளையே தயாரிக்கக்கூடிய நிலையிலுள்ளன. தனியார் மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் வியாபார நோக்கில் செயற்படுவதால் அவற்றால் தயாரிக்கப்படும் மருந்துகள் தரம் குறைந்தவையாக இருக்கும் என்றதொரு பொதுவான கருத்தும் பலரிடையே நிலவுவது தவிர்க்க முடியாததாகவுள்ளது. ஆனால், சித்த மருத்துவர்களின் மருந்துத் தேவையை இவைதான் கணிசமான அளவில் நிறைவேற்றி வருகின்றன என்பதை எவரும் மறுக்க முடியாது.

இதைவிட, பெரும்பாலான சித்த மருத்துவர்கள் தமக்குத் தேவையான சித்த மருந்துகளைத் தாமே தயாரிப்பதில் திருப்தி அடைகின்றனர். தரமான மருந்துகளைப் பெற முடியாதிருப்பதே இதற்கு முக்கிய காரணமாகும் யாழ். பல்கலைக்கழகச் சித்த மருத்துவத்துறை, யாழ். மாநகரசபை, இலங்கா சித்த ஆயுர்வேதக் கல்லூரி, சித்த போதனா வைத்தியசாலை, முதலியன சித்த மருந்துகளின் உற்பத்தியை ஊக்குவிக்கும் முயற்சியுடன் செயற்பட்டு வருகின்றன யாழ். அரசாங்க அதிபர் செயலகமும் சித்தமருந்துகளின் உற்பத்தி தொடர்பாக பல திட்டங்களைச் செயற்படுத்த முயற்சி எடுத்துள்ளது. 1980களின் பிற்பகுதியில் கனேடிய நிறுவனத்தின் உதவியுடன் கிளிநொச்சியில் சித்த மருந்தகம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் அத்திட்டம் பின்னர் அமுல்படுத்தப்பட முடியாமல் போய்விட்டது.

சித்த மருந்தகமானது அரச அங்கீகாரத்துடன் நிறுவப்படுவதே வரவேற்கப்படத்தக்கதாகும். அதன் மூலம்:-

1. தரமான மருந்துகளைத் தயாரிக்க முடியும்.

2. மருந்து தயாரிப்பதில் நவீன முறைகளைப் புகுத்த முடியும்.

3. அரச அங்கீகாரத்துடன் நிறுவப்படும் போது வெளிநாட்டிலுள்ள சித்த மருந்து தயாரிக்கும் நிறுவனங்களுடன் இலகுவில் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

4. அரசாங்கத்தின் கீழ் இயங்கும் சித்த மருத்துவ சிகிச்சை நிலையங்கள் அனைத்திற்கும் சீராக சித்த மருந்துகளை விநியோகிக்க முடியும். அதன் மூலம் சித்த மருந்துகளின் பாவனையில் ஓர் ஒழுங்குமுறையை ஏற்படுத்த முடியும். சித்த மருந்துகளின் Clinical research இற்கு இது மிகவும் முக்கியமானதாகும்.

5. தனிப்பட்ட முறையில் தொழில் புரியும் சித்த மருத்துவர்களுக்கு நியாயமான விலையில் தரமான மருந்துகளை வழங்க முடியும்.

6. சித்த மருத்துவபட்டதாரிகள் பலருக்கு வேலைவாய்ப்பை வழங்க முடியும்.

இவ்விதம் மருந்தகம் ஒன்றை அமைப்பது உடனடித் தேவையாக இருந்த போதிலும் அவ்விதம் மருந்தகத்தை அமைப்பதற்கும் அது சரிவரச் செயற்படுவதற்கும் சிறிது காலம் எடுக்கும். அதுவரைக்கும் அரசாங்கமானது தென்னிந்தியாவிலுள்ள அரச சித்த மருந்தகங்களில் இருந்து தேவையான சித்த மருந்துகளை இறக்குமதி செய்து நியாயவிலையில் சித்த மருத்துவர்களுக்கு வழங்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். ஆங்கில மருந்துகளின் இறக்குமதிக்குப் பெருந்தொகைப் பணத்தைச் செலவிடும் அரசு சுதேச மருத்துவங்களில் ஒன்றான சித்த மருத்துவத்துக்குத் தேவையான மருந்துகளின் இறக்குமதிக்குக் கணிசமான பணத்தைச் செலவிட முன்வரல் வேண்டும். சித்த மருந்துகள் தாராளமாகக் கிடைக்குமிடத்து சித்த மருத்துவர்களிற் சிலர் சில ஆங்கில மருந்துகளைப் பயன்படுத்துகின்ற நிலையும் நீங்குதற்கு வழியேற்படும்.

மூலிகைத் தோட்டம்

மூலிகைகள் இன்றிச் சித்த மருத்துவம் இல்லை எனலாம். சித்த மருத்துவ சிகிச்சைக் கிரமத்தைப் பொறுத்தவரையில்:

''வேர்பாரு தளைபாரு மிஞ்சினக்கால்
மெல்ல மெல்ல பற்ப செந்தூரம் பாரே''

என்று அகத்தியர் சில்லறைக்கோவையில் தெளிவுபடக் கூறப்பட்டுள்ளது. எனவே மூலிகைகளைப் பற்றிய அறிவு சித்த மருத்துவத்தில் முதன்மை பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்தரசர்களா மூலிகை வளர்ப்பில் மிகுந்த அக்கறை காட்டியுள்ளனர். பரராசசேகர மன்னன் காலத்தில் கல்வியங்காடு என்னும் இடத்தில் பெரியதொரு மூலிகைத் தோட்டம் அமைக்கப்பட்டிருந்ததாகத் தெரிய வருகிறது. நாயன்மார்க்கட்டு, பிராமண வளவு (தும்பளை) போன்ற இடங்களில் பழைய மூலிகைத் தோட்டங்களின்

எச்சமிச்சங்கள் காணப்படுகின்றன். முற்காலத்தில் ஒவ்வொரு வைத்தியனின் இல்லமுமே மூலிகைத் தோட்டங்களைக் கொண்டவையாக அமைந்திருந்தன வைத்தியவிளக்கம், பதார்த்த சூடாமணி முதலிய வைத்திய நூல்களை இயற்றிய இருபாலைச் செட்டியார் பற்றிய கர்ண பரம்பரைக் கதையொன்று இதற்கு எடுத்துக் காட்டாகவுள்ளது. மேற்படி செட்டியாரிடம் வைத்தியத்திற்குச் செல்லும் நோயாளர்களை அவர் பரிசோதித்த பின்னர் அவர்களை வீட்டுத் திண்ணையில் உட்கார வைத்துவிட்டு, அவர் தமது வீட்டு மனையைச் சுற்றி வருவாராம். அவ்விதம் வரும்போது அவர்களது மருந்துக்குத் தேவையான மூலிகைகளைப் பறித்து வந்து கொடுப்பாராம். இஃது அவரது வீட்டைச் சுற்றி மூலிகைகள் நிறைந்திருந்ததை எடுத்துக் காட்டுகிறது.

வைத்தியர் இல்லங்களைத் தவிர திருக்கோவில் நந்தவனங்களும் சிறந்த மூலிகைத் தோட்டங்களாக விளங்கியுள்ளன. அபூர்வமான பல மூலிகைகள் திருக்கோவில் நந்தவனங்களில் வளர்க்கப்பட்டன. எனவே, யாழ்ப்பாணத்து மூலிகை வளங்கள் பற்றி ஆராய்பவர்கள் திருக்கோவில் நந்தவனங்களில் உள்ள மூலிகைகள் பற்றியும் கவனத்திற்கொள்வது அவசியமாகும். அநேகமாக யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் கோவில் உள்ளது. ஒவ்வொரு கோவிலிலும் வசதிக்கேற்ப நந்தவனங்கள் (பூந்தோட்டங்கள்) அமைக்கப்பட்டிருக்கும். அவை இறைவனுக்குரியதாக புனிதமாகப் பேணப்படும். கோவில் சொத்து என்பதால் அம்மூலிகைகளை யாவரும் அழியவிடாது பாதுகாக்க முற்படுவர். இங்ஙனம் கோவில்களை அடுத்து மூலிகைத் தோட்டங்கள் அமைக்கப்படுவதால் அங்கிருந்து வரும் மூலிகைக் காற்றானது கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு ஆரோக்கியத்தை வழங்குகிறது. அத்துடன் கோவில் போன்ற பொது இடங்களில் - மக்கள் பலர் கூடும் இடங்களில் இங்ஙனம் மூலிகைகள் வளர்க்கப்படுவதால் சாதாரண பொது மக்கள் கூட அவற்றை அடிக்கடி பார்த்து அடையாளங் (Identification) கண்டு கொள்ளவும் வழி ஏற்படுகிறது. கோவில் தல விருட்சங்களாக ஒவ்வொரு மூலிகை மரங்களை குறிப்பிட்டுப் பாதுகாப்பர். எனவே, கோவிலுக்குச் சென்று கடவுளை வணங்கும் ஒருவருக்கு உளரீதியான அமைதியும் ஆரோக்கியமும் ஏற்படுவதுமட்டுமன்றி புறத்தூய்மையும் உடல் ஆரோக்கியமும் ஏற்படவும் வழி ஏற்படுத்தியுள்ளனர் எமது முன்னோர். எனவே தான் "கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று கூறி வைத்துள்ளனர் போலும்.

மேலும் யாழ்ப்பாணத்தில் எந்தப் பிரதேசத்தில் எந்த மூலிகை செழித்து வளர்ந்ததோ அந்த இடத்தில் அந்த மூலிகையின் செய்கை

ஊக்குவிக்கப்பட்டது; பாதுகாத்துப் பராமரிக்கப்பட்டது. சிலஊர்கள் அங்குள்ள முக்கிய மூலிகைகளின் பெயரினாலே அழைக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. தமிழ்மக்களின் இல்லங்கள் தோறும் அன்றாட வாழ்வுடன் சம்பந்தப்பட்ட பல மூலிகைகள் வளர்க்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. கர்ப்பூரவள்ளி, தூதுவளை கறிமுல்லை, முசுட்டை, வாதநாராயணி, கறுத்தப்பூக்கொடி, சித்தரத்தை, இஞ்சி, வல்லாரை, கறிவேப்பிலை, மூடக்கொற்றான் முதலியவற்றை இங்கு உதாரணமாக எடுத்துக் காட்டலாம். அது மட்டுமன்றி இந்த மூலிகைகளைக் கண்ணும் கருத்துமாக அவர்கள் பராமரித்து வருவர். எனவே, இம்மூலிகைகளை வீட்டிலுள்ளோர் தவிர ஏனையோர் தன்னிச்சைப்படி பறிக்க முற்பட்டால் அந்த மூலிகை இனம் முற்றாக அந்த வீட்டில் அழிந்து போய்விடுவதும் உண்டு. குறிப்பாக குழந்தை வைத்திய சிகிச்சையில் பேர் போன கர்ப்பூரவள்ளியை இங்ஙனம் வேற்றவர்கள் சொல்லாமல் கொள்ளாமல் பறிக்கும் போது அது முற்றிலுமாக அழிந்து போவதை பலவிடங்களிலும் அவதானித்திருக்கிறோம். விஞ்ஞானம் விளக்கங் கூறமுடியாத நிகழ்வுகளில் இதுவும் ஒன்றாகும். வைத்தியர்கள் மருந்து தயாரிக்கும் போது தமக்குத் தேவையான பச்சிலை மூலிகைகளை மக்களிடமிருந்து பெற்றுக் கொள்வதுமுண்டு.

ஆனால் தற்போது வீடுகளில் கைவைத்தியமாகப் பயன்படுத்தத்தக்க மேற்படி மூலிகைகளைக் கூட அநேகர் வளர்ப்பதில்லை. நாகரீகம் என்ற மாயையில் புற அழகுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் குரோட்டன் செடிகள் முதலியவற்றையே அநேக வீடுகளில் காண முடிகிறது. மூலிகைகளின் முக்கியத்துவம் புறக்கணிக்கப்பட்டதால் அவற்றுள் பல பாதுகாக்கப்படாமல் அழிந்து போய் விட்டன. வைத்திய நூல்களில் கூறப்பட்டுள்ள பல மூலிகைகளை அடையாளங் காண்பதே சிரமமான தொன்றாகி விட்டது. சாதாரண மூலிகைகளைக் கூட பலரால் இனங்காண முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மூலிகைகளை இனங்காண்பதற்காகவும், அவற்றைப் பாதுகாப்பதற்காகவும், பயன்படுத்துவதற்காகவும் மூலிகைத் தோட்டங்கள் அமைக்கப்படல் வேண்டும் என்ற விழிப்புணர்ச்சி இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே எழுந்து வந்துள்ளது. யாழ்ப்பாணம் மாநகர சபை, இலங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி, யாழ்பல்கலைக் கழகச் சித்த மருத்துவத்துறை, வடக்குக் கிழக்கு மாகாணசபை என்பனவும் தனிநபர் சிலரும் இவ்விடயத்தில் அக்கறை காட்டிவருவது குறிப்பிடத்தக்கது. கல்வியங்காடு கைதடி, கிளிநொச்சி முதலிய இடங்களிலும் மூலிகைத் தோட்டங்கள் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் சித்த மருத்துவத்தையும், சித்த மருத்துவ மூலிகைகளையும் பேணிப்பாதுகாப்பதில் முன்னின்று உழைத்தவர்களில் மில்கவைற் தொழிலதிபர் சிவதர்மவள்ளல் அமரர் க. கனகராசா அவர்களின் பணியையும் நினைவு கூர்தல் அவசியமாகின்றது சித்த மருத்துவம் சம்பந்தமான செய்திகளைத் தமது ''மில்க்வைற் செய்தி'' என்னும் சஞ்சிகையில் வெளியிட்டுப் பரப்பியதுடன் நாட்டின் பல பாகங்களிலும் மரம் நாட்டும் இயக்கத்தை ஊக்குவித்து மூலிகை மரக்கன்றுகளை இலவசமாக வழங்கி வந்ததும் குறிப்பிடத்தக்கது.

மூலிகை, மூலிகைத் தோட்டம் என்று கூறினால் அவை நாட்டு வைத்தியர்களுடன் தொடர்புடைய ஒரு சமாச்சாரம் என்றே பலரும் கருதுகின்றனர். உண்மையில் இது தனிமனிதரிலிருந்து, குடும்பம், சமூகம், கிராமம், நகரம், நாடு அனைத்திற்குமே பல்வேறு விதங்களிலும் நலம் தரும் ஒரு விடயமாகும். கிராமங்கள் தோறும் மூலிகைத் தோட்டங்கள் அமைப்பதால் ஏற்படக்கூடிய பல நன்மைகளுள் சில வருமாறு.

1) கலப்படமற்ற தூய மூலிகை மருந்துப் பொருட்களை இலகுவாகப் பெறமுடியும்

2) காடுகளிலும் வேறு பல இடங்களிலும் அலைந்து திரிந்து மூலிகைகளைச் சேகரிக்கும் சிரமம் குறையும், செலவு மிச்சமாகும்.

3) மூலிகைகள் ஒழுங்காகவும், நிரந்தரமாகவும் கிடைக்க வாய்ப்பு ஏற்படும் எனவே, மருந்து தயாரிப்போருக்கு இது பேருதவியாக அமையும்.

4) குடிநீர்கள், எண்ணெய் வகை, நெய்வகை, சுரசம் போன்ற மருந்துகள் தயாரிப்பதற்கு சாறு முதலியன எடுப்பதற்குத் தேவையான மூலிகை வகைகளைப் பச்சையாகப் பெறும் வாய்ப்பு கிடைக்கும். (Fresh - raw drugs)

5) மூலிகைகள் தாராளமாகக் கிடைக்க வழியேற்படுவதனால் மூலிகை மருந்துகளின் விலை குறையும்.

6) இயற்கை மூலிகை மருந்துகளின் தொகை அதிகரித்தால் செயற்கை மருந்துப் பாவனையைக் குறைக்க முடியும். அவற்றின் பக்க விளைவுகளினின்றும் நோயாளர்கள் பாதுகாக்கப்படுவர்.

7) போதிய அனுபவமில்லாதவர்களைக் கொண்டு காடுகளிலும் பிற இடங்களிலிலும் இருந்து மூலிகைகளைச் சேகரிப்பதிலும் பார்க்க மூலிகைகளைப் பற்றிப் போதிய அனுபவமும் கல்வி அறிவும், பயிற்சியுமுள்ள தாவரவியலாளர்கள், விவசாயத்துறை சார்ந்தோர் முதலியோரின் துணைகொண்டு மூலிகைத் தோட்டங்களை அமைப்பதன் மூலம் தரமான மூலிகைகளைப்பெற வாய்ப்புண்டாகிறது.

8) வேலையற்ற சித்த மருத்துவப் பட்டதாரிகளுக்கும் மற்றும் பலருக்கும் வேலைவாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க முடியும்

9) சாதாரண மக்களுக்கு மூலிகை மருந்துகள் சம்பந்தமான விழிப்புணர்ச்சியையும் நம்பிக்கையையும் ஏற்படுத்த முடியும்.

10) மேலதிகமாக மூலிகைகள் பயிரிடப்படுவதால் அவற்றை ஏற்றுமதி செய்ய முடியும். அதன் மூலம் பொருளாதார அபிவிருத்தியும் ஏற்படும்.

மூலிகைத் தோட்டங்கள் பற்றி கவனத்திற்கொள்ளும் அதேவேளை கடல்தரு மருத்துவப் பொருட்களின் பயன்பாடு பற்றியும் கவனத்திற்கொள்ளுவது பிரயோசனமானது.

கடல்தரு மருத்துவப் பொருட்கள்:

சித்த மருத்துவத்தில் ஜங்கமப் பொருட்கள் என்று சொல்லப்படும் சீவப் பொருட்களும் (Animal Products) கணிசமான அளவில் மருந்தாகப் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றுள் பெரும்பாலானவை கடலிலும், கடலை அண்மிய பிரதேசங்களிலும் வாழும் விலங்குகளில் இருந்து பெறப்படுகின்றன. முத்து, பவளம், சங்கு, ஆமை ஓடு, நண்டுக்கல், நத்தை, சோகி, அம்பர் முதலியவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம். மேலும் இந்துப்பு, பூநீறு, கடல்நுரை முதலியனவும் கடற்கரை ஓரங்களிலிருந்து பெறப்படுவனவாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் அது கடலால் சூழப்பட்ட ஒரு தீவாகும். சித்த மருத்துவம் வளர்ச்சி கண்டிருக்கும் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் பெரும் பகுதி கடலை அண்டியே அமைந்துள்ளன. எனவே, கடற்றொழில் அபிவிருத்தியில் ஆர்வம் காட்டும் நாம் மேற்படி மருத்துவப் பொருட்களை சேகரிப்பதிலும் அக்கறை எடுத்துக் கொள்வது அவசியமாகும். மருந்தாகப் பயன்படும் இக் கடல்தரு பொருட்கள் போதியளவு உள்ளூரிலேயே கிடைக்கும்.

வாய்ப்பு ஏற்பட்டால் சிறந்த மருந்துகள் பலவற்றை குறைந்த விலையில் தயாரிக்க முடியும். அதன் மூலம் நோயாளர்கள் பயனடைவர்.

உதாரணமாக முத்து, பவளம் போன்றவற்றில் இருந்து தயாரிக்கப்படும் பற்பம் சுவாசநோய்களிலும், சங்கு பற்பம் இரைப்பை அழற்சியிலும், ஆமைஓட்டுப் பற்பம் - கழிச்சல் மற்றும் குழந்தைகள் நோய்களிலும், சோகிபற்பம் - தோல் வியாதிகளிலும் நண்டுக்கல் பற்பம் - சிறுநீரக கற்களைக் கரைப்பதிலும் பயன்படுகின்றன.

இம்மருந்து மூலப்பொருட்களில் பல தற்போது இறக்குமதி செய்யப்பட்டே பயன்படுத்தப்படுவதால் அவற்றின் விலையும் மிக அதிகமாக உள்ளது. அந்நியச் செலாவணியும் விரயமாகிறது.

தற்போதைய யுத்த சூழல் கடல்தரு மருந்துப் பொருட்களை பெறுவதில் தடையாக இருப்பினும், வருங்காலத்தில் இத்தடை நீங்கும் என எதிர்பார்ப்போம்.

சித்த மருத்துவ ஆய்வு மையம்:

சித்த மருத்துவத்தை அறிவியல் ரீதியாக வளர்ப்பதற்கு சித்த மருத்துவ ஆய்வு மையம் ஒன்று மிகவும் அவசியமாகும். அவ்வாய்வு மையம் சித்த மருத்துவர்கள் செறிந்து வாழும் வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் அமைதல் வேண்டும். அடுத்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இத்தகைய ஆய்வு மையம் ஒன்றை அமைப்பதற்கு அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போமாக.

சித்த மருத்துவ சுவடிக்காப்பகம்

இலங்கையில் சித்தமருத்துவ நூல்களிற்பல ஏட்டுச்சுவடிகளாகவே இன்னமும் வழக்கிலுள்ளன. ஏட்டுச் சுவடிகளிற்பல அழிந்தும் போய்விட்டன. ஏனையவை அழிந்து கொண்டுமிருக்கின்றன யாழ்ப்பாணம் நூலகத்தில் சேகரித்து வைக்கப்பட்டிருந்த பல நூற்றுக்கணக்கான சித்தமருத்துவம் சமபந்தமான ஏட்டுச்சுவடிகள் யாவும் அந்நூலகம் 1981 இல் தீக்கிரையாக்கப்பட்டபோது எரிந்து அழிந்து போய்விட்டன.

இந்நிலையில் சித்தமருத்துவ ஏட்டுச்சுவடிகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கையும் வெறும் பேச்சளவிலேயே உள்ளது. சில பரம்பரை வைத்தியர்கள் மிக்க அருமையுடன் பாதுகாத்து, பொது நூலகங்களுக்கு வழங்கிய அரிய பல ஏட்டுச்சுவடிகள் சரிவரக் கவனிப்பாரின்றி அச்சுவாகனமேறாது சிதைந்து கொண்டிருக்கின்றன. மேலும், யாழ். பல்கலைக்கழக பிரதான நூலகத்திலும், யாழ். பல்கலைக்கழகச் சித்த மருத்துவத்துறை நூலகத்திலும் கணிசமான ஏட்டுச்சுவடிகள் அச்சுவாகனமேறாத நிலையில் உள்ளன.

இந்நிலையில் பரம்பரை வைத்தியர்களிடம் உள்ள ஏட்டுச் சுவடிகளைப் பெற்றுக்கொள்வது சிரமமானதொரு பணியாகவே யுள்ளது. அவர்களுக்கு நம்பிக்கையூட்டுவது மிகவும் அவசியமான தொன்றாகும். அதாவது, அவர்களினால் வழங்கப்படும் ஏட்டுச்சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள் என்பன உரியமுறையில் அச்சுவாகனமேற்றப்படும் என்ற நம்பிக்கையுணர்வை ஏற்படுத் தினாற்தான் அவர்கள் தம்மிடமுள்ள மருத்துவ சுவடிகளை வழங்கு வதற்கு முன்வருவர். "சித்தமருத்துவ சுவடிக்காப்பகம்" ஒன்றை அமைத்து, சித்தமருத்துவ ஏட்டுச் சுவடிகளையும் கையெழுத்துப் பிரதிகளையும் சேகரித்து, அவற்றை ஆராய்ந்து அச்சில் பதித்து வெளியிடுவதற்கும் உடனடியாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க யாவரும் முன்வர வேண்டும்.

9. சித்தமருத்துவமும் ஆங்கிலமருத்துவரும்

கடந்த இருநூற்றாண்டுகளில் ஆங்கில மருத்துவமானது எமது நாட்டில் நன்கு வேரூன்றிவிட்டது. இருந்த போதிலும், ஆங்கில மருந்துகளின் எண்ணிக்கையிலும் பார்க்க பாரம்பரிய சுதேச மருத்துவர்களின் எண்ணிக்கை சற்று அதிகமாகவே இருந்து வந்துள்ளது. ஆங்கில மருத்துவர்களிற் சிலர் சுதேச மருத்துவங்களால் கவரப்பட்டு, அவற்றின் வளர்ச்சிக்குத் தம்மாலான உதவிகளைச் செய்துமிருக்கின்றனர். அவர்களில் 19 ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் இங்கு வாழ்ந்த டாக்டர் சாமுவெல் எஃப் கிறீன் அவர்களுக்கு முதலிடமுண்டு. எமது பிரதேச சுவாத்தியத்துக்கு அமைய விஞ்ஞான ரீதியிலான மருத்துவமுறை ஒன்றை அவர் வளர்க்க முற்பட்டார் என்று கருதலாம். கிறீன் அவர்கள் அக்காலத்திலிருந்த சுதேச வைத்தியர்களின் விஞ்ஞானபூர்வமான கல்வியறிவு பற்றித் திருப்தியடைந்திருக்கவில்லை. என்பது உண்மையே. அதற்காக அவர் அவர்களைப் புறக்கணித்துவிடவில்லை. தமது நூல்கள் சுதேச வைத்தியர்களுக்கும் அறிவூட்டுபவையாக அமைய வேண்டும் என்றே அவர் விரும்பினார். (அதுபற்றி ஏற்கெனவே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது) மேலும் இந்து பதார்த்த சாரம் என்னும் நூலின் முகவுரையில் த. வி. சப்மன் வைத்தியர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். 'கிறீன் வைத்தியராற் பிரசுரஞ் செய்யப்பட்ட நூல்களுக்கு இது முக்கியமான வாகடம். கிறீனிடம் வைத்தியம் கற்ற வைத்தியர்களும், நாட்டு வைத்தியர்கள் பலரும் இதை ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர்.''

ஈழத்தில் முதன் முதலில் மருத்துவ நூல்களைத் தமிழ்மொழியில் அச்சிடுவித்த பெருமை கிறீன் அவர்களையே சாரும். ''பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழில் இடம்பெற வேண்டும்'' என்று அமரகவி பாரதி அறைகூவல் விடுப்பதற்குச் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே கிறீன் என்னும் இவ் அமெரிக்க வைத்தியர் தமது நாட்டு (ஆங்கில) மொழியில் இருந்த வைத்திய சாஸ்திரத்தைத் தாமே முன்னின்று தமிழில் வெளியிட்டு விந்தை புரிந்துள்ளார். கிறீன் அவர்கள் 1848 இல் மானிப்பாயில் நிறுவிய ஆங்கில வைத்தியக் கல்லூரியில் வைத்திய பாடங்களைத் தமிழில் கற்பித்தற் பொருட்டு இவ்விதம் ஆங்கில மருத்துவ நூல்களைத் தமிழாக்கம் செய்து வெளியிடும் முயற்சியைத் தொடக்கிவைத்தார். அவர் தமது இரணவைத்தியம் என்னும் மொழிபெயர்ப்பு நூலில், ''இப் புத்தகம் தமிழ்ப் பாஷையில் இருக்கிறது. எவ்வளவு தேவையோ அவ்வளவாய்த் தமிழ்த்தேச வழக்கங்களுக்கும் ஏற்றதாக இருப்பதும் அவசியம்'' என்று விளக்கிக் கூறியுள்ளார்.

அவ்விதம் கிறீன் அவர்கள் ஆங்கில வைத்திய நூல்களைத் தமிழாக்கம் செய்தபோது தமிழ்ச் சுதேச வைத்திய வழக்கிலிருந்த மருத்துவ கலைச் சொற்களையே பெரிதும் பயன்படுத்தியுள்ளார். அதுமட்டுமன்றி அவர் தமது நூல்களுக்குப் பெயரிடும் போதும் சுதேச வைத்திய வழக்கிலிருந்த நூற்பெயர்களையே தாமும் பயன்படுத்தியுள்ளார். உதாரணமாக சுதேச வைத்தியத்தில் மனித உடலுறுப்புகள் பற்றிக் கற்க உதவும் நூலுக்கு 'அங்காதி பாதம்' என்று பெயர். கிறீன் அவர்களும் தமது Anatomy நூலின் தமிழாக்கத்திற்கு அங்காதி பாதம் என்றே பெயர் சூட்டியுள்ளார். அவ்விதமே இரண வைத்தியம், வைத்தியாகாரம், சிகிச்சா வாகடம் என்பவற்றையும் குறிப்பிடலாம்.

கிறீன் அவர்களாலும் அவர்தம் மாணவர்களினாலும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட வைத்திய நூல்களின் விபரம் பின்வருமாறு;

1)	கல்வின் கற்றரின்	'அங்காதிபாதம், சுகரணவாதம், உற்பாலனம்''	— பக்	1852, 258, 1857
2)	யோன்சயின்	'பிரசவவைத்தியம்	— பக்	258, 1857
3)	துருவிதரின்	'இரணவைத்தியம்'	— பக்	504, 1867
4)	கிரேயின்	'அங்காதிபாதம்''	— பக்	838, 1872
5)	கூப்பரின்	'வைத்தியாகரம்''	— பக்	917, 1872
6)	வெல்சின்	'கெமிஸ்தம்'	— பக்	516, 1875
7)	டாஸ்தனின்	'மனுஷ சுகரணம்	— பக்	590, 1883
8)	வாறிங்கின்	'சிகிச்சா வாகடம்	— பக்	574, 1884
9)	இந்து பதார்த்த சாரம்		— பக்	574, 1888
10)	மனுஷ சுகரண கலைச்சொற்கள்		— பக்	134, 1872
11)	அருஞ்சொல்லகராதி		— பக்	161, 1875

கிறீனின் அடிச்சுவட்டைப் பின்பற்றி இருபதாம் நூற்றாண்டில் கணிசமான ஆங்கில வைத்தியர்கள் சுதேச வைத்திய அபிவிருத்தியில் அக்கறை காட்டியுள்ளனர்.

சுதேச மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களின் விஞ்ஞான ரீதியிலான மருத்துவ அணுகுமுறையை வளர்க்கு முகமாக ஆங்கில மருத்துவப் பாடங்கள் சிலவும் அவர்களின் பாடத்திட்டத்தில் இடம்பெற்றன. உடற்கூறியல், உடற்றொழிலியல், பிணியியல், மகப்பேற்றியல் முதலியவற்றை இதற்கு உதாரணமாகக்கூறலாம். இப்பாடங்களைக் கற்பிப்பதில் ஆங்கில மருத்துவர்கள் பெரிதும் உதவினர். சித்த மருத்துவத்துறை யாழ். பல்கலைக்கழகத்தில் செயல்பட ஆரம்பித்ததும் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட பேராசிரியர்களிற் சிலர் இவ்விடயத்தில் சித்த மருத்துவத்துறை மாணவர்களுக்கு கல்வி போதிக்க முன்வந்தனர். எனினும் மருத்துவ பீடத்தில் நிலவிய விரிவுரையாளர் பற்றாக்குறை இதனைப் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கியது. மேலும் யாழ்ப்பாணத்திலிருந்து கைதடிக்குப் போக்குவரத்துப் பிரச்சினைகள் காரணமாகவும் இவ்விரிவுரைகள் பாதிக்கப்பட்டன.

தமிழ்நாட்டிலுள்ள சித்த மருத்துவக் கல்லூரிகளில் மேலைத்தேச மருத்துவப் பாடங்களைக் கற்பிப்பதற்காக அத்துறை சார்ந்த பேராசிரியர்களை விரிவுரையாளர்களாக நியமிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளதுடன், வருகை விரிவுரையாளர்களாகப் பேராசிரியர்களை ஒழுங்கு செய்வதற்கும் போதிய வசதிகள் செய்யப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. அத்துடன் தமிழ் நாட்டில் அரசபணியில் உள்ள சித்த மருத்துவர்களுக்கும் ஆங்கில மருத்துவர்களுக்கும் சம அளவிலான ஊதியமே வழங்கப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டிலுள்ள ஆங்கில மருத்துவர்களிற் கணிசமானோர் தமது தாய்வழி மருத்துவமான சித்தமருத்துவத்தில் மிகவும் நம்பிக்கை கொண்டவர்களாக விளங்குகின்றனர். சித்த மருந்துகள் தாராளமாகக் கிடைப்பதன் காரணமாகவும், அவற்றுட் பல நல்ல பயனளிப்பதன் காரணமாகவும் அவர்கள் தேவைப்படுமிடத்துத் தமது நோயாளிகளுக்கு சித்த மருந்துகளையும் வழங்கத் தயக்கம் காட்டுவதில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக சித்த மருத்துவர்களுடன் ஆய்வுகளை மேற்கொள்வதிலும் அவர்களிற் சிலர் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ் நாட்டில் அரச சித்த மருத்துவ நிலையங்களும், ஆங்கில மருத்துவ நிலையங்களும் அருகருகே அமைந்துள்ளன. எனவே நோயாளிகள் தமது இஷ்டத்துக்கேற்ப ஆங்கில மருத்துவரையோ அன்றி சுதேச மருத்துவரையோ அணுகும் வாய்ப்பு இலகுவாக்கப்பட்டுள்ளது.

இதே போன்ற நிலையை மற்றொரு தென்னிந்திய மாநிலமான கேரளாவிலும் காணக்கூடியதாக உள்ளது. அங்குள்ள அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலையின் பிரசவ, குழந்தைப்பிள்ளை வைத்திய விடுதிகளும், ஆங்கில மருத்துவ பிரசவ, குழந்தைப்பிள்ளை வைத்திய விடுதிகளும் அருகருகே அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய நிலையானது இருசாராரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவும் தேவைப்படுமிடத்து ஒருவருக்கொருவர் மருத்துவரீதியாக உதவிடவும் வழிவகுப்பதாக உள்ளது.

இப்படியொரு நிலை இலங்கையில் ஏற்படுமானால் இரண்டு மருத்துவ முறைகளும் ஒன்றுடன் ஒன்று கைகோர்த்துக் கொண்டு முன்னேறும் வாய்ப்பு ஏற்படும். அது மட்டுமன்றி எமது கலாசாரத்துக்கமைய ஆங்கில மருத்துவத்தை மேலும் மாற்றியமைக்கவும் முடியும்.

ஆங்கில மருந்துகள் பலவற்றால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளை நீக்குதற்குச் சித்த மருந்துகளால் பரிகாரங்காணவும் முடியும். சித்த மருந்துகள் தொடர்பான ஆய்வுகளைத் துரிதப்படுத்த முடியும். மூலிகைகளிலிருந்து புதிய மருந்துகளைக் கண்டறியவும் முடியும்.

இவையெல்லாம் இருபத்தோராம் நூற்றாண்டில் கை கூடுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

10. நிர்வாகக் கட்டமைப்பு

சித்தமருத்துவ நிர்வாகக் கட்டமைப்பு பற்றி எழுத முற்படின் இந்நூல் மிகவும் நீண்டதாகிவிடும். அதுமட்டுமன்றி 'ஆயுர்வேத' என்பதனுள் அடக்கப்பட்டுள்ள சித்தமருத்துவ நிர்வாகக் கட்டமைப்புப் பற்றி விளங்கிக்கொள்வதும் சிக்கலான ஒருவிடயமாகும். எனவே, அதுபற்றி சந்தர்ப்பம் கிடைக்கும்போது தனிக்கட்டுரையாக எழுத எண்ணியுள்ளோம். இந்நூலைப் பொறுத்தவரையில் சித்தமருத்துவ நிர்வாகக் கட்டமைப்புப் பற்றிய ஒரு மேலோட்டமான விளக்கத்தை மட்டுமே எடுத்துக்கூற விரும்புகிறோம்.

இருபதாம்நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே இலங்கை அரசாங்கமானது சுதேசவைத்தியத்துறையை அபிவிருத்தி செய்வதில் அதிக ஆர்வம் காட்டிவந்துள்ளது. குறிப்பாக இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் யாவும் இவ்விடயத்தில் விசேட கவனம் செலுத்தி வந்துள்ளன. 1977 ஆம் ஆண்டிற்குப் பின்னர் சுதேச வைத்தியத்துறைக்கு என்று தனியான ஓர் அமைச்சும் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வமைச்சின் கீழ் ஆயுர்வேதத் திணைக்களம் செயற்படுகின்றது. ஆயுர்வேத திணைக்களமானது சித்த, ஆயுர்வேத, யுனானி மருத்துவங்களையும் மற்றும் பாரம்பரிய மருத்துவ முறைகளையும் தனது கட்டுப்பாட்டின்கீழ் செயற்பட வைக்கிறது. அதன் தலைவராக ஆயுர்வேத ஆணையாளர் இருப்பார். ஆயுர்வேத ஆணையாளருக்கு அடுத்தபடியாக ஆயுர்வேத உதவிஆணையாளர் இடம்பெறுகிறார். எனினும் சித்த, ஆயுர்வேத, யுனானி மருத்துவங்களுக்கென்று தனித்தனியாக ஆணையாளர்களோ, அன்றி உதவி ஆணையாளர்களோ ஆயுர்வேதத்திணைக்கள மட்டத்தில் இல்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆயுர்வேத ஆணையாளரின் அதிகாரத்தின்கீழ் ஆயுர்வேத வைத்தியசாலை, ஆயுர்வேதக் கல்வி மற்றும் வைத்தியசாலைப் பரிபாலன சபை, ஆயுர்வேத ஆராய்ச்சிக் குழு, Formulary Committee முதலியன செயற்படுகின்றன. இவற்றில் சித்தமருத்துவத்துக்கென்று பிரதிநிதி ஒருவரும் இடம்பெறுவர்.

கைதடி சித்த போதனாவைத்தியசாலையானது ஆயுர்வேதத் திணைக்களத்தின் (அதாவது மத்திய அரசாங்கத்தின்) நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் நிர்வகிக்கப்படுகின்றது. இவ்வைத்தியசாலையின் தலைமை அதிகாரியாக வைத்திய அத்தியட்சகர் ஒருவர் செயற்படுவார்.

அதேவேளை வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள சித்தமருத்துவ சிகிச்சை நிலையங்கள் ஆரம்பத்தில் அந்தந்த மாகாண அரசாங்க அதிபர்களினதும், உதவி அரசாங்க அதிபர்களினதும் (பிரதேச செயலர்கள்) உதவியுடன் ஆயுர்வேதத் திணைக்களத்தினால் நிர்வாகிக்கப்பட்டுவந்தன. வடக்குக் கிழக்கு மாகாண சபை அமைக்கப்பட்ட பின்னர் 1990 ஆம் ஆண்டில் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு என்று சுதேச மருத்துவத்துறைப் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் வடக்குக்கிழக்கு சித்த வைத்திய சிகிச்சை நிலையங்கள் யாவும் அவரின் அதிகாரவரம்புக்குட்படுத்தப்பட்டு ஆயுர்வேதத் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

யாழ் பல்கலைக்கழக சித்தமருத்துவக் கல்விப் பிரிவானது 1984 ஆம் ஆண்டிலிருந்து பல்கலைக்கழக கலைப்பீடத்தின்கீழ் செயற்பட்டு, தற்போது துணைவேந்தரின் நேரடி நிர்வாகத்தின்கீழ் தனி அலகாகச் செயற்பட்டு வருகின்றது. பல்கலைக்கழகமானது உயர்கல்வி அமைச்சின் அதிகாரத்தின் கீழ் செயற்படுகின்றது.

எனவே, சித்தமருத்துவ வளர்ச்சியில் மத்திய, மாகாண அரசுகளின் பங்களிப்பு முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

சுதேச வைத்திய அபிவிருத்தியில் பதவியிலிருந்த அரசாங்கம் ஒவ்வொன்றும் பல்வேறு ஊக்குவிப்பு நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளன. அவற்றுட்பல ஏற்கனவே உரிய இடங்களில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அவைதவிர, சுதேச வைத்தியர்களின் தரத்தை உயர்த்துவதற்காகவும் சுதேச வைத்தியத்தைப் பரப்புவதற்காகவும் எடுக்கப்பட்ட சில முயற்சிகள் வருமாறு:

1. பாடசாலை மட்டங்களில் சுதேச மருத்துவம் சம்பந்தமான கருத்தரங்குகளை ஊக்குவித்தல்.

2. இலைக்கஞ்சி முதலான போசாக்குணவுகளை அறிமுகம் செய்து வைத்தல்.

3. அரசாங்க சுதேச வைத்திய சிகிச்சை நிலையங்கள் தோறும் மூலிகை வளர்ப்பு, மருந்து தயாரிப்பு என்பவற்றை ஊக்குவித்தல்.

4. அரசாங்க சேவையிலுள்ள சுதேச வைத்தியர்களை பொது, சிறப்பு, ஆராய்ச்சி வைத்திய உத்தியோகத்தர் எனத் தரம்பிரிக்க முற்பட்டுள்ளமை.

5. அரசாங்க சேவையிலுள்ள சுதேச வைத்தியர்களுக்குப் பட்ட மேற்படிப்பு அவசியம் என ஊக்குவித்தல்.

6. புத்தாக்கங்களை ஊக்குவித்தல்.

7. பரம்பரை வைத்தியர்களின் அறிவை மேம்படுத்துமுகமாக பயிற்சிக் கருத்தரங்குகளை நடாத்துதல்.

8. ஆயுர்வேத சுகாதார வைத்திய அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளமை. (எனினும், துரதிர்ஷ்டவசமாக வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கென சித்த வைத்திய சுகாதார வைத்திய அதிகாரிகள் எவரும் நியமிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது)

9. தேசிய சுதேச வைத்திய நிறுவகம் ஒன்றை 1996 இல் அரசாங்கம் நிறுவியுள்ளமை.

இவைபோன்ற அரசாங்கத்தின் செயற்றிட்டங்கள் வரவேற்கக் கூடியன என்ற போதிலும் அரசாங்க சுற்றுநிருபங்களில் பெரும்பாலானவை சிங்கள மொழியில் அனுப்பப்படுவதாலும், வடக்குக் கிழக்குப் பிரதேச யுத்தச் சூழ்நிலை காரணமாக இச்சுற்று நிருபங்களிற் பல காலந்தாழ்த்தியே சித்தமருத்துவர்களுக்குக் கிடைக்கநேர்வதாலும் அவற்றினால் சித்தமருத்துவர்களுக்கு அதிக பயன் கிட்டவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

முடிவுரை

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பரம்பரை வைத்தியர்களின் கரங்களில் தங்கியிருந்த சித்தமருத்துவம் அந்நூற்றாண்டின் இறுதியில் பட்டதாரிகளின் கரங்களுக்கு மாறியுள்ளது. இருபதாம் நூற்றண்டின் ஆரம்பகாலங்களில் சுதேச மருத்துவர்களுக்கு அரசாங்க ஆதரவு போதியளவில் இருக்கவில்லை. சித்தமருத்துவ கல்விக்கூடங்கள் இருக்கவில்லை. ஒவ்வொரு வைத்தியரும் குருமூலமாகவும், ஏட்டுச்சுவடிகளின் துணையுடனும் தான் தமது கல்வியை மேற்கொள்ள வேண்டி இருந்தது. அவர்களுக்கு நவீன விஞ்ஞான மருத்துவ சம்பந்தமான கல்வியறிவு அதிகம் இருக்கவில்லை. ஒவ்வொரு வைத்தியரும் தமக்குத்தேவையான மருந்துகளைத் தாமேதான் தயாரிக்க வேண்டியிருந்தது. அப்படியிருந்தும் கூட கணிசமான வைத்தியர்கள் ஆங்கில வைத்தியர்களுக்குச் சமமாக, இன்னும் சொல்லப் போனால் சிலர் ஆங்கில வைத்தியர்களிலும் மேம்பட்டு பல்வேறு வியாதிகளையும் சிகிச்சையளித்துக் குணப்படுத்தியுள்ளனர். சிலர் ஆங்கில வைத்தியர்களால் குணப்படுத்த முடியாது விட்ட வியாதிகளைக்கூட குணபடுத்தி சாதனைபுரிந்துள்ளனர். (அதனாற்றான் தற்காலத்தில் கூட ஆங்கில மருத்துவர்களால் குணப்படுத்த முடியாத அல்லது கைவிடப்பட்ட நோயாளிகள் அதற்கு சித்தமருத்துவத்தில் பரிகாரம் இருக்கும் என்ற நம்பிக்கையுடன் சித்தமருத்துவர்களை நாடுவதைக் காண முடிகிறது)

பட்டதாரி மருத்துவர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு அரசாங்க ஆதரவு அதிகளவில் உள்ளது. அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டங்களுக்கு அமைய அவர்கள் கல்வி பயின்று பல்கலைக் கழகப் பட்டம் பெற்றவர்கள், ஏட்டுச்சுவடிகளுக்குப் பதிலாக அச்சிடப்பட்ட நூல்களை பயிலும் சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைத்துள்ளது. நவீன மருத்துவ சம்பந்தமான கல்வியறிவும்

அவர்களுக்குண்டு. நவீனமருத்துவ உபகரணங்களைப் பயன்படுத்துவதிலும் அவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர் அதேவேளை சித்த மருந்துகள் போதியளவில் புழக்கத்தில் இல்லாதகாரணத்தால் ஒரு வித தேக்கநிலையும் உள்ளது. காலத்திற்கேற்ப Literary research, Clinical research, Drug research என்பவற்றில் ஈடுபட்டு சித்த மருத்துவ வளர்ச்சியை அவர்கள் தொடர வேண்டியுள்ளது.

அதியுயர் சித்தமருத்துவ கல்வி ஸ்தாபனமாக சித்த மருத்துவத்துறை யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றுள்ளது. அதியுயர் சித்தமருத்துவ சிகிச்சை நிலையமாக கைதடி சித்த போதனாவைத்தியசாலை அமைந்துள்ளது. இவை இரண்டும் ஒருமித்து சித்தமருத்துவ ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். சிதறிக்கிடக்கும் சித்தமருத்துவர்களை ஒருங்கிணைத்து அபிவிருத்திக்கு வழிகாண வேண்டும். சித்தமருத்துவ உயர் கல்விக்கு (Post graduate Studies) வழிவகுக்க வேண்டும். தமிழகத்திலுள்ள சித்தமருத்துவக் கல்வி நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி கல்விப்பரிவர்த்தனைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். வடக்குக் கிழக்கில் சித்த வைத்தியசாலைகள் பல தோற்றம் பெறச் செய்தல் வேண்டும். சித்தமருந்தகம் ஒன்றை அரசாங்க ஆதரவுடன் அமைக்கப் பாடுபடல் வேண்டும். தேவையான சித்த மருந்துகளைத் தமிழ்நாட்டிலிருந்து இறக்குமதி செய்திட முயற்சிக்க வேண்டும். சித்தமருந்தாளர் பயிற்சி நெறியினை ஆரம்பிக்க வழிசமைக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக தேசிய சித்தமருத்துவ நிறுவகம் ஒன்றை அமைப்பதற்கு வித்திடப்படல் வேண்டும். இவையனைத்தையும் கவனத்திற் கொண்டு செயற்பட்டால் தான் இருபத்தொராம் நூற்றாண்டில் சித்த மருத்துவத்துக்கு பிரகாசமான எதிர்காலம் அமையும்.

உசாத்துணை நூல்கள்

1. அங்காதிபாதம் - பரராசசேகரத்தைச் சார்ந்தது
— ஐ. பொன்னையா, ஏழாலை திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலை -1936

2. அபிதான சிந்தாமணி - ஆ. சிங்காரவேலு முதலியார்
— Asian Educational Services, New Delhi - 1996

3. இருபாலைச் செட்டியார் வைத்திய விளக்கம்
— ஐ. பொன்னையா, (பதிப்பாசிரியர்) யாழ்ப்பாணம் சைவப் பிரகாச யந்திரசாலை - 1927

4. ஈழத்துச் சித்தமருத்துவ நூல்கள் ஓர் அறிமுகம்
— சே. சிவசண்முகராஜா, சித்தமருத்துவ வளர்ச்சிக் கழக வெளியீடு - 1993

5. கல்லடிவேலன் நகைச்சுவைக் கதைகள்
— விஜஜேந்திரன், நயினார் பிரசுரம், மாவிட்டபுரம் - 1975

6. கிறிஸ்தவ பண்டிதர் வைத்திய நூற்றிரட்டு (பதிப்பு)
— அச்சுவேலி ஞானப்பிரகாச யந்திரசாலை.

7. சித்தமருத்துவம் - சிறப்பு
— டாக்டர் ஆர். தியாகராஜன், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககம் சென்னை - 106, 1995

8. சித்த மருத்துவாங்கச் சுருக்கம்
— க. சு. உத்தமராயன், தமிழ்நாடு அரசு சித்த அறிவியல் மேம்பாட்டுக்குழு வெளியீடு - 1983

9. செகராசசேகரம்
— ச. தம்பிமுத்துப்பிள்ளை (பதிப்பாசிரியர்), அச்சுவேலி ஞானப்பிரகாச யந்திரசாலை - 1932

10. சொக்கநாதர் தன்வந்திரியம்
— ஐ. பொன்னையா (பதிப்பாசிரியர்), ஏழாலை திருஞான சம்பந்தர் அச்சுயந்திரசாலை - 1933

11. நயனவிதி குணமும் மருந்தும்
— அச்சுவேலி ஞானப்பிரகாச யந்திரசாலை - 1904

12. நோயில்லா நெறி
— டாக்டர் கோ. துரைராசன், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்கம், சென்னை - 106, 1993

13. பண்டைய மருத்துவமும் பயன்தரு மூலிகைகளும்
— பா. சிவகடாட்சம் பேராதனை - 1979

14. பதார்த்தகுணபாடம்
— மு. சௌரிராஜன் தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரஸ்வதி மஹால் நூலகம், தஞ்சாவூர் - 1993

15. பரராசசேகரம் (ஏழு பாகங்கள்)
— ஐ. பொன்னையா (பதிப்பாசிரியர்), ஏழாலை திருஞான சம்பந்தர் அச்சுயந்திரசாலை 1928 - 36

16. பாபாசி போகர்கண்ட யோகம்
— சா. அ. அ. ராமய்யா (பதிப்பாசிரியர்), 1982

17. பால வைத்தியத்திரட்டு
— க. வே. கந்தையாபிள்ளை (தொகுப்பு) அக்ஷயவருஷம்

18. பால வைத்தியம்
— C. W. சுப்பிரமணியபிள்ளை, அச்சுவேலி ஞானப்பிரகாச யந்திரசாலை - 1931

19. மருத்துவத்தமிழ் முன்னோடி டாக்டர் கிறீன்
— அம்பி, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட். சென்னை - 18

20. மருத்துவத் தாவரவியல்
— எஸ். சோமசுந்தரம், இளங்கோவன் பதிப்பகம், பாளையங்கோட்டை 02, - 1997

21. யாழ்ப்பாண சமூகத்தை விளங்கிக்கொள்ளல்
— கா. சிவத்தம்பி, தர்ஷனா பிரசுரம் - 1993

22. யாழ்ப்பாணத்தரசர் வரலாறும் காலமும்
— பொ. ஜெகந்நாதன், யாழ். இலக்கியவட்டம் - 1987

23. யாழ்ப்பாண ராச்சியம்
— சி. க. சிற்றம்பலம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு - 1992

24. யாழ்ப்பாண வைபவமாலை
— குலசபாநாதன் (பதிப்பாசிரியர்), - 1949

கட்டுரைகள்

25. ஈழத்துத் தமிழ் மருத்துவநூல்கள் - ஓர் ஆய்வு
— இ. பாலசுந்தரம், சித்தமருத்துவம் - 1986 யாழ். பல்கலைக் கழக சித்த மருத்துவ மாணவர் மன்ற வெளியீடு

26. வடக்குக் கிழக்கில் சித்த மருந்துகளின் பாவனையை அதிகரிக்கச் செய்தல்
— சே. சிவசண்முகராஜா, சித்தமருத்துவம் 90-91 சித்த மருத்துவ மாணவர் மன்ற வெளியீடு

27. வளர்ச்சிப் பாதையில் சித்தமருத்துவத்துறை
— சே. சிவசண்முகராஜா, சித்தமருத்துவம் - 1985 சித்த மருத்துவ மாணவர் மன்ற வெளியீடு

28. காக்கும் கரங்கள்
— சில்லாலை இன்னாசித்தம்பி பரம்பரை ஞாபகார்த்த மலர்

29. வைத்தியன் மாத சஞ்சிகை (1949 — 52)
— அகில இலங்கைச் சித்த ஆயுள்வேதச் சங்க வெளியீடு

30. The Changing Role of the Ayurvedic physician in the National Health Care System
— P. B. Wanninayaka-Kalamana, January - march 1982, Publication Sri Lanka Institute of Development Administration.

31. A History of Medicine in Sri Lanka From earliest times to 1948.
— C. G. Uragoda A Centenary publication, Sri Lanka Medical Association Colombo — 1987.

32. Ayurveda in Sri Lanka
— P. B. Wanni nayaka, Ministry of Health, Sri Lanka, 1982.

33. Dr. Chapman Vaithilingam
— A. Sinnathamby, Daniel Chapman Vaithilingam Commemoration Committee, 1982.

34. Studies in Hinduism
— K. Navaratnam, 1963

35. The Ramayana
— Lady Ramanathan, Printed and Published by W. E. Bastian Co. Colombo - 1931

ஆசிரியரின் பிறநூல்கள்

★ ஈழத்துச் சித்த மருத்துவ நூல்கள் ஓர் அறிமுகம்
(சாகித்திய மண்டலப் பரிசு, கொழும்புத் தமிழ்ச் சங்கப் பரிசு பெற்ற நூல்)

★ சுதேச மருத்துவ மூலிகைக் கையகராதி
(இலங்கை அரச கரும மொழித் திணைக்களப் பரிசு பெற்ற நூல்)

★ உளநெருக்கீடுகளும் மனநலனும்

★ கட்டுவைத்தியம்

★ இருபதாம் நூற்றாண்டில் ஈழத்துச் சித்த மருத்துவம்

வெளிவரவுள்ள நூல்கள்

★ யாழ்ப்பாண மக்களின் சைவ உணவுப் பழக்க வழக்கங்களும் சித்த மருத்துவமும்

★ சித்த மருந்தியல்

★ Siddha System of Medicine in Sri Lanka

பாரதி பதிப்பகம்,
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல; 021 - 3081

நூலாசிரியரும் படைப்புகளும்.........

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழகத்தின் கீழ் பாளையங்கோட்டை அரசினர் சித்தமருத்துவக் கல்லூரியில் குழந்தை மருத்துவத்தில் M.D பட்டம் பெற்றுள்ள நூலாசிரியர் ஈழத்துச் சித்தம்ருத்துவ மறுமலர்ச்சியையே தனது இலட்சியமாக கொண்டவர். பல்கலைக்கழகத்தில் பயின்ற போதே சித்தமருத்துவம் என்னும் மாணவர் சஞ்சிகையை உருவாக்கியதில் பெரும்பங்கு வகித்ததுடன் அதன் முதல் மலராசிரியராகவும் பணியாற்றியவர். இவரது முதல் நூலான "ஈழத்துச் சித்தமருத்துவ நூல்கள் ஓர் அறிமுகம்" இலங்கை அரசின் சாகித்திய மண்டலப்பரிசு, கொழும்பு தமிழ்சங்கப்பரிசு என்பன வழங்கி கௌரவிக்கப்பட்டது.

"சுதேச மருத்துவ மூலிகைக் கையகராதி" என்னும் நூல் இலங்கை அரச கரும மொழித்திணைக்களத்தினால் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது. மிக்க இளம்வயதில் தரமான ஓர் அகராதியை தமிழில் தந்துள்ளார் என்று அரச மொழித்திணைக்கள ஆணையாளரினால் இந்நூல் ஆசிரியர் பாராட்டப் பெற்றுள்ளார். ஓர் அகராதிக்குரிய அத்தனை அம்சங்களும் இந்நூலில் காணப்படுகின்றன என்று தமிழ்நாட்டு சித்தமருத்துவர்கள், ஆய்வாளர்களினால் இந்நூல் பாரட்டப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

காலத்தின் தேவை கருதி வெளிவந்தநூல் என்று "உளநெருக்கீடுகளும் மனநலனும்" என்னும் நூல் தமிழ்மக்களினால் வரவேற்கப்பட்டது. ஏட்டுச்சுவடிகளிலுள்ள மருத்துவ முறைகள் அச்சுவாகனமேறவேண்டும் என்ற நோக்கில் "கட்டு வைத்தியம்" என்னும் நூல் நூலாசிரியரால் பதிப்பிக்கப்பட்டது.

கடந்த நூற்றாண்டின் சித்தமருத்துவ வளர்ச்சி பற்றியும், அதில் ஏற்பட்ட தேக்கநிலைகளை இனம் கண்டு சீர்செய்யும் நோக்குடனும் "இருபதாம் நூற்றாண்டில் ஈழத்துச் சித்தமருத்துவம" என்னும் இந்நூல் மிகுந்த சிரமத்தின் மத்தியிலும் தற்போது வெளிவருகிறது.